

## லெவ் கஸ்ஸீல்

# வீரனின் தம்பி

மொழிபெயர்ப்பாளர்:
சு.ந. சொக்கலிங்கம்

**கனவுகள்**
அற்புதமானவை.
ஆனால் ஒவ்வொரு கனவும்
**உண்மைக்குப்**
பொருந்த வேண்டும்.
அப்போது பிறவெல்லாம்
**ஒத்து இருக்கும்**



# லெவ் கஸ்ஸீல்

# வீரனின் தம்பி

K. RAVICHANDRAN
AMBATTUR
CHENNAI.

# லெவ் கஸ்ஸீல்

# வீரன் தம்பீ

மொழிபெயர்ப்பாளர்:

**சு.ந. சொக்கலிங்கம்**

பதிப்பாசிரியர்:

**பூ. சோமசுந்தரம்**

பூவிம

**வீரனின் தம்பி**
லெவ் கஸ்ஸீல்
மொழிபெயர்ப்பாளர்: சு.ந. சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்: பூ. சோமசுந்தரம்
முதல் பதிப்பு: டிசம்பர் 2013
நன்றி: முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ
பக்கங்கள்: 96
அட்டை, நூல் வடிவமைப்பு: ஜீவமணி
அச்சாக்கம்: காணபதி பிராசஸ்
சென்னை 600 005.

**Veeranin thambi**
Lev Kasseel
Translation by S.N Sokkalingam
Published by: P. Somasundaram
First Edition: December 2013
Pages: 96
Printed at Ganapathi Process, Chennai 600 005.
Cover and Book Design: Jeevamani

வெளியீடு: **புலம்**
332/216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி: 98406 03499
மின்னஞ்சல்: pulam2008@gmail.com

Published by **Pulam**
332/216,Triplicane High Road,
Triplicane,Chennai 600 005
Mobile: 98406 03499
Email: pulam2008@gmail.com

**விலை: ₹ 70**

**நம் வாழ்க்கையில் கனவுகள் போற்றப்பட வேண்டியவை. அவை மனிதனுக்கு வாழ்க்கையின் பரந்த பாதைகளில் வழிகாட்டுகின்றன. ஆனால் வாழ்வில் கனவு கண்டுகொண்டிருக்கும் ஒருவரைப் பற்றிச் சிந்திக்க எதுவும் இல்லை.**

போர்ச் சூழலுக்குப் பின் மறுசீரமைக்கப்பட வேண்டிய சோவியத், தன் சமூகக் கட்டுமானங்களில் அறிவுத் துறைக்கான உள்ளீடுகளாக, மனித ஆற்றலையும் திறமையையும் விழுமியங்களையும் மறு உருவாக்கம் செய்யக்கூடிய எழுத்துக்களையும் கொண்டிருந்தது.

குடும்ப அணுக்கத்தை உணர முடியாமல் வாழ்வைக் கடக்கும்படியான தருணங்களைத் தொடர்ந்து பெற்றுவிட்ட சமூகம், மீண்டும் தன்னைக் கட்டியெழுப்பிக்கொள்ள, பொறுப்புணர்வோடு தேச அக்கறையும் சேர்ந்த, பால்யத்திலும் மிகுபக்குவம் கொண்ட இளையோரையே நம்பியிருக்கிறது.

சோவியத் இலக்கிய வெளியில், கடமை உணர்வும் மனிதநேயமும் உயர் கனவெனச் சில இலட்சியங்களும் கொண்ட மனங்களை நம்மால் கண்டுகொள்ள முடிகிறது. வீரனின் தம்பியும் இத்தகு பண்புகளைத் தனக்குள் நிரம்பப் பெற்றிருக்கும் ஒரு படைப்புதான்.

மகிழ்வும் வெகுளித்தனமும் விளையாட்டுமாகக் கவலைகளில்லாது செழிக்க வேண்டிய சிறுபிராயம் வாய்க்காதபோது, தனைத் தானே உயர்த்திக்கொள்கிற உபாயத்தைக் கண்டுகொள்வதும் அதற்காகத் தான் பயன்படுத்திக்கொண்ட மாபெரும் வீரனின் பெயருக்கு மதிப்புக்குறைவு ஏற்படுத்திவிடாது, தன் திறமைகளையும் கல்வித் தகுதியையும் உயர்த்திக்கொண்டு, கற்பித அண்ணனின் விமானத் துறையின் சாகசங்களையும் அத்துறைசார் நுட்பங்களையும் தெரிந்துகொள்வதுமாக வளர்த்தெடுக்கப்பட்ட சிறுவனின் பாத்திரம், கனவுகளை நோக்கிய தன் பயணத்தை, இலட்சியங்களால் நிரப்பிக்கொள்கிற முன்மாதிரி இளைஞனின் சாயல்களுடையது.

தனியொருவனின் தூலமான முன்னெடுப்புகளுக்கும் செயல்பாடுகளுக்கும் எதிர்கால நம்பிக்கைகளுக்கும் உறுதுணையாய் நிற்கும் இலட்சியவாதம் நிறைந்த சமூகத்தின் பிரதிநிதிகள்தான் சிறுவனின் அண்ணனும் நண்பர்களும். இவர்கள் சிறுவர்களுக்கு மட்டுமேயான செய்திகளைக் கொண்டிருப்பவர்களல்ல...

வீரனின் தம்பியை வெளிக்கொண்டு வர உறுதுணையாய் இருந்த தோழர்கள் பாலச்சந்திரன், கோவிந்தசாமி, வசுமித்ர ஆகியோருக்கு மிக்க நன்றி. இந்நூலுக்குச் சிறப்புற அட்டை மற்றும் வடிவமைப்புச் செய்த தோழர் ஜீவமணிக்கும் மெய்ப்பாக்கம் செய்து இம்முயற்சிக்கு உற்சாகமளித்த தோழர் ஜீவசுந்தரிக்கும் மனமார்ந்த நன்றி.

தோழமையுடன்

**புலம்**



## வகுப்பில் புதிய பையன்

புதிய பையனிடம் குறிப்பிடத்தக்க சிறப்பு எதுவும் இல்லை. எல்லாப் பையன்களையும் போலவே இருந்தான். கவர்ச்சியற்ற தோற்றம், ஒட்டக் கத்தரித்த தலைமயிர், உயர்ந்த நெற்றி, அவன் சாதுவாகத் தெரியவில்லை; யாரையும் நேராக உறுத்துப் பார்ப்பான். அந்தப் பார்வையை எதிர்த்து நோக்க முடியாது - கண்கொட்ட வேண்டி வரும்.

குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்த மற்ற சிறுவர்களுடன் அவன் பள்ளிக்கு வந்திருந்தான். ஆனால் அவன் அணிந்திருந்தது தனிவகையான உடை காக்கிச் சொக்காய் போட்டிருந்தான். அது வேறு யாருக்கோ தைக்கப்பட்டது எனத் தெளிவாகத் தெரிந்தது. சட்டைக்கைகள் உள் மடித்துத் தைக்கப்பட்டிருந்தன. குச்சியில் கோத்த வளையம் போலக் காலர் கழுத்தைச் சுற்றித் தொளதொளவென்று தொங்கிற்று. அதன்மேல், இளநீல விமானப்படைச் சின்னங்கள் காணப்பட்டன.

“ஆளைப் பாரப்பா, விமானி வேஷத்தில், ஹூம்! சின்னங்களை ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறான்!” என்று கிளுகிளுத்தான் கொழுத்த முண்டக்கண்ணன் பேத்யா ப்ளீன்துஸவ் - வகுப்பில் வெறுமே ப்ளீன்துஸ் என அழைக்கப்பட்டவன்.

எல்லோரும் கெக்கலித்தனர்.

புதியவன் கொழுத்த பையனை உற்று நோக்கி, திடீரென்று கன்னங்களைக் கேலியாக உப்பிக்கொண்டான். ப்ளீன்துஸ் இமைகளைக் கொட்டினான். நெடுமூச்சிழுத்து வாயை அகலத்திறந்தான். ஆனால், மறுகணமே திணறி அதை மூடிக்கொண்டான்.

"செம்மையாக வாங்கிக் கட்டிக்கொண்டாயா?" என்று சொல்லிவிட்டுப் புதிய பையன் கடைசி வரிசையிலிருந்த வெற்றிடத்தில், குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்த வாய்மூடிச் சிறுவன் கோல்யா ஸ்வான்த்ஸவ் அருகே உட்கார்ந்துகொண்டான்.

அமைதியான கோல்யா திடீரென்று பெருமையடித்துக் கொண்டு ஏதோ பிரமாதமான விஷயத்தைத் தெரிந்துகொண்டவன்போல மற்றவர்களைப் பார்த்தான்...

மணி அடித்தது. ஆனால், வகுப்பில் ஆரவாரம் அடங்கவில்லை. கூச்சலிலும் சந்தடியிலும் சாய்மேசைகள் கிடுகிடுத்தன. எல்லோரும் புதிய பையனை அசட்டை செய்வதுபோலப் பாசாங்கு செய்தனர். அவனைக் கவனிக்காததுபோல் இருந்தனர். தாங்கள் எத்தகையவர்கள் என்பதை அவனுக்குக் காட்ட எல்லோருக்கும் ஆசையாய் இருந்தது. பெண்கள் உரக்கக் கீச்சிட்டுக்கொண்டே சாய்மேசைகளைச் சுற்றி ஓடினர். பையன்களோ கரும்பலகையின் பக்கத்தில் மல்லுக்கட்டியவாறு அபரிமித உற்சாகத்துடன் உண்மையாகவே ஒருவரை ஒருவர் முட்டியால் குத்திக்கொண்டிருந்தனர். எதற்கும் துணிந்தவர்களின் வகுப்பில் தான் இருந்ததைப் பிடிவாதமுள்ள புதியவன் உடனே தெரிந்துகொள்ள வேண்டுமே...

அப்போது, கதவு தடாலெனத் திறக்கப்பட்டது. கறுத்த தலைமயிருடைய உயரமான பையன் ஒருவன் இடுப்புவாரால் காலில் அடித்துக்கொண்டு வகுப்புக்குள் குதித்து ஓடிவந்தான். வண்ணம் தீட்டுவதற்கான இரண்டு இறகுத் தூரிகைகள் அவனுடைய மூக்குக்கும் விரிந்த மேலுதட்டுக்கும் இடையே இடுக்கப்பட்டிருந்தன. அவை மீசைபோலத் துருத்திக்கொண்டிருந்தன. தான் குதிரைச் சவாரி செய்வது போலவும் தன் மேலங்கி காற்றில் பறப்பது போலவும் காட்டுவதற்காகத் தோள்களைப் பின்பக்கமாகச் சாய்த்துக் கொண்டிருந்தான்.

"குதிரைகளின் மீது உடனே ஏறுங்கள்!" என்று கூச்சலிட்டான். எல்லோரும் தம் தம் இடங்களுக்கு விரைந்து ஓடினர்.

வகுப்பறையில் ஓர் ஆசிரியை நுழைந்தாள். பின்கொண்டை முடித்திருந்த அவள் கூந்தல் நரைத்திருந்தது. எனினும், அவள் நடை இளம்பெண்ணுடையது போல இருந்தது.

சிறுவர்கள் எல்லோரும் குதித்தெழுந்தனர். அவர்கள் மகிழ்ச்சியோடும் விரைவுடனும் ஆசிரியையை வரவேற்ற விதம்



அவள் கண்டிப்பாக இருந்தாலும் அன்பிற்குரியவள் என்பதைக் காட்டியது.

"வணக்கம்!" என்றாள். எதிர்பாராத விதமாக அவள் குரலில் தொனித்த இளமை காரணமாக புதிய பையன் அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"வணக்கம், யெவ்தொக்கீயா விளாசியெவ்னா! நம் வகுப்பில் புதிய பையன் வந்திருக்கிறான்!" என்று எல்லோரும் ஒருமித்து ஆரவாரித்தனர்.

"எனக்குத் தெரியும். உட்காருங்கள்" என்று அவள் பதில் அளித்தாள். மேசையின்மேல் கைகளை வைத்துக்கொண்டு கொண்டைச் சுமை பின்னுக்கு இழுப்பதுபோலத் தலையைப் பின்னே சாய்த்தவாறு நின்று வகுப்பைச் சுற்றிக் கண்ணோட்டினாள்.

"உட்காருங்கள், உட்காருங்கள்" என்று மறுபடியும் சொன்னாள்.

எல்லோரும் அமர்ந்துகொண்டனர்.

புதிய பையனுடைய பெயரை வகுப்புப் பதிவுப் புத்தகத்தில் குறித்துக்கொள்வதற்காக யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா கேட்க, புதிய பையன் பின்வரிசையில் எழுந்து நின்று பதிலளித்தவுடனே வகுப்பு முழுவதும் மீண்டும் கலகலத்தது...

"செரிமிஷ்" என்று மெதுவாக, ஆனால் தெளிவாகச் சொன்னான். "கென்னாதிய் செரிமிஷ்" எனத் திரும்பவும் கூறினான்.

குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றிப் பெருமிதத்துடன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருந்தனர். மற்றவர்களோ பின்வரிசையை நோக்கித் திரும்பினார்கள்.

"செரிமிஷ்?!"

"அடேயப்பா. எவ்வளவு புகழ்பெற்ற பெயர் உனக்கு! அவருக்கு நீ ஏதாவது உறவா?" என்று விட்டத்தை விரலால் சுட்டி வினவினாள் ஆசிரியை.

"அவர் என் அண்ணன்" என்று குனிந்த தலையுடன் பையன் சொன்னான். வெள்ளிய குச்சுமயிர்களுக்கு அடியே அவன் உச்சந்தலைவரை குப்பென்று சிவந்து போயிற்று.

“அப்படியா? மெய்யாகவேதானா?... சொந்த அண்ணன்! அற்புதம்! பிரமாதம்! இந்த மாதிரி அண்ணனைப் பற்றி நீ பெருமைப்படலாம். நீ மட்டுமா, நாம் எல்லோருமே பெருமை கொள்ளலாம்... சிறுவர்களே, நீங்கள் முன்னிலும் ஊக்கமாகப் படிக்க வேண்டும். இல்லாவிட்டால், வானில் தமையன் செய்வது போல, நம் செரிமிஷ் படிப்பில் விரைவாக உயரே எவ்வினால் நீங்கள் இவனை எட்டிப் பிடிக்கவே முடியாது. இருக்கட்டும். சத்தத்தை நிறுத்துங்கள். உஷ்! ப்ளீன்துஸவ், உட்கார்! உன் இடம் எங்கே? கடைசி வரைக்கும் நீ எப்படிச் சென்றாய்? இது என்ன புதுக் குடியேற்றம்?”

சிவந்த கன்னக் குண்டன் ப்ளீன்துஸ், புதியவனிடம் அவன் கீர்த்தி வாய்ந்த அண்ணனைப் பற்றி விரிவாகக் கேட்டு அறியும் ஆவலை அடக்க முடியாமல் செரிமிஷ் அருகே கமுக்கமாக உட்கார நிச்சயித்து ஒடிக்கொண்டிருந்தபோது ஆசிரியை இம்மாதிரி அவனை பிடித்துக்கொண்டாள்.

“இது முதல் நான் இங்கேயே உட்கார்ந்துகொள்கிறேன், யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா!” என்று கத்தினான் ப்ளீன்துஸ்.

“ஒரு பெஞ்சில் மூன்று பேர் எதற்காக உட்கார வேண்டும்?”

“ஏனென்றால்... ஏனென்றால் புதிய பையன் இங்கு இடம் பிடித்துக்கொண்டான்... போன வாரமே நான் பின்வரிசைக்குப் போக நினைத்திருந்தேன். எனக்குப் பரவாயில்லை, யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா, அப்படி ஒன்றும் நெருக்கமாய் இல்லை. நாங்கள் எப்படியோ சமாளித்துக் கொள்கிறோம்...”

“ஊம் நட, நட உன் இடத்துக்கு! ப்ளீன்துஸவ், உன்னைத்தான் சொல்கிறேன். இடத்திற்குத் திரும்பு சீக்கிரம்! கோல்யாவை அவனிடத்தில் இருந்து எதற்காகத் தள்ளிக்கொண்டிருக்கிறாய்? நீதான் அதிகப்படி ஆள்?” என்று அதட்டி மேசையைத் தட்டினாள் ஆசிரியை.

ப்ளீன்துஸ் வேண்டா வெறுப்போடு பின்வரிசையில் இருந்து எழுந்து, மெதுவாகத் தன்னிடத்திற்குப் போனான்.

“கலகக்காரர்கள் அடக்கப்பட்டனர்” என்று கருந்தலையன் உரக்கக் கிசுகிசுத்தான்.



ப்ளீன்துஸ் எரிச்சலுடன் தன் பெஞ்சில் தொப்பென்று உட்கார்ந்தான். வகுப்பு முழுவதிலும் சிரிப்பு குமிழியிட்டது.

“லுக்காஷின், நீ வாயைத் திறக்காமலிருந்தால் நன்றாயிருக்குமே” என்று ஆசிரியை கண்டிப்பாகச் சொன்னாள்.

மௌனம் நிலவியது. ஒரு நிமிடத்திற்குப் பின், பிடிவாதமுள்ள ப்ளீன்துஸ், கோல்யாவுக்குப் பின்வரும் குறிப்பைக் கொடுத்தனுப்பினான்:

“கோல்யா! நாம் இடங்களை மாற்றிக்கொள்வோம். நீ என் இடத்துக்கு வந்துவிடு, நான் உன் இடத்துக்கு வந்து விடுகிறேன்; நீ அதற்காக வருத்தப்படமாட்டாய், ஏனென்றால் உன் சாய்வு மேசை கிறீச்சிடுகிறது. பாடங்களின்போது நீ நகரக்கூட முடிவதில்லை. என் இடத்திலிருந்தோ உயரமான தண்ணீர்த் தேக்கக் கோபுரத்தைப் பார்க்க முடியும். சம்மதமா? ப்ளீன்துஸ்.”

ஆனால் பொதுவாக எதற்கும் உடன்படும் கோல்யா இந்தத் தடவை நாக்கைத் துருத்திக் கோரணி காட்ட மட்டுமே செய்தான்.

“சரி, சரி, நான் உனக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்” எனப் ப்ளீன்துஸ் பயமுறுத்தினான்.

அப்போதுதான், அவனைக் கரும்பலகைக்கு வருமாறு ஆசிரியை அழைத்தாள். சிடுசிடுப்புடன், முகஞ்சிவக்க எழுந்திருந்து, தளர்நடை போட்டுத் தேசப்படத்தின் பக்கம் சென்றான்.

இதெல்லாம் நடந்தபோது செரிமிஷ் சன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். அமைதியான நகரம் காட்சியளித்தது. வெளிறிய வடக்கு வானம். புதிதாக அறுவைசெய்யப்பட்ட மரச்சட்டங்கள். மாவட்ட சோவியத்தின் செங்கல் கட்டடம். அதன் முகப்பில் கொடி பறந்தது. அரசாங்கத் தலைவர்களின் உருவப்படங்கள் தொங்கின. தெருவின் ஓரங்களில் உயரமான பிர் மரங்கள் வளர்ந்திருந்தன. நகரம் பெரிது அல்ல; பக்கத்தில் ஒரு பெருங்காடு அடர்ந்திருந்தது.

நெடும் பைன்களின் பிரம்மாண்டமான பழுப்பு அடிமரங்கள் நீள் வண்டிகளில் ஏற்றிவரப்பட்டன. ஓட்டுவோன் இடத்திலிருந்து, கடைசிச் சக்கரம்வரையில் ஒரு மைல் நீளம் இருக்கும் போலத் தோன்றிற்று.

திடீரென்று சூரியனின் கதிரொளி புதுப் பையனின் கண்களில் பட்டது. அது சாய்வுமேசையின் மேல் ஏறிற்று, பிறகு சொக்காய் மேல் வழுகியது, அப்புறம் சுவர் மீது தாவிக் குதித்தது; பின்னர் வானவில் ஒளிப்புள்ளி அவன் உச்சந்தலையை வருடியது. ஒட்டக் கத்தரித்த பன்றி மயிரில் ஆரஞ்சு, சிவப்பு, பச்சை, ஊதா முதலிய நிறங்களைக் கொண்ட ஒளிக்கதிர்கள் அங்குமிங்குமாக ஓடியதை எல்லோரும் கண்டார்கள். பின்புறம் யாரோ மெதுவாகச் சிரித்தார்கள். புதிய பையன் திரும்பிப் பார்த்தவன் சட்டெனக் கண்களை இடுக்கிக்கொண்டான். ஒளிக்கதிர் அவனது விழிகளைக் கூசச் செய்தது. பிற்பாடு அது ஆடி, நெடுகச் சென்று முற்றிலும் மறைந்துவிட்டது. ஆயினும் சிறு மாணவி ஒருத்தியின் கைகளில் மின்னிய கண்ணாடியை விழிகளில் கதிரொளி சுருக்கென்று தாக்கியபோதே கென்னாதிய் கண்டுகொண்டான். உடனே அவள் கிண்டலோடு மூக்கைச் சுளித்துக் குச்சித் தோள்களைக் குறும்பாகக் குலுக்கி அப்பால் திரும்பிக்கொண்டாள். புதிய பையனைச் சீண்டியவள் அவள்தான். அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த உயரமான பெண் - வகுப்பின் சட்டாம்பிள்ளை - கண்டிக்கும் முறையில் தலை அசைத்தாள். ஆனாலும் அவளுக்குக்கூடச் சிரிப்பு தாங்க முடியவில்லை.

இந்த முதல் பாடத்தின்போது வகுப்பில் ஒழுங்கை நிலைநாட்டுவது கடினமாக இருந்தது. எல்லோரும் புதிய பையனைத் திரும்பித் திரும்பிக் கள்ளத்தனமாக நோக்கிக்கொண்டிருந்தனர். என்ன இருந்தாலும், அவன் கிளிமேன்திய் செரிமிஷின் தம்பி ஆயிற்றே! லேசுப்பட்ட விஷயமா அது? தோற்றத்தில் சர்வமட்டமான இந்தப் பையன் வீரனின் தம்பி என்பதை யார்தான் கற்பனை செய்து பார்த்திருக்க முடியும்?...

இதற்குள் யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா, ஆக்கங்கெட்ட ப்ளீன்துஸைக் கேள்வி கேட்கத் தொடங்கினாள்.

"நீ இன்று பாடம் படித்திருக்கிறாயா? எந்த விஷயத்தைப் பற்றி?"

"சைபீரியாவின் ஆறுகளைப் பற்றி" என்று உயிரற்ற குரலில் சொன்னான் ப்ளீன்துஸ்.

"நல்லது, அவற்றைப் பற்றி அறிந்ததைச் சொல்லு."



"சைபீரியாவில் ஆறுகள் இருக்கின்றன" என ஓரளவுக்குத் தன்னம்பிக்கையோடு தொடங்கினான். "அவை பாய்ந்து விழுகின்றன..."

மேலே பேச்சில்லை.

"எம்மாதிரி ஆறுகள் இவை?"

"சைபீரியாவின் ஆறுகள் அச்சந்தரக்கூடிய ஆழம் உடையன" என்று பெருமூச்சு விட்டான் ப்ளீன்துஸ்.

"இதோ, இது என்ன ஆறு?" என்று படத்தில் சுட்டுக்கோலால் தொட்டுக் காட்டி, வினவினாள் ஆசிரியை.

ப்ளீன்துஸுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. படத்திலுள்ள பருத்த நீலக் கோடுகளில் ஒன்றின் மீது விரலை ஒட்டியவாறு பேசாதிருந்தான். புதிய பையன் பதிலளிக்க ஆயத்தமாகக் கையை உயர்த்தினான்.

"அது இந்திகிர்க்கா?" என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னான்.

"சரி" என்று யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா புன்முறுவல் பூத்தாள். "இந்திகிர்க்கா உனக்குத் தெரியாமலிருக்குமா? உன் அண்ணனுடைய விமானப் பாதையில் இருந்ததாயிற்றே" என்றாள்.

எல்லோரும் வரைபடத்தைப் பார்த்தார்கள். ஓரங்கள் கிழிந்த, பழைய படம் அது. 'முன்பு இல்லாத' நகரங்கள், ஆறுகள் முதலியவற்றின் பெயர்கள் எழுதப்பட்ட மங்கலான பென்சில் குறிகள் அதில் காணப்பட்டன. படத்தின் காகிதமோ, கான்வாஸிலிருந்து சில இடங்களில் விட்டுப்போய் உப்பிப் பிய்ந்து, சமவெளிகள் இருக்க வேண்டிய இடங்களில் மலைகளும் பீடபூமிகளும் இருப்பது போலக் காட்டிற்று... இதற்குமுன் எத்தனையோ தடவை பார்த்து ஏற்கனவே நெட்டுருப் போட்டிருந்த இந்தப் படத்தை அப்போதுதான் முதல் முறையாகக் காண்பது போலவும் அதில் ஏதோ திடீரென்று உயிர் பெற்றுவிட்டது போலவும் எல்லோரும் ஆர்வத்துடன் நோக்கினர்... தைகாக் காட்டின் ஆளற்ற நெடுந்தொலைகளும் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நீண்டு பரந்த பிரதேசங்களும் முடிவற்ற பனிக்கட்டிகளும் புயல்களும் தூர இடங்களும் அவர்களுக்குத் தென்படலாயின...

புகழ்பெற்ற சோவியத் விமான ஓட்டியான கிளிமேன்திய் செரிமிஷ், இவை அனைத்துக்கும் மேலாகத் தம் விமானத்தை ஓட்டிச் சென்றிருக்கிறார்.

நிலப்பரப்பு எவ்வளவு பிரம்மாண்டமானது, விமானி ஆற்றிய அருஞ்செயல் எவ்வளவு கடினமானது என்பதை வரைபடத்தில் கண்ணோட்டியவாறே எல்லோரும் திகிலுடன் நினைத்துக்கொண்டனர்.

இதைச் சாதித்தவன், பின்வரிசையில் கோல்யா ஸ்வான்த்ஸவ் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கும் குட்டை முடியனின் அண்ணன்தான்.

இந்தப் பையனின் குலப்பெயரும் செரிமிஷ்தான்; சொந்தப் பெயர் மட்டுமே கென்னாதிய், அல்லது கேஷ்க்கா. அவன் மிக சாதாரணத் தோற்றமுடையவன். ப்ளீன்துஸ் ஒரு கையினால் அவனைக் கீழே தள்ளிவிட முடியும்.

"படத்திலுள்ள ஒவ்வொரு இடமும் எவ்வளவு புகழை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்!" என்று யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா தனது இனிய குரலில் சொல்லிவிட்டு, சிந்தனையில் ஆழ்ந்தவளாய்த் தேசப்படத்தின் பக்கம் திரும்பினாள்.

"கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக, நான் இந்தப் படத்தைக் கவனித்து வருகிறேன்... இதற்கிடையே நான் மாறிவிட்டேன்; இந்தப் படமும் மாறிவிட்டது. என் மாணவர்கள் நாடெங்கும் வாழ்கிறார்கள், கப்பல் ஓட்டுகிறார்கள், விண்ணில் பறக்கிறார்கள். அவர்களில் ஒருவன் பேரவை விஞ்ஞானி. அவன்கூட இப்படத்தினருகே நின்றுகொண்டு என்னிடம் பாடங்களை ஒப்புவித்தவன்தான். அறிவியல் துறைகளில் இருவர் பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ளனர். ஒருவன் கப்பல் தலைவன். சிலர் விமான ஓட்டிகள், சிலர் எஞ்சின் டிரைவர்கள், சிலர் நீரியல் நிபுணர்கள். இப்படத்தில் புதிய நகரங்களைத் தோற்றுவிக்கிறார்கள். ஆறுகளின் போக்கைத் திருப்புகிறார்கள். கடல்களை ஒன்றோடு ஒன்று இணைக்கிறார்கள்... அவர்களில் பலர் எனக்குக் கடிதங்கள் எழுதி, பூகோளத்தில் தாங்கள் ஏற்படுத்துகிற மாற்றங்களைப் பற்றித் தெரிவிக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் என் மாணவர்கள்" எனத் தொடர்ந்து கூறினாள்.

ஐரோப்பா, ஆசியா கண்டங்களின் பெரும் பகுதியில் பரவிக் கிடக்கும் பெரிய நாட்டை மிருதுவான வீச்சால் குறித்துக் காட்டினாள்.



# அதே செரிமிஷின் தம்பி

"கேட்டீர்களா? நமது பள்ளியின் 5 'பி' வகுப்பில் குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்த செரிமிஷ் என்ற பையன் வந்திருக்கிறான். அவன் அதே விமானி செரிமிஷின் தம்பியாம்" என்று யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா ஆசிரியர்கள் அறைக்குள் வந்ததும் கூறினாள்.

கென்னாதியின் பேரில் எல்லா ஆசிரியர்களுக்கும் அக்கறை ஏற்பட்டது. இடைநேரத்தில் தற்செயலாகப் போலப் புதிய பையன் பக்கமாகச் சென்று அவனைக் கவனமாகப் பார்த்தனர்.

"மற்ற பையன்களைவிட அவனிடத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டாம் என்று உங்களை மிகவும் கேட்டுக்கொள்கிறேன்" என்று பள்ளிக்கூட டைரக்டர் கிரீல் ஸ்தெபானவிச் திரும்பத் திரும்பச் சொன்னார். "அது பெருந்தவறு. அவனோ அடக்கமான பையன். ஒருவரும் அதிகச் சலுகை காட்டி அவனைக் கெடுக்கவில்லை என்பது தெளிவு."

"புகழ்பெற்ற அந்த மனிதனின் தம்பி, ஏன் குழந்தைகள் இல்லத்தில் இருக்க வேண்டுமென்பது எனக்கு ஒரே புதிராக இருக்கிறது. தம்முடன் மாஸ்கோவில் தம்பியை வைத்துக்கொள்ள அவருக்கு முடியாதா என்ன?" என்றாள் யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா.

"கென்னாதியுக்கும் அவன் அண்ணனுக்கும் இருக்கும் உறவு அவர்களின் சொந்த விவகாரம். பையனுக்குத் தாய் தந்தையில்லை. அவன் முன்பிருந்த பள்ளிக்கூடத்தில் நடத்தையும் படிப்பில் முன்னேற்றமும் நன்றாக இருந்தன. என்னைப் பொறுத்தவரையில் பெரிய வீரர்களின் தனிப்பட்ட வாழ்வில் பிரவேசிப்பதாக எனக்கு உத்தேசமில்லை" என்று சொல்லிவிட்டார் கிரீல் ஸ்தெபானவிச்.

5 'பி' வகுப்பில் இருக்கும் புதிய பையன் புகழ்பெற்ற செரிமிஷின் தம்பி என்பது, பள்ளிக்கூடம் முழுவதிலும் காட்டுத் தீ போலப் பரவியது. 5 'பி' வகுப்பின் கதவண்டையில் முதல் படிவ மாணவர்கள், ஈக்கள்போல மொய்த்தனர். மேல் படிவங்களைச் சேர்ந்த பெரிய பையன்களோ, சிறுவர்களை அப்பால் தள்ளிக் கொண்டு அக்கறை இல்லாதவர்கள் போன்ற பாவனையுடன் ஐந்தாவது படிவ வகுப்பறைக்குள் பார்த்தனர். வீரனின் தம்பியைப் பார்க்க விரும்பாதவன் யாருமில்லை.

"நீ உண்மையிலேயே செரிமிஷின் தம்பியா?" என்று ஏறக்குறைய நூறு தடவை அவனைக் கேட்டுவிட்டனர்.

"நீ அதிர்ஷ்டசாலியப்பா! எப்பேர்ப்பட்ட அண்ணன் உனக்கு?"

"நீ யார் என்பதை நாங்கள் உடனே யூகித்திருக்க வேண்டும். ஆனால் யூகிக்கவில்லை."

கென்னாதியின் சொக்காய் மேலிருந்த நீலச் சின்னங்களைப் பற்றித் தான் சொன்னதற்கு எவ்வாறு பரிகாரம் செய்வது என்பது ப்ளீன்துஸுக்குத் தெரியவில்லை. புதிய பையனுக்கு, விமான ஓட்டியின் சொக்காய் கிடைத்த விதம் இப்பொழுது எல்லோருக்கும் புரிந்துவிட்டது.

"நீ எங்கள் வகுப்பில் சேர்ந்தது மிகவும் அருமையான விஷயம்! இங்கே பையன்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் ஒரே ஆதரவு. கல்லுக்குக் கல் அண்டை கொடுத்தாற்போல" என்று ப்ளீன்துஸ் முணுமுணுத்தான்.

வகுப்புச் சட்டாம்பிள்ளை ஆன்யா பராத்தவா, கென்னாதியிடம் வந்து, "நீயும் விமானத்தில் பயணம் செய்திருக்கிறாயா?" என்று கேட்டாள்.

"ஆமாம், 'பெ-5' விமானத்தில் பயணம் செய்திருக்கிறேன்" என்றுவிட்டு, சட்டெனக் கற்பிப்பது போன்ற பெருமிதமான குரலில் தொடர்ந்து சொன்னான்:

"வெவ்வேறு வகை விமானங்கள் வெவ்வேறு சாதிக் குதிரைகளைப் போல வெவ்வேறாக நடக்கின்றன. உங்களுக்குப் பழக்கமில்லாத விமானத்தில் பறக்கும்பொழுது அதிகக் கவனத்துடன் இருக்க வேண்டும்."



இதையெல்லாம், மூச்சுக்கூட விடாமல் மளமளவென்று பொரிந்து கொட்டினான். ஆன்யா அவனை மரியாதையுடன் நோக்கினாள். விமானவியல் பற்றிய பாடப் புத்தகத்திலிருந்த ஒரு வாசகத்தை அவன் நெட்டுருப்போட்டுச் சொல்லுகிறான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

"ஹூம், எனக்கும் பறப்பதற்குத் துளியாவது வாய்ப்புக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று சொன்னாள் சிறுகூடான ரீத்தா. கண்ணாடியைக் கொண்டு கதிரொளியை உண்டாக்கியவள் அவள்தான்.

"ஓ, அப்படியா! வெகு விரைவில் கீழே இறக்கிவிடுமாறு நீயே கெஞ்சுவாய்" என்று முண்டக் கண்ணன் ப்ளீன்துஸ் கீச்சுக் குரலில் கோரணி செய்தான்.

"மாட்டேன், அப்படிக் கேட்கவே மாட்டேன்! முதல் தடவை வெகு உயரே மட்டுமே பயமாக இருக்கும்; ஆகவே அதிக உயரத்தில் போக வேண்டாம் என்று கேட்டுக்கொள்வேன்."

"குறைந்த உயரத்தில் கவனமின்றிப் பறப்பது, உங்கள் ஈமச்சடங்குக்கு நண்பர்கள் பூமாலைகள் கொண்டு வருவதில் முடியலாம்" என்று கென்னாதிய் கிளிப்பிள்ளை போல ஒப்பித்தான்.

ப்ளீன்துஸுக்கு வியப்பு தாங்கவில்லை. புதிய பையனின் அசாதாரண அறிவுக்களஞ்சியம் அவனை ஆட்கொண்டுவிட்டது.

"எந்த விமானமும் ப்ளீன்துஸைத் தூக்க முடியாது" என்றாள் ஆன்யா.

ஆன்யா உயரமான பெண். கென்னாதியைக் காட்டிலும் அவளுடைய உயரம் என்னவோ அரைச்சாண்தான் இருக்கும். ஆயினும் எங்கோ உயரத்திலிருந்து அவள் தன்னை நோக்குவதுபோல கென்னாதிய்க்குப் பிரமை உண்டாயிற்று. எனினும் அவன் அவள் மீதிருந்து பார்வையை அகற்றவில்லை. ஆன்யாவின் கொண்டை - ஆட்டுக் கொம்புக் கொண்டை என்று கென்னாதிய் தனக்குள் சொல்லிக்கொண்டான் - அவனுடைய அக்கறைக்கு இலக்காயிற்று. ஆன்யாவின் பின்னல்கள் தலையின் இரு பக்கங்களிலும் செவிக்குழாய்களின் வடிவில் சுருட்டிக் கட்டப்பட்டிருந்தன. இந்தக் கொண்டை மிகவும் வேடிக்கையாய் இருப்பதுபோல கென்னாதிய்க்குப் பட்டது. சட்டாம்பிள்ளையிடத்தில்

இந்தச் சொட்டையைக் கண்டுபிடித்ததில் திருப்தியுற்றுத் தானே மேல் என்று மறுபடி உணரலானான். அண்ணன் கிளிமேன்தியோடு மாஸ்கோவில் அவன் ஏன் வசிக்கவில்லை என்று அப்போது ஆன்யா கேட்டாள்.

"அது பெரிய கதை. அதைச் சொல்ல எனக்கு நேரமில்லை" என்று கென்னாதிய் சிறிது குழப்பத்தோடு பதில் அளித்தான். அவன் எதையோ மறைக்கிறான் என்பதை எல்லோரும் உணர்ந்தனர்.

"அண்ணனுக்குத் தனி இருப்பிடம் இன்னும் கிடைக்கவில்லை. அவர் விமான ஓட்டிகளின் விடுதியில் வசித்து வருகிறார். அது ஒரு காரணம்... தவிரவும், அவர் வீட்டில் தங்குவது அரிது. ஓயாமல் பறப்பு வேலை... இன்னும் இப்படிப் பல காரணங்கள்... சுருங்கச் சொன்னால்... ஆனால் அவர் அடிக்கடி எனக்குக் கடிதங்கள் எழுதுகிறார்..."

இவ்வாறு கூறி, கென்னாதிய், தன்னுடைய புத்தகப் பையிலிருந்து ஒரு கடிதத்தை வெளியில் எடுத்தான். உறையின் அடிப்பகுதியில்

**கி. செரிமிஷ்,**
**விமான ஓட்டிகள் குடியிருப்பு,**
**மாஸ்கோ**

என்ற விலாசம் எழுதப்பட்டிருந்தது.

இந்த விலை மதிப்பற்ற உறையை ஒவ்வொருவரும் தொட விரும்பினர். அதன் மேலிருந்த கையெழுத்தைப் பாராட்டினர்.

"கையெழுத்து அழகாக இருக்கிறது. ஆனால் எதைப் பற்றி எழுதியிருக்கிறார்?" என்றான் ப்ளீன்துஸ்.

அவனுடைய தகாத ஆவலைக் கண்டு எல்லோரும் அருவருப்பு அடைந்தனர்.

"ப்ளீன்துஸ், துருவித் துருவிக் கேட்காதே!" என்றாள் ஆன்யா.

புதிய தோழர்களின் நயப்பாங்கை கென்னாதிய் உயர்வாக மதித்தான்.

"அறிவு ஆர்வம் பல கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாக இருந்திருக்கிறது" என்று கூறி, உறையிலிருந்து கடிதத்தைத் தானே எடுத்து காகிதத்தை மடித்து, ஒரு பகுதியை அவர்களுக்குக் காட்டினான். அதன் வாசகம்:

"கென்னாதிய், உனக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதாததற்காக என்னை மன்னித்துவிடு. இப்பொழுது இரவு பகல் இடைவிடாமல் வேலை செய்து, அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள புதிய பொறுப்பு ஒன்றை நிறைவேற்றி வருகிறோம். சீக்கிரத்தில் எனக்கு வசதியான வசிப்பிடம் கொடுப்பதாக உறுதி கூறுகிறார்கள். இன்னும் இந்த ஆண்டும் இப்படியே கழித்துவிடுவோம். அப்புறம் உன்னை அரசாங்கப் பராமரிப்பிலிருந்து அகற்ற வேளை வந்துவிடும். நன்றாகப் படி. நலமாய் இரு, அருமைத் தம்பி..."

"நீ யோகக்காரனப்பா" என்று பொறாமையோடு சிறுவர்கள் சொன்னார்கள். புகழ் பெற்றவனின் உறவினன் என்பதற்குரிய ஏதேனும் அறிகுறியை அவனிடம் காண முயன்றனர்.

# போர் விமானி செரிமிஷ்

**5** 'பி' வகுப்பிலோ பள்ளிக்கூடத்திலோ நாடு முழுவதிலுமோ கிளிமேன்திய் செரிமிஷ் யார் என்பதை அறியாதவர்களே இல்லை.

கிளிமேன்திய் செரிமிஷ் 'சோவியத் யூனியனின் வீரர்' என்ற பட்டம் பெற்றவர். விமானப்படையில் மேஜரான அவர் தூரக் கிழக்கில் முதலில் புகழ் தேடிக்கொண்டார்.

சீன-கிழக்கு ரயில்வேயின் அருகிருந்த நகரங்களைச் சூறையாட முயன்ற மஞ்சூரிய வெண்படைக் கொள்ளைக்காரர்களுக்குச் செஞ்சேனை அப்போது தக்க பாடம் கற்பித்தது.

பகைவர்களின் துடுக்கை ஒடுக்கும் பலத்த அடி கொடுத்தது விசேஷத் தூரக்கிழக்குச் செஞ்சேனை. அப்போரில் சிறப்பாகச் செயலாற்றியவர்களில் கிளிமேன்திய் செரிமிஷ் என்ற இளைய போர் விமானியும் ஒருவர்.

அவர் காயமடைந்து மாஸ்கோவுக்குக் கொண்டுவரப்பட்டார். மிகப் பிரபல அறுவை மருத்துவர் அவருக்கு ஆப்பரேஷன் செய்து, அவர் மார்புக்குள் பாய்ந்திருந்த குண்டை அகற்றினார். அப்புறம், கிரெம்ளினில் நடந்த, என்றும் மறக்க முடியாத கொண்டாட்டக் கூட்டத்தில் அவர் மார்பின்மீது முதல் விருது தோன்றியது.

மூன்று ஆண்டுகாலம், சோதனை விமான ஓட்டியாக இருந்தார். புதிய போர் விமானங்களை முதல் முறையாக ஓட்டிப் பார்த்தார். பிறகு இரண்டாவது விருது அவருக்கு வழங்கப்பட்டது. 'நாட்டின் பாதுகாப்பு சக்தியைப் பலப்படுத்துவதிலும் விசேஷ அரசாங்க வேலையை ஆதர்ச முறையில் நிறைவேற்றுவதிலும் சிறந்த தொண்டு ஆற்றியதற்காக' இந்த விருது வழங்கப்பட்டது எனச் செய்தித்தாள்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வட துருவப் பிரதேசத்தில் நெடுந்தொலை பறந்து முந்திய ரிக்கார்டுகளை மீறியவர் என்ற வகையில் விரைவிலேயே அவர்



பெயர் சோவியத் நாடு முழுவதிலும் அடிபட்டது. 'சோவியத் யூனியனின் வீரர்' என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. விமானப் படையில் சாலச் சிறந்தவர்களில் ஒருவராகவும் நாட்டில் மிகப் புகழ்பெற்ற மனிதர்களில் ஒருவராகவும் விளங்கினார். அவருடைய சுருக்கமான, குதூகலம் பொங்கும் வானொலிச் செய்திகளை நாட்டினர் அனைவரும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தனர்: "மோட்டார் கணக்காக வேலை செய்கிறது; விமானம் ஒழுங்காகப் பறக்கிறது; மற்றவை எல்லாம் ஏற்றபடி இருக்கின்றன."

"மற்றவை எல்லாம் ஏற்றபடி இருக்கின்றன" இப்படித்தான் விமானத்திலிருந்து வந்த ஒவ்வொரு செய்தியும் முடிந்தது. விமான ஓட்டிகள் உடல் நலத்தோடும் மகிழ்ச்சியாகவும் இருப்பதையும் துணைக் கருவிகள் சரியாக இயங்குவதையும் பிற யாவும் ஒழுங்காக இருப்பதையும் இச்சொற்கள் குறித்தன.

கிளிமேன்திய் சோர்வு அறியாதவர். மிகவும் கடினமானவையும் பொறுப்பு வாய்ந்தவையுமான காரியங்களை மேற்கொண்டார். தேவைப்படும்போது நாட்டின் எட்டாக்கையிலுள்ள இடங்களுக்கும் பறந்து சென்றார். நோயுற்ற துருவ ஆராய்ச்சியாளர்களைத் தீவுகளிலிருந்தும் கடற்பனிக்கட்டியில் சிக்கிய கப்பல்களிலிருந்தும் பாதுகாப்பான இடங்களுக்கு விமானத்தில் கொண்டு சேர்த்தார். பறப்பு வேகத்தில் புதிய ரிக்கார்டுகளை ஸ்தாபித்தார். களிப்புடனும் விரைவாகவும் பணிபுரிந்தார். விடாது உடன் வந்த புகழை உதறித் தள்ளினார். பெரும் தேசிய விழா நாட்களில், செஞ் சதுக்கத்துக்குமேலே அநேகமாகக் கண்ணுக்குப் புலப்படாத அவருடைய விமானமே முதலில் பேரிரைச்சலோடு பறக்கும். மிக உயரமாகச் சென்றுவிட்டுக் கீழே பாயும், கரணங்கள் அடிக்கும். பின்பு அபரிமித வேகத்துடன் செங்குத்தாக மேலே எழும்பும்.

நாற்புறமும் இடிமுழக்கம் அதிரும். விமான இயந்திரம் கீழ் ஸ்தாயியிலிருந்து மேல் ஸ்தாயிக்கும் பின்பு கீழ் ஸ்தாயிக்குமாக ஒலி வேறுபாடுகளுடன் இரையும்.

தரையிலுள்ள மக்கள் அண்ணாந்து நோக்கியவாறு, ஆவேசம் மிக்க உயர்தர விமானப் பறப்புக் கலைத் திறமையைத் திகிலுடன் கண்டு வியப்பார்கள். இந்தக் கலையின் மாபெரும் நிபுணராகத் திகழ்வார் கிளிமேன்திய் செரிமிஷ்.

இத்தகைய அண்ணன் கென்னாதிய்க்கு வாய்த்திருந்தான்.

# வகுப்பும் உறவினரும்

எல்லோரும் அவன்மேல் பொறாமை கொண்டனர். தத்தம் அண்ணன்மார்களைப் பற்றிப் புகழ்ந்து சொல்வதைப் பிள்ளைகள் எப்போதும் விரும்புவார்கள். ஒவ்வொருவனும் மற்றவனைவிடத் தனிச்சிறப்புடைய அண்ணனைப் பெற்றிருக்க வேண்டும் என விரும்பினான். இதைப் பற்றி ஒவ்வொருவனும் கனவு கண்டான். "என் அண்ணன்... என் அண்ணன்..." இவ்வார்த்தைகள் வகுப்பறையில் அடிக்கடி கேட்கும். "என் அண்ணன் இருக்கிறாரே, தொழிற்சாலையில் அவர்தான் முதலாக்கும். அக்டோபர் புரட்சி தினத்தையொட்டி அவருக்கு ஒரு மோட்டார் சைக்கிளைப் பரிசாகக் கொடுத்தார்கள்."

குண்டன் ப்ளீன்துஸின் அண்ணனிடம் இருந்த ஒரே சிறப்பு தம்பியைவிட அளவில் பருத்தவன் என்பதுதான். ஆனாலும் ப்ளீன்துஸ்கூட ஒரு தடவை அண்ணனைப் பற்றிப் பெருமை அடித்துக்கொண்டான்:

"இது என்ன பிரமாதம்! என் அண்ணன் இருக்கிறானே, அவனால் பெரிய கோதுமை ரொட்டி நான்கை ஒரே மூச்சில் தின்றுவிட முடியுமே!"

தங்கள் அண்ணன்மார் எஞ்சினியர்கள், மருத்துவர்கள், எல்லைக் காவலர் என்றெல்லாம் மற்றவர்கள் பீற்றிக்கொண்டார்கள். கோல்யாவின் தமையன் ஓவியன்.

மீஷா ஸ்புரூயெவ், தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரன் குதிரை மேல் செல்லும் மிலீஷியாக்காரன் என்று பெருமை அடித்துக்கொண்டான். ஆன்யா பராத்தவாவினுடைய அக்காள் லெனின்கிராதில் இரசாயனி. இருந்தபோதிலும், புகழ்பெற்ற சகோதரர்கள் இருக்க வேண்டும் எனக் கனவு கண்ட சிறுவர்கள் சகோதரிகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவே இல்லை.



தத்தம் புகழ்பெற்ற அண்ணன்களையும் அக்காள்களையும் பற்றிப் பேசியபொழுது, ஏறக்குறைய எல்லோருக்கும் தனிச் சிறப்புடைய உறவினர்கள் இருந்தனர் என்பது தெரிய வந்தது. இந்த உறவினர்கள் அதிகப் புகழ் பெற்றிருக்கவில்லை. என்றாலும் நல்ல சோவியத் மக்கள், உழைப்பாளிகள், சமூகத்திற்குத் தேவையானவர்கள், குதூகலம் நிறைந்த, நேர்த்தியான வாழ்க்கை நடத்துபவர்கள். ஆனால் உலகப் புகழ்கொண்ட சகோதரரைப் பெற்றிருந்த கென்னாதிய் செரிமிஷின் பெருமையை இந்த விஷயங்கள் எல்லாம் சற்றும் குறைத்து விடவில்லை. இங்கே விவாதத்துக்கு இடமில்லை. செவெர்யான்ஸ்க் மூன்றாவது உயர்நிலைப் பள்ளியில் 5 'பி' வகுப்பில் இருக்கும் பையன் பெரிய அதிர்ஷ்டக்காரன். இதுதான் விஷயம்.

5 'பி' வகுப்பினர், கென்னாதியைப் பற்றிப் பெருமை கொண்டனர். இத்தகைய வீரனின் தம்பி ஒவ்வொரு வகுப்பிலும் படிக்கவில்லையே! நாடு முழுவதும் இவ்வீரரை மேஜர் கிளிமேன்திய் செரிமிஷ் என அழைத்தது; கென்னாதியின் வகுப்புத் தோழர்களோ, "எங்கள் வகுப்பு மாணவன் செரிமிஷின் அண்ணன்... கென்னாதியின் அண்ணன்!" என்றார்கள்.

காலை நேரங்களில் பள்ளிக்கூடத்தின் பக்கமாகத் தபால்காரன் செல்லும்பொழுது, சிறுவர்கள் ஓடிவந்து, "செரிமிஷுக்குக் கடிதம் இல்லையா?" என்று கூச்சலிடுவார்கள்.

"இல்லாமலென்ன? எக்ஸ்பிரெஸ் பதிவுத் தபால் இருக்கிறது. இன்னும் மை காயவில்லை. மாஸ்கோ அஞ்சலகத்தில் உலரப் போட்டிருக்கிறார்கள்" என்று ஒவ்வொரு தடவையும் பதில் சொல்லுவான் தபால்காரன்.

சில சமயம் கென்னாதிய்க்கு மாஸ்கோவிலிருந்து கடிதம் வரும். 'கி. செரிமிஷ்' என்ற திருப்பு முகவரி எழுதப்பட்ட உறையைக் கென்னாதிய்க்குத் தரும் உரிமைக்காகப் பிள்ளைகள் போராடுவார்கள். கென்னாதிய் கடிதங்களை ஒருபோதும் வகுப்பில் படிப்பதில்லை. பள்ளிக்கூடம் முடிந்த உடனே, அவைகளைக் குழந்தைகள் இல்லத்துக்குக் கொண்டுபோய் ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு படிப்பான்.

"நல்லது, என்ன எழுதியிருக்கிறார்? புதிய இடத்திற்குப் பறந்து செல்கிறாரா?" என்று மறுநாள் காலையில் சிறுவர்கள் கேட்பார்கள்.

கென்னாதியோ மௌனமாயிருப்பான்.

இவ்வாறு, ஒவ்வொரு கடிதமும் இரகசியத் திரையால் சூழப்பட்டிருக்கும். கென்னாதியுக்கும், அவன் அண்ணனுக்கும் உள்ள உறவில் ஏதோ புதிர் இருக்கிறது என்பதை யாவரும் உணர்ந்தனர். ஆனால் அதை கென்னாதிய் வெளியிட மாட்டான் என்பதையும் தெரிந்திருந்தனர்.

அவர்களுக்கெல்லாம், தன் அண்ணன் உருவப்படங்களை வர்ண எழுதுகோலால் வரைந்து கொடுப்பான் கென்னாதிய். புகழ் பெற்ற விமான ஓட்டியின் புகைப்படங்கள் அவனிடம் நிறைய இருந்தன. பல்வேறு மாத இதழ்களிலிருந்து நேர்த்தியாகக் கத்தரித்துச் சேர்க்கப்பட்டவை அவை. படங்களில் காணப்பட்ட கிளிமேய்திய்க்கு நெற்றி விசாலமானது. கண்கள் ஒன்றிலிருந்து ஒன்று அகன்றவை. இந்தக் காரணத்தால் மூக்குத் தண்டுக்கு மேல் புருவங்களுக்கு இடையே உப்பிய முக்கோண வடிவம் அமைந்திருந்தது. அகன்ற, கூரிய பார்வையில் பிடிவாதம் சுடர் விட்டது. கட்டுக்குட்டான மேனியும் பழுப்பேறிய நிறமும் கொண்ட கிளிமேன்திய் செரிமிஷ் படங்களில் முறுவலித்தார். விமானி அறையின் வழியாக வெளியே நோக்கினார். யாரையோ வரவேற்றார். அண்ணனின் புகழ் வேறுபடுத்த முடியாதவாறு கென்னாதியுடன் இணைந்திருந்தபடியால் யெவ்தொக்கியா விளாஸியெவ்னாகூடச் சில சமயம் பாடங்களின்போது, "கென்னாதிய் செரிமிஷ், சரியாக உட்கார்! சே, சே, உனக்கு வெட்கமாய் இல்லையா? வீரனின் தம்பியாக இருந்துகொண்டு இப்படி நடந்து கொள்வது உனக்குப் பொருந்தவே இல்லை..." என்று சொல்வாள்.

சில சமயங்களில் சள்ளையாகக் கூட இருந்தது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பாடுபட்டுப் படிக்க வேண்டியிருந்தது; வீரனின் தம்பி வகுப்பில் பின்தங்கிவிட்டால் எக்கச்சக்கமாகி விடுமே. மாணவர்கள் செய்யும் பல குறும்புகளில் அவன் கலந்து கொள்ள முடியவில்லை. கலந்துகொண்டால், "அப்பேர்ப்பட்ட வீரனின் தம்பி போக்கிரியாய் இருக்கிறான். குலப்பெயரைக் கறைபடுத்துகிறான்" என்பார்களே. என்ன செய்வது? எப்போது இம்மாதிரி வீரக் குடும்பத்தில் சேர்ந்தாயிற்றோ. 'மற்றவை எல்லாம் ஏற்றபடி இருப்பது' இன்றியமையாதது. குலப் பெருமைக்கு ஏற்ப நடந்துகொண்டு தீர வேண்டும்.



# ஹாக்கி ஆட்டக்காரர்கள்

கென்னாதிய் செரிமிஷ், பெயரைத் தவிர, வேறு ஒன்றிலும் கூடப் பள்ளி நண்பர்களின் பாராட்டைப் பெற்றான். குலப் பெயர் ஒன்றினால் மட்டும் அவன் எதுவும் சாதித்திருக்க முடியாது. முதல் சில நாட்களில் எல்லோரும் ஆகாகா என்று வியந்தது உண்மையே. ஆனால் நாளாவட்டத்தில் பழகிவிட்டனர். 'வீரனின் தம்பியாய் இருந்தால் இருக்கட்டுமே. இது என்ன பிரமாதம்?' என்று எண்ணத் தொடங்கினர்.

எனினும் நகரில் 'ஸ்கேடிங் ரிங்' எனப்படும் பனிச்சறுக்கு மைதானம் திறக்கப்பட்டவுடன் கென்னாதியின் புகழ் மீண்டும் மலர்ந்தது. 1 'ஏ' வகுப்பிலிருந்து 5 'பி' வகுப்பு வரை, பள்ளிக்கூடத்தில் யாரும் போட்டியிட முடியாத லுக்காஷினை 'ஸ்னிகூரச்கா' என்னும் சிறு ஸ்கேட்டுகளைப் போட்டுக்கொண்டே அவன் தோற்கடித்துவிட்டான். லுக்காஷினோ சிறந்த 'நார்வே' ஸ்கேட்டுகள் அணிந்து போட்டியிட்டான். தவிர, ஹாக்கி ஆட்டத்தில் கென்னாதிய் அபாரமான திறமை கொண்டவனாக விளங்கினான்.

சோவியத் யூனியனின் உறைபனிப் பிரதேசத்தை அடுத்திருந்த நகரான செவெர்யான்ஸ்க்கில் குளிர்காலம் முன்னதாகத் தொடங்கிப் பல மாதங்கள் நீடிக்கும். நகர மக்கள் எல்லோருக்கும் ருஷ்ய ஹாக்கியில் மோகம். அந்த ஆட்டத்தின் பொறி பறக்கும் மின்வேகம். சூறாவளி போலச் சிதறும் பனிக்கட்டித் துகள்களுக்கிடையே எஃகு ஸ்கேட்டுகள் பளிச்சிட, ஹாக்கிக் கழிகள் தடதடக்கச் சிறு தக்கைப் பந்துக்காக நடக்கும் போராட்டம், எல்லாம் அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தன...

கென்னாதிய் மிகச் சிறந்த ஹாக்கி ஆட்டக்காரன் என்பது தெரிய வந்தது. வல முன்பக்கம் விளையாடினான். ஓடுகிற ஓட்டத்திலேயே பந்தைச் சரியாக அடித்து கோல் போடும் அரிய திறமை பெற்றிருந்தான். உறைபனியில் விரைவாகச் சறுக்கி வரும்போதே

சட்டென்று ஒரு காலை அகல வைத்து, ஸ்கேட்டின் கூர் அடியால் பனிக்கட்டியைச் செதுக்கி வேகத்தைக் கணப்போதில் குறைத்தது நிலைத்து நின்று திரும்பி மறுகணமே எதிர்த் திசையில் கன வேகமாகப் பாய்ந்து செல்ல அவனைப் போல் வேறு யாராலும் முடியவில்லை.

தவிரவும், ஆட்டத்தின்போது கென்னாதிய் விமான ஓட்டிகளின் சொற்களைத் தாராளமாக வழங்கினான்.

“ஆட்டக் கழியைப் பின்னிழு! இலக்கைத் தாக்கு! முப்புள்ளி இறக்கம்! குறியில் அடி!” என்றெல்லாம் ஆர்ப்பரிப்பான்.

அவன் உபயோகித்த சொற்கள் பிற விளையாட்டுக்காரர்களுக்குப் பிடித்திருந்தன. இவற்றால் ஆட்டத்தில் விறுவிறுப்பு உண்டாயிற்று. ஹாக்கி விளையாட்டரங்கில் கென்னாதிய்க்குப் பெரிய மவுசு.

செவெர்யான்ஸ்க்கில் பனிக்காலம் முன்னதாகத் தொடங்கிவிடும் ஆதலால், மாஸ்கோ வாசிகள் விளையாட்டரங்குகளின் நனைந்த புல் மீது இலையுதிர் காலத்தின் கடைசிக் கால்பந்தாட்டங்களை ஆடிக்கொண்டிருந்த அதேபொழுது செவெர்யான்ஸ்க்கிலோ கட்டுத் திட்டமற்ற ஹாக்கி ஆட்டக்காரர்கள் உறைந்த குளங்குட்டைகள் மீது ஆடத் தொடங்கினர். ஹாக்கி கழிக்கு அகப்படுவது பழஞ் செருப்போ உறைந்த வறட்டியோ எதுவானாலும் பனிக்கட்டியின் மீது அதை அடித்துக்கொண்டிருந்தனர்.

மேல் படிவ மாணவர்கள், செவெர்யான்ஸ்க் இளைஞர் குழுக்களில் ஆடினர்; கீழ்ப் படிவத்தினர் தங்களுக்குள்ளேயே இரண்டு பயிற்சிக் குழுக்களை ஏற்படுத்திக்கொண்டனர். முதல் குழுவின் தலைவனாக கென்னாதிய் செரிமிஷ் நியமிக்கப்பட்டான். இரண்டாவது குழு ‘மகளிர் குழு’ எனப்பட்டது; அதை அமைத்திருந்தவள் ஆன்யா பராத்தவா. அவளைப் பள்ளி மாணவர்கள் ‘ஆண் பிள்ளைக் குட்டி’ என்று அழைத்தார்கள். சிறுமிகளிடமும் சிறுவர்களிடமும் ஒரே நிகராகப் பழகினாள். மற்ற பெண்களைச் செய்வதுபோல ஆன்யாவை ஏளனம் செய்யும் எண்ணமே கென்னாதிய்க்கோ, ப்ளீன்துஸுக்கோ, வாய்மூடிக் கோல்யாவுக்கோ அல்லது சண்டைப் பிரியனான கலகக்காரன் லுக்காஷினுக்கோ தோன்றியதே கிடையாது. அவளுடைய போக்கே தனி. அவளுடன் இருந்தால் பொழுது போவதே தெரியாது.



ஆன்யாவின் ஹாக்கிக் குழு கென்னாதிய் பள்ளியில் சேர்வதற்கு ஓராண்டு முன்னமே அமைக்கப்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் பெண்கள் விருப்பம் இன்றியே, கூச்சத்துடன்தான் அவள் குழுவில் சேர்ந்தார்கள். ஹாக்கி ‘ஆண்களின் விளையாட்டு’ எனக் கூறினர். ஆனால் பள்ளிக் குழுவின் வெற்றிகளால் மாணவர்கள் ஸ்கேட்டிங் ரிங்கின் வீரர்களாக விளங்கினர்.

பனிக்காலத்தில் ஸ்கேட்டிங் ரிங்க் நகரின் மையமாகத் திகழ்ந்தது. உறைந்த ஆற்றின் ஒரு பகுதி, பல நிறக் கொடிகள், கம்பங்களால் வரம்பு கட்டப்பட்டு, கரையோரமாக மரவேலி போடப்பட்டு ஸ்கேட்டிங் மைதானமாகச் செப்பம் செய்யப்பட்டிருந்தது.

ஆன்யா முடிவில் வெற்றி பெற்றாள். நன்கு ஸ்கேட் செய்யவல்ல பெண்கள் ஹாக்கிக் கழிகளுடன் கிளம்பி விரைவில் ஆண் பிள்ளைகளைப் போலவே ஆர்வங்கொண்ட ஆட்டக்காரர்கள் ஆகிவிட்டனர்.

செவெர்யான்ஸ்க் மகளிர் குழுக்களில் ஆன்யாவின் குழுவே, முந்திய வருடம் முதல் இடத்தைக் கைப்பற்றிக்கொண்டது. ஆனாலும் சிறுவர்கள் ஆட்டக்காரிகள்பால் அலட்சியமாகவே இருந்தனர். ‘பெண்களின் ஹாக்கிவெறும் கீச்சுமூச்சே தவிர விளையாட்டு ஆகாது’ என்று அவர்கள் கருதினர்.

# சோதனை

ஒரு நாள் மாஸ்கோ வானொலியும் அதன் பிறகு தினப் பத்திரிகைகளும் ஒரு புதிய செய்தியை அறிவித்தன. ஸெவாஸ் தோபல் நகரிலிருந்து சுகோத்ரா தீபகற்பம்வரை, ஓரிடத்திலும் இறங்காமல் பறக்கும் தீரச்செயலை மேஜர் கிளிமேன்திய் செரிமிஷ் தனியாக மேற்கொண்டுள்ளார் என்பது அச்செய்தி. நம்பவே முடியாத தூரம் - பரந்த நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு, ஒரே ஆள் உட்காரக்கூடிய, விரைவு மிக்க விமானத்தில் பறந்தார் அவர். சோவியத் நாட்டின் தென்பகுதியில் பொழியும் சோனாமாரியினூடாகவும், மையப் பகுதியில் அடர்ந்துள்ள மூடுபனியைக் கிழித்துக்கொண்டும் தைகாக் காட்டுக் குளிர்காலப் பனிப் புயலைக் கடந்தும் பறந்தது அவருடைய தனியாள் விமானம். பள்ளிக்கூடத்திற்கு இந்தச் செய்தி எட்டியபொழுது கிளிமேன்திய் செரிமிஷ், ஏற்கனவே யூரல் மலைகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தார்.

அவருடைய பறப்பு வழி வரைபடத்தில் சிவப்பு நூலில் குண்டூசிகள் குத்திக் குறிக்கப்பட்டது. விமானியின் முன்னேற்றத்தைக் காட்டுவதற்காகச் சிறு கொடி ஒன்று நூலின் மேல் நகர்த்தப்பட்டது. தைகாக் காடுகளுக்கு மேல் செரிமிஷ் பறப்பதாக அன்று மாலை செய்தி அறிவிக்கப்பட்டது. பிறகு விமான ஓட்டியுடன் வானொலித் தொடர்பு அறுபட்டுவிட்டது. வரைபடத்தின் மேல் இருந்த சிறு கொடி அதே இடத்தில் நின்றுவிட்டது...

மறுநாள் காலையில் கென்னாதிய் வாடிய முகத்தோடு பள்ளிக்கு வந்தான். யாருடனும் பேசவில்லை. அவனைப் பார்க்கக்கூட நண்பர்கள் அஞ்சினர். முடிவற்ற கிழக்கு சைபீரியப் பரப்புகளில் எங்கோ கிளிமேன்திய் செரிமிஷ் மறைந்துவிட்டார்.

ஆன்யா சொன்னாள்: "கவலையே படாதே. கென்னாதிய், எனக்கு என்னமோ உறுதியாகத் தோன்றுகிறது..."



"கட்டாயமாக. இப்பொழுது என்ன வந்துவிட்டது? ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா? ஒருவேளை காற்றுமண்டலம் வானொலியை மேலே போக விடவில்லையோ என்னவோ! அப்புறம் போகவிடும். அப்போது நமக்குச் செய்தி கிடைக்கும்" என்றான் குண்டன் ப்ளீன்துஸ்.

"காற்றுமண்டலமாம், காற்றுமண்டலம்! உன் மண்டைக்குள் காற்றுதான் அடைந்திருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறதே" என்றான் கென்னாதிய்.

வகுப்பு தொடங்கியது. ஆனால் ஆசிரியர்களும் மாணவர்களும், பின்வரிசையில் சாய்வு மேசைக்குப் பக்கமாகத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த கென்னாதியை - ஆளற்ற, குளிர்மிக்க வடபுறக் காட்டுப் பிரதேசத்தில் மறைந்துவிட்ட விமானியின் தம்பியை - இடைவிடாது நோக்கிய வண்ணமாயிருந்தனர்.

அன்று ஆசிரியர்கள் கென்னாதியைக் கேள்விகள் கேட்கவில்லை. கணக்குத் தேர்வுக்கு முந்திய இடை நேரத்தில், கிரில் ஸ்தெபானவிச் அவனை அழைத்து, சௌக்கியமா என்று விசாரித்து, அவன் விரும்பினால் விடுமுறை பெற்றுக்கொள்ளலாம் என்றார். ஆனால் கென்னாதிய் அந்தச் சலுகையை ஏற்கப் பிடிவாதமாக மறுத்து, மற்றவர்களோடு நானும் கணக்கைப் போடுகிறேன் என்று சொல்லிவிட்டான்.

கணக்கு அவ்வளவு கடினமாக இல்லாத போதிலும், சிக்கலாக இருந்தது; அதனை மிகவும் கவனமாகப் போட வேண்டும்; ஆனால் கென்னாதிய் நன்றாகச் சிந்திக்கக்கூடிய நிலையில் இல்லை. பக்கத்துப் பையன் மையொற்றுத் தாளில் விமானங்கள் வரைவதைக் கோல்யா கண்டான். பல விமானங்கள்... கணக்கு நோட்டுப் புத்தகத்திலோ கேள்வி விவரங்கள் தவிர வேறு ஒன்றும் எழுதப்படவில்லை. கோல்யா கணக்கு விடையை கென்னாதிய்க்குச் சொல்ல விரும்பினான்; அவனோ எரிச்சலுடன் மறுத்துவிட்டான்.

அனேகமாக எல்லோரும் கணக்கைப் போட்டுவிட்டு நோட்டுப் புத்தகங்களை ஆசிரியரிடம் கொடுத்தனர். வகுப்பறையிலிருந்து வெளியே செல்லும்பொழுது, கென்னாதியைப் பார்த்தனர். அவன் முன்போலவே சாய்வு மேசை அருகே குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்து இருந்தான். கடைசியாக ப்ளீன்துஸ் கூட நோட்டுப்

புத்தகத்தைக் கொடுத்துவிட்டான்; கென்னாதியோ ஏறக்குறையக் காலியான வகுப்பில் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தான்.

அறையிலிருந்து ப்ளீன்துஸ் வெளிவந்ததும் கூடத்திலிருந்த சிறுவர்கள், "கென்னாதிய் எப்படிப் போடுகிறான்?" என்று கேட்டனர்.

ப்ளீன்துஸ் வருத்தத்தோடு கையசைத்தான்.

"இன்றைக்கு அண்ணனுக்கும் தம்பிக்கும் அதிர்ஷடம் இல்லை; இவனும்கூடச் சிக்கிக்கொண்டு அல்லற்படுகிறான்" என்று லுக்காஷின் குத்தலாகச் சொன்னான்.

மற்ற மாணவர்கள் அவனை அடித்து நொறுக்காததுதான் குறை.

"உனக்கு என்ன கிண்டலாக இருக்கிறதோ?" என்று சீறி விழுந்தனர்.

"என்னப்பா, வேடிக்கையாகக்கூடப் பேசக் கூடாதா?" என்றான் லுக்காஷின்.

"வேடிக்கை பேச இதுதான் விஷயமோ?"

பையன்கள் கதவருகே நெருக்கிப் புடைத்தவாறு, கென்னாதிய் எப்படிக் கணக்குப் போடுகிறான் என்பதைச் சாவித்துளை வழியாகப் பார்க்க முயன்றனர். விடையை இரகசியமாகச் சொல்லிக்கொடுக்கவும் முயன்றனர்; தங்களுக்குப் பின் கிரீல் ஸ்தெபானவிச் நிற்பதைக்கூடக் கவனிக்கவில்லை.

"இடுக்கு வழியாக யாருக்கு விஞ்ஞானம் புகுத்தப்படுகிறது?" என்று திடீரென அவருடைய தணிந்த குரல் ஒலிக்கவே எல்லோரும் திடுக்கிட்டு அப்பால் ஓடிவிட்டனர்.

கிரீல் ஸ்தெபானவிச் கதவை இறுக மூடினார். குழப்பமடைந்த சிறுவர்களை நோக்கி, "நம் நாட்டில் விஞ்ஞானத்தின் கதவுகள் எல்லோருக்கும் விரியத் திறந்திருக்கின்றன என்று படித்துப் படித்துச் சொன்னாலும் உங்கள் மூளைகளில் ஏனோ ஏறுவதில்லை. இடுக்கு வழியாக ஞானத்தைத் திருட்டுத்தனமாகப் புகுத்தப் பார்க்கிறீர்கள். அறிவியலுக்கு இந்த இடுக்கு மிகவும் குறுகியது. இங்கு ஒருவனை ஒருவன் நெருக்கித் தள்ளிக்கொண்டும் கிசுகிசுத்துக்கொண்டும் இருப்பதைவிட நீங்கள் வெளியில் ஓடினால் நன்றாயிருக்குமே" என்று சொன்னார்.



பள்ளித் தலைவர் ஆசிரியர் அறைக்குச் சென்றார். கதவை விட்டுச் சிறிது நேரமே விலகியிருந்த சிறுவர்களோ, அவர் தலை மறைந்ததுமே சொல்லிவைத்தாற்போல மீண்டும் கதவருகே குமையலாயினர். கடைசிச் சில சிறுவர்களும் அறையிலிருந்து வெளிவந்த பொழுது, அவர்களைச் சுற்றிக்கொண்டார்கள்.

"கென்னாதிய் எப்படி இருக்கிறான்? அவனுக்குச் சரியான விடை கிடைத்துவிட்டதா?" என்று கேட்டனர்.

அவர்களோ, கணக்குப் போடுவதில் பட்ட சிரமத்துக்குப் பின் அப்பாடா என்று பெருமுச்சுவிட்டு, கென்னாதிய் இன்னும் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறான் என்று தகவல் தெரிவித்து, அதே மூச்சில், "எக்ஸ் எதற்குச் சமம்? முப்பத்திரண்டுக்குத் தானே?" எனக் காதோடு காதாகக் கேட்டனர்.

மற்றவர்களுக்குக் கிடைத்த அதே விடை தங்களுக்கும் கிடைத்ததை அறிந்து சந்தோஷப்பட்டனர். பிறகு தாங்களும் துளை வழியாக கென்னாதியைப் பார்த்தனர்.

மீஷா ஸ்புரூயெவ் வியர்த்து வடிய, கலைந்த தலைமயிருடன் வெளிவந்தான். அவன் முகத் தோற்றத்தைக் கண்ட மற்றவர்கள் கென்னாதியைப் பற்றி அவனிடம் கேட்கவேயில்லை.

"போட்டுவிட்டேன்" என்று வெற்றி முழக்கம் செய்தான் ஸ்புரூயெவ்.

"என்ன விடை கிடைத்தது?" என்று ஆன்யா வினவினாள்.

"நூற்றிப் பதின்மூன்றும் பின்னத்தில் சொச்சமும்..."

உடனே கதவருகே இரைச்சலும் பீறிடும் சிரிப்பும் கிளம்பின. ஆன்யா வாய் மேல் கையை வைத்து, மற்றவர்களை அடக்க முயன்றாள். திடீரெனக் கதவு திறக்கப்பட்டது; களைத்துப்போன கென்னாதிய் வெளியில் வந்தான். எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"போட்டுவிட்டாயா?"

அவன் மெல்லத் தலையை அசைத்தான்.

"எக்ஸ் எதற்குச் சமம்?" என்று மீஷா கேட்டான்.

"32க்கு, ஏன்?" என்றான் கென்னாதிய்.

"சபாஷ், கென்னாதிய்! சரி!" என்று எல்லோரும் கவலை தீர்ந்து, மகிழ்ச்சியுற்றனர்.

நான்காவது பாடத்திற்கு மணி அடித்து எல்லோரும் தம் தம் இடங்களில் உட்கார்ந்து கொண்டதும், அது அவள் பாடம் இல்லையானாலும் யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா திடுமென உள்ளே வந்தாள். கிளர்ச்சிப் பெருக்கால் இளமைப் பூரிப்பு அடைந்து, அவிழ்ந்த கொண்டையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு அவள் கென்னாதிய் அமர்ந்திருந்த சாய்வு மேசையருகே நேரே சென்றாள். அவளுடைய கொண்டையூசி ஒன்று, அவன் சாய்வு மேசை மேல் விழுந்துவிட்டது.

"என் வாழ்த்துக்கள், கென்னாதிய்! உன் தமையனார் சுகோத்கா தீபகற்பத்தில் பத்திரமாகத் தரை இறங்கிவிட்டார். அவருடைய வானொலிக் கருவி பழுதுபட்டிருந்ததாம். இப்போது அவரோடு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டனர்; எல்லாம் நல்லபடியாக நடந்தேறிவிட்டது. புதிய ரிக்கார்டை ஸ்தாபித்துவிட்டார்!"

"பார்த்தீங்களா! நான்தான் சொன்னேனே!" என்று ஆசிரியையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு ஆன்யா கூச்சலிட்டாள்.

"நான் மட்டும்? காற்று மண்டலம் தடைசெய்வதால் வானொலிச் செய்தி கேட்கவில்லை என்று சொன்னேனே" எனக் கட்டைக் குரலில் கூவினான் பளீன்துஸ்.

எல்லோரும் கைதட்டிக்கொண்டு, "ஹுர்ரா!" என்று கூப்பாடு போட்டனர். ஒருவர் முதுகில் ஒருவர் தட்டிக்கொடுத்தனர். பளீன்துஸோ தன் சிவந்த கன்னங்களை உப்பிக்கொண்டு பறையடிப்பதுபோல் அவற்றை அடித்துக்கொண்டான் யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா கொண்டையைத் திரும்ப முடிந்து கொண்டு அவர்களோடு சேர்ந்து சிரித்தாள்.

திடீரென்று கென்னாதிய் தலையைக் கைகளால் பற்றிக்கொண்டு, வகுப்பறையிலிருந்து வெளியே ஓடிவிட்டான்.

சில நிமிடங்கள் கழித்து, வெளித்தாழ்வாரத்தின் மூலையில் ஜன்னல் அருகே யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா அவனைக் கண்டாள்; ஜன்னல் குறட்டில் முழங்கைகளை ஊன்றியபடி,



மூக்கைக் குளிர்ந்த கண்ணாடியின் மேல் அழுத்திக்கொண்டு நின்றான்.

"கவலைப்படாதே, கென்னாதிய். இப்போது யாவும் சரியாய்விட்டது" என்று அவன் தலையை வருடிக்கொண்டே சொன்னாள்: "அபாயம் அனைத்தும்தான் விலகிவிட்டதே. இனி எல்லாம் ஒழுங்காக நடக்கும். விமான ஓட்டிகள் சொல்வதுபோல, மற்றவை எல்லாம் ஏற்றபடி இருக்கின்றன. ஆகவே எதற்காக நீ இப்படி?"

# வேட்பாளர்

அந்த நாட்களில் சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் தேர்தலுக்காக, நாடு முழுவதிலும் ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. வேட்பாளர்களின் பெயர்களும், உருவப்படங்களும் செய்தித்தாள்களில் நிறைந்திருந்தன. தேர்தலுக்கு நிற்பவர்களில் பேர்போன மனிதர்கள் இருந்தனர். இதுவரை பிரபலம் அடையாவிடினும் தத்தம் வட்டாரங்களில் புகழ்பெற்ற மனிதர்களும் இருந்தனர்; அரசாங்கப் பொறுப்பையும் அதிகாரத்தையும் அவர்களிடம் ஒப்புவிக்குமாறு மக்கள் வேண்டப்பட்டனர்.

ஒருநாள் ஆன்யா பள்ளிக்கூடத்துக்கு மாவட்டச் செய்தித்தாளைக் கொண்டுவந்து கென்னாதியின் சாய்வு மேசைமேல் பரப்பினாள். அதில் இருந்த ஒரு விவர அறிக்கையை ப்ளீன்துஸ் ஆழ்ந்த கட்டைக் குரலில் படித்தான். ஹலதாயிவோ கிராமத்தின் கூட்டுப்பண்ணை விவசாயிகள், தமது புகழ்பெற்ற ஊர்க்காரரான கிளிமேன்திய் செரிமிஷை சுப்ரீம் சோவியத்துக்கு வேட்பாளராக நியமித்திருந்தனர். அந்நாளிலிருந்து செவெர்யான்ஸ்க்கின் ஒவ்வொரு தேர்தல் கூட்டத்திலும் வீரனின் பெயர் முழங்கியது. துணிவு மிக்க விமான ஓட்டி சுப்ரீம் சோவியத்தில் தங்கள் பகுதியின் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என மாவட்ட மக்கள் ஏகமனதாக அவாவினர்.

கிரீல் ஸ்தெபானவிச் மாவட்டத் தேர்தல் குழுவின் தலைவர் ஆகையால் அவருக்கு வேலை நெரிந்தது. பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்.

"கென்னாதிய், இதோ பார், வீரனின் தம்பீ, தளர்வுக்கு இடம் கொடுத்துவிடாதே. அரசாங்க உறுப்பினராக உன் தமையனாரைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம். எப்பேர்ப்பட்ட அந்தஸ்து, தெரியுமா? ஆகவே நீ தலைசிறந்த மாணவனாக இருக்க வேண்டும். தேர்தலில் நிற்கும் வீரனின் தம்பி, பள்ளியில் சாலச் சிறந்த மாணவனாகத்



திகழ வேண்டும். வேறு விதமாக எண்ணவே இடமில்லை. நீ சரியானபடி உழைக்கவில்லையா, என் வேலைக்கே உலை வைத்து விடுவாய். வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. அரசாங்கக் காரியம் ஆயிற்றே. விடாப்பிடியாக முயற்சி செய்" என்று சொல்லுவார்.

வேறொரு தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர்கள் கென்னாதியின் சகோதரரை வேட்பாளராக நியமித்தால் என்ன செய்வது என்று சிறுவர்கள் கவலை கொண்டனர். அண்ணனுக்கு கென்னாதிய் கடிதம் எழுத வேண்டும் என்று வற்புறுத்தினர். செவெர்யான்ஸ்க் மாவட்டப் பிரதிநிதியாக இருக்க அவரைத் தூண்ட வேண்டும் என்று கென்னாதியிடம் சொன்னார்கள்.

"கென்னாதிய், அவருக்கு ஒரு கடிதம் எழுது. இங்கே மூன்று சினிமாக் கொட்டகைகள் உள்ளன; மின்சாரத்தால் இயக்கப்படும் மர அறுவை ஆலை உள்ளது; நன்றாக அமைக்கப்பட்ட சாலைகள் உள்ளன... கோடைக்காலத்தில் நகரப் பூங்காவில் உள்ள ஊற்றிலிருந்து நீர் வீட்டு மாடிகளைவிட உயரமாகப் பீய்ச்சி அடிக்கும். மரங்கள் வெட்டும் திட்டம் நூற்று இருபத்து நான்கு சதவிகிதம் நிறைவேற்றியிருக்கிறோம். தவிர, இப்பகுதி முழுவதிலும் ஹாக்கிப் பந்தயத்தில், முதல் ஸ்தானத்தை வகிக்கிறோம் என்பதையும் எழுத மறந்துவிடாதே. கட்டாயம், நம் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என வற்புறுத்து."

கென்னாதிய் உடனே எழுதுவதாக வாக்குறுதி கொடுத்தான். சீக்கிரம் செவெர்யான்ஸ்க் தேர்தல் தொகுதியின் வேட்பாளராக இருக்க கிளிமேன்திய் செரிமிஷ் இசைந்துவிட்டார் என்பது அறிவிக்கப்பட்டது. வீரரிடமிருந்து வந்த கடிதம் மாவட்டச் செய்தித்தாளில் அச்சிடப்பட்டது. அதில் அவர் தமக்கு அளிக்கப்பட்ட கௌரவத்துக்காகவும் தம் மீது காட்டப்பட்ட நம்பிக்கைக்காகவும் நன்றி செலுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஒரு மாதத்திற்குள், செவெர்யான்ஸ்க்குக்கு நேரில் வருவதாக வாக்குறுதியளித்திருந்தார். இதைப் பற்றி கென்னாதிய் அறிந்தபோது சிறிது திடுக்கிட்டான் என்பதைப் பலர் கண்டனர்.

"என்ன விஷயம், கென்னாதிய், அண்ணா வருவதைப் பற்றி நீ சந்தோஷப்படவில்லையா?" என்று ஆன்யா கேட்டாள்.

"சந்தோஷமில்லையாவது? வேடிக்கைதான் போ. எனக்கு ஒரே மகிழ்ச்சி" என்றான்.

அந்நாளிலிருந்து அவனிடம் ஒரு விசித்திர மாறுதல் காணப்படலாயிற்று. அசட்டையும் மறதியும் அவனிடம் குடி கொண்டன. பாடங்களின் போதெல்லாம் ஜன்னலின் வாயிலாகப் பார்த்துக்கொண்டிருப்பான்; அவன் நினைவெல்லாம் வேறு எங்கோ இருப்பது புலப்படும். ஆசிரியர்களின் கேள்விகளுக்குச் சம்பந்தா சம்பந்தமின்றி ஏதோ பதில் அளிப்பான். நண்பர்களோடு சேராமல் ஒதுங்கலானான். ஆன்யாவிடம் ஒரு காரணமும் இன்றி முரட்டுத்தனமாக நடந்துகொண்டான். சட்டாம்பிள்ளை என்ற முறையில் அவள் அவனுக்கு என்ன நேர்ந்துவிட்டது என்று கேட்டபோது, 'என் காரியங்களில் தலையிடாதே' என்று சொல்லிவிட்டான். ப்ளீன்துஸோடு விளையாட்டரங்கில் சண்டையிட்டான்.

"இந்தா, நீ யார் தம்பி என்று பார்க்கமாட்டேன். விட்டேனோ ஒரு குத்து, அப்படியே பனிக்கட்டியில் தடாலென்று விழுந்து துடிப்பாய்!" என்று அவனை நெட்டித் தள்ளினான் ப்ளீன்துஸ்.

இருவரும் அடித்துக்கொள்ளாதவாறு கோல்யாதான் விசுவாசத்தோடு தடுத்தான்.

ஹாக்கிப் பயிற்சிக்குக்கூட கென்னாதிய் நேரம் தாழ்ந்து வரத் தொடங்கினான். கடைசி முறையாக உடற்பயிற்சி ஆசிரியர் குழல் ஊதியதுமே ஸ்கேட்டுகளைக் கழற்றி, ஹாக்கிக் கழியை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிடுவான். பள்ளியில் மோசமான மார்க்குகள் வாங்கினான். யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா அவனிடம் மனந்திறந்து பேச முயன்றபோது முறையில்லாமல் நடந்துகொண்டான். அதுமட்டுமல்ல, தன்னைத் தொந்தரவுசெய்ய வேண்டாம் என்று வேறு கூறிவிட்டான். தொய்ந்து போனான். பள்ளிப் படிப்பு, விளையாட்டரங்கு, ஏன், அண்ணன் வரவு ஆகிய ஒன்றிலுமே அக்கறை அற்றவன் ஆகிவிட்டான்.

அவனைத் தவறான போக்கிலிருந்து எப்படியாவது திருப்பி நேர்வழியில் செலுத்தும் நோக்கத்துடன் யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா ஒரு யுக்தி செய்தாள்.



"இந்தாருங்கள், பெண்களா! நம் கென்னாதிய்க்கு என்ன நேர்ந்துவிட்டதோ தெரியவில்லையே. எங்கே நீங்கள்தான் அவனை வழிப்படுத்துங்களேன்" என்று ஆன்யாவிடமும் அவள் தோழிகளிடமும் சொன்னாள்.

"அவனை வழிப்படுத்துவது நடக்கிற காரியமில்லை. யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா" என்று சிறுமிகள் கூறினர்.

"எதற்கும் முயற்சிசெய்து பாருங்கள். நான் உங்கள் நிலையில் இருந்தால் என்ன செய்வேன், தெரியுமா?"

ஆண்கள் குழுவைச் சேர்ந்த செருக்கு மிகுந்த ஆட்டக் காரர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என ஆன்யா நீண்ட காலமாக விரும்பியிருந்தாள். தனது குழுவைப் பற்றி கென்னாதிய் பெருமையடிக்கிறான் என்பது அவளுக்குத் தெரியும். யெவ்தொக்கீயா விளாஸியெவ்னாவின் ஆலோசனைப்படி ஆன்யா பையன்களை விளையாட்டுப் போட்டிக்குச் சவால் விட்டு அழைத்தாள். முதலில் பையன்கள் சிரித்தனர்.

"நீங்களா, ஐயோ பாவம், கீச்சுமூச்சுக் குழுவா! யாரைப் போட்டிக்கு அழைக்கிறோம் என்பதைக் கொஞ்சமாவது புரிந்து கொண்டிருக்கிறீர்களா?"

"அப்படியானால் பயப்படுகிறீர்கள் என்று ஆகிறது" என அமைதியாகக் கூறினாள் ஆன்யா.

"பயப்படுகிறோமா? எதைக் கண்டு? உங்கள் கீச்சுமூச்சுத்தான் காதைத் துளைத்துவிடும்" என்று கத்தினார்கள் சிறுவர்கள்.

"ஐந்து நிமிஷம் கூச்சல், அதற்குள் குழுவுக்குக் காய்ச்சல், நாலா புறமும் பாய்ச்சல்!" என்று கடகடவெனச் சிரித்தான் ப்ளீன்துஸ்.

"கூச்சல் போடுவதும் காய்ச்சலில் ஒடுவதும் யார் என்பதைப் பார்க்கத்தான் போகிறோம். உங்களுக்குக் கிலி பிடித்துவிட்டது, அவ்வளவுதான்" என்று விடாப்பிடியாகத் தொடர்ந்தாள் ஆன்யா.

"'கிலி பிடிப்பதற்கு' இதிலே என்ன இருக்கிறது? உங்களோடு விளையாட எங்களுக்குக் கொஞ்சமேனும் இஷ்டம் இல்லை, அவ்வளவுதான். ஹாக்கிக் கழி லேசாக மேலே பட வேண்டியதுதான்,

உடனே ஓடுவீர்கள் யெவ்தொக்கீயா விளாஸியெவ்னாவிடம் முறையிடுவதற்கு" என்று சிலுப்பினார்கள் பையன்கள்.

ஆனால் பெண்களோடு ஏற்கனவே மறைமுகத் திட்டம் போட்டிருந்த யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா போட்டிக்கு கிரீல் ஸ்தெபானவிச்சை இணங்கச் செய்தாள். ஆட்டம் முப்பது நிமிடங்களுக்கு மேல் இருக்கக் கூடாது. இடையில் ஐந்து நிமிடங்கள் ஓய்வு இருக்க வேண்டும். முரட்டுத்தனம் இல்லாமல் ஆடுவதாகப் பையன்களின் தலைவனாகிய செரிமிஷ் வாக்குறுதி தர வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கிரீல் ஸ்தெபானவிச் இசைவு தெரிவித்தார். வேறு வழியில்லாமல் பையன்கள் சவாலை ஏற்றுக்கொண்டனர்.



## சவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

யெவ்தொக்கீயா விளாஸியெவ்னாவின் திட்டம் சரியாகிவிட்டது; கென்னாதிய் பழைய கென்னாதிய் ஆகத் தொடங்கினான். ஆன்யா பராத்தவா போட்டிக்கு அழைத்தது அவனுக்குச்சுருக்கென்று தைத்தது. "அப்படியா சேதி! என் ஆட்டம் ஓய்ந்து போயிற்று என்று நினைக்கிறாளோ! சரி, சரி, காட்டுகிறேன் கைவரிசையை..." என்று கறுவிக்கொண்டான்.

"குறைந்தது பதினைந்து கோல்கள் மளமளவென்று, ஆவேசத்துடன், போடுவதற்கு நாம் முயற்சிசெய்ய வேண்டும். ஒவ்வொரு கோலுக்கும் இரண்டு நிமிடங்கள் என்பது என் கணக்கு" என்று தன் ஆட்டக்காரர்களிடம் சொன்னான்.

ஆண்கள் விடாப்பிடியாக ஆயத்தம் செய்தனர்; பெண்களும் அலுப்பின்றிப் பயிற்சி செய்தனர். சினிமாவுக்குப் பக்கத்தில் பனிக்கட்டி மூடிய ஒரு குளத்தைப் பெண்கள் விளையாட்டிடமாகப் பயன்படுத்தினர்.

மாணவர்கள் ஆற்றிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்பொழுது வேண்டுமென்றே பூங்காவிற்கு வந்து, குளத்தின் அருகே போய் மாணவிகளை ஏளனம் செய்வார்கள். ஒரு நாள் ப்ளீன்துஸ் ஆற்றங்கரையை அடுத்த குப்பைமேட்டில் செத்த கோழி ஒன்றைக் கண்டெடுத்து, அதனைத் தன்னுடன் குளக்கரைக்கு எடுத்துவந்து, ஆட்டக்காரிகள் காலடியில் அதைப் பனிக்கட்டி மேல் கடாசினான்.

"நீங்கள் ஆடுகிற ஆட்டத்திற்குப் பந்து ஒரு கேடா? உங்களுக்கு வேண்டியது எல்லாம் செத்த கோழியும் ஹாக்கிக் கழிக்குப் பதிலாகத் துடைப்பக்கட்டையும்தான். வேண்டுமானால் எடுத்து வரட்டுமா?" என்று கூச்சலிட்டான்.

"போங்கள் அப்பாலே, உம்! நாங்கள் எப்படிப் பயிற்சி செய்கிறோம் என்று நோட்டம் பார்த்தது போதும்!" என்று கத்தினாள் ஆன்யா.

"ஐயோ, அம்மா என்று கதறப் போவது யார் என்பதைப் பார்த்துவிடுகிறோம் ஒரு கை!" எனக் கணீரென்ற வாத்துக் குரலில் ஒத்துப்பாடினாள் கோல் கீப்பர் ரீத்தா.

சிறுமிகள் கெக்கலி கொட்டிச் சிரித்தார்கள். பையன்களுக்கு ஒரே அவமானமாய்ப் போயிற்று. ப்ளீன்துஸ் விரல்களால் காதுகளை மூடிக்கொண்டு முகஞ்சுளித்தான்.

கிளிமேன்திய் செரிமிஷ் அடுத்த நாள் நகரத்திற்கு வந்து சேரப் போகிறார் என்ற செய்தி ஆட்டத்துக்கு இரண்டு நாள் முன் வந்தது. வேட்பாளரைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்பதற்காக நகரம் பிரதானமாக அலங்கரிக்கப்பட்டது. ஒவ்வொரு தெரு மூலையிலும் அண்ணன் உருவப்படங்களை கென்னாதிய் பார்த்தான். கிளிமேய்திய் தன்னைத் தந்திரமாக உறுத்து நோக்குவதாக கென்னாதிய்க்குத் தோன்றியது. காற்றில் உருவப்படங்கள் உப்பிப் படபடத்தபோது, வீரன் தன் தம்பியைப் பார்த்துப் புருவத்தைச் சுளிப்பது போலவும் முறுவலிப்பது போலவும் தோன்றியது.

இந்த நாட்களில் கென்னாதிய் மீண்டும் உர்ரென்று முகத்தை வைத்துக்கொண்டு வாய்மூடியாக வளைய வந்தான். நண்பர்களிடமிருந்து விலகி ஒதுங்கினான். ஆட்ட மைதானத்தில் சளப்புவாயன் ப்ளீன்துஸ், "கென்னாதிய், உன் பாடு வேட்டைதான்! இரண்டு நாட்களில் அண்ணனைப் பார்ப்பாய்!" என்று சொல்லத் தொடங்கியதும் கென்னாதிய் அவனை இடைமுறித்து, "நண்பர்களே, வீண்பேச்சு வேண்டாம். வாருங்கள், முறைப்படி பயிற்சி செய்வோம். இல்லாவிட்டால் பெண்கள் நம்மை... விஞ்ஞானப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பது போல, தண்ணீர் மென்மையானதுதான் - நாம் அதில் மடாரென்று விழுந்து அடிபடாத வரையில்" என்றான்.

பள்ளியில் அவன் சற்றும் கட்டுக்கு அடங்காதவனாகப் போய் விட்டான். வீட்டுப் பாடங்களைச் செய்வதில்லை. பாடங்கள் நடக்கும்போது கவனிப்பதே கிடையாது. இதனால் உண்டான கிலேசத்தால் யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா அழாத குறையாய்த் தவித்தாள். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல, கிரீல் ஸ்தெபானவிச்சிடம், அவன் நடத்தைக்காக அவர் கடிந்து கொண்டபோது மரியாதையின்றி நடந்துகொண்டான். அவரோ



கிளிமேன்திய் செரிமிஷுக்குக் கடிதம் எழுதுவதாகவும், தம்பியின் வண்டவாளத்தை அம்பலப்படுத்துவதாகவும் பயமுறுத்தினார். "தாராளமாக அம்பலப்படுத்துங்கள்!" என்று கென்னாதிய் விடைத்தான். கிரீல் ஸ்தெபானவிச் கடுஞ்சீற்றம் அடைந்து, உண்மையாகவே விமானிக்குக் கடிதம் எழுதி, அதை ஓர் உறையில் போட்டு, கென்னாதியிடம் கொடுத்தார்.

"இந்தா, இதை நீயே அவரிடம் கொடுத்துவிடு. உன்னோடு வார்த்தையாடுவதில் பயனில்லை" என்றார்.

அவர் மிகவும் நல்லவர்; நேர்மையுள்ளவர். ஆனால் சிறிது முன்கோபக்காரர். கென்னாதிய் அவருடைய எரிச்சலைக் கிளப்பி விட்டுவிட்டான். போதாக்குறைக்கு மாவட்டத் தேர்தல் வேலையில் வேறு அவர் மும்முரமாக முனைந்திருந்தார். ஆக ஏற்கனவே பல்வேறு கவலைகளால் மண்டை வெடித்துவிடும் போலிருந்தது அவருக்கு. தாம் கொடுத்த கடிதத்துக்கு என்ன கதி நேரும் என்பதைப் பற்றி அவர் சிந்திக்கத் தானும் இல்லை.

வீரரை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் பள்ளிக்கூடத்திலும் நடந்தன. வகுப்பு முடிந்தபின் மாணவர்கள் செவெர்யான்ஸ்க் நகர மக்களோடு ரயில் நிலையம் செல்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. ரயில் மாலையில் ஐந்து மணிக்கு வரவிருந்தது.

அன்று கென்னாதிய் எங்கோ மறைந்துவிட்டான்.

அதிகாலையிலேயே புத்தகங்கள், ஸ்கேட்டுகள், ஹாக்கிக் கழி ஆகியவற்றை உடன் எடுத்துக்கொண்டு குழந்தைகள் இல்லத்தை விட்டுப் போய்விட்டான். தான் ஆன்யாவிடமிருந்து வர்ணங்களைப் பெறும் பொருட்டு முன்னதாகச் செல்வதாக நண்பர்களிடம் சொல்லியிருந்தான். நடக்கப்போகும் போட்டி பற்றிப் பெரிய விளம்பரப் போஸ்டர் தீட்டுவதாகக் கூறியிருந்தான். பள்ளிக்கூடத்துக்கு அவன் வரவில்லை. இரண்டாவது பாடத்திற்கும் அவன் வரக் காணோம். யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா மிகவும் கவலைப்பட்டாள். கென்னாதிய் எங்கு சென்றிருப்பான் எனப் பலமுறை வகுப்புச் சட்டாம்பிள்ளையைக் கேட்டாள். கென்னாதிய்டம் தாம் கடிதம் கொடுத்ததாகவும் எனவே அண்ணனைச் சந்திக்கப் பயந்துபோய் கென்னாதிய் ஓடியிருப்பான் என்றும் கிரீல் ஸ்தெபானவிச் அவளிடம் கூறினார்.

யெவ்தொக்கீயா விளாஸியெவ்னாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"இந்த மாதிரிச் செய்ய உங்களுக்கு எப்படி மனம் வந்தது? அண்ணன் மேல் அவனுக்கு ஒரே பக்தி என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. ஐயோ, கிரில் ஸ்தெபானவிச், எப்படித்தான் உங்களுக்கு இப்படித் தோன்றிற்று! இப்போது என்ன ஆகிவிட்டது பாருங்கள். அந்தப் பையன் அனாதை, மிகவும் கஷ்டப்பட்டவன், ஏற்கனவே ஒரு குழந்தைகள் இல்லத்திலிருந்து ஓடிவிட்டவன். இதை எல்லாம் நீங்கள் கவனத்தில் வைத்திருக்க வேண்டும். இப்போது என்ன செய்வது? அண்ணன் வந்து கேட்டால் நாம் என்ன சொல்வது?" என்றாள்.

கென்னாதிய் மறைந்துவிட்டதைக் குறித்துக் குழந்தைகள் இல்லத்திலும் எல்லோரும் கவலைப்பட்டனர்; ஆனால் கடிதத்தைப் பற்றி அங்கே ஒருவருக்கும் தெரியாது.



## வரவேற்பு

ரயில்வே நிலையம் பிர் மரக் கிளைகளாலும் கொடிகளாலும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

'நமது வேட்பாளருக்கு நல்வரவு! சோஷலிஸ்ட் தாய்நாட்டின், அதன் செஞ்சேனையின் வீரப் புதல்வர் வாழ்க!' என்று எழுதப்பட்ட செந்நிறமான நீண்ட பாவட்டா கூதல் காற்றில் படபடத்தது.

மாணவர்கள் பிளாட்பாரத்தின் விளிம்புக்கு ஓடித் தூரத்தில் பார்வையைச் செலுத்தினர். பலமான காற்று அடித்துக் கொண்டிருந்தது; கீழே சில குருவிகள் தத்திக்கொண்டிருந்தன.

நீர்த் தேக்கக் கோபுரத்தின் பின்னிருந்து ரயில் வெளிப்பட்டது. வெண்பனி மூடிய எஞ்சின் பெருத்த ஓசையுடன் சீறியது. குருவிகள் அதற்கு வழிவிட்டு மேலே பறந்து சென்றன. எஞ்சின் கம்பீரமாகச் சங்கு ஊதியது. அந்த ஒலி அடங்குவதற்குள் இசைக் குழுவினர் வாத்தியங்களை முழக்கினர். பிளாட்பாரத்தில் ஒரே நெருக்கம் ஏற்பட்டது.

எல்லோரும் 'வாழ்க' என்று ஆரவாரித்துக் கைதட்டினர். மற்றவர்களின் தலைகளுக்கு மேலாக வீரனை எட்டிப் பார்ப்பதற்காகச் சிட்டுக்குருவிகள்போலத் தத்திக் குதிக்கத் தொடங்கினர் மாணவர்கள். ஜன்னல் கண்ணாடியின் பின் அவர் தோன்றியதை கவனித்தவர்கள் அவர்களே.

"அதோ அவர்! அதோ அவர்!" எனக் கூச்சலிட்டனர்.

கட்டுக்குட்டான மேனியும் வெண்பற்களும் களிப்பில் மலர்ந்த முகமுமாக வீரர் பெட்டியின் கதவுக்கு வந்தார். பனியால் மங்கிய பித்தளைப் பிடியை ரோமக் கையுறை அணிந்த ஒரு கையால் பற்றிக்கொண்டு, இன்னொரு கையால் யாவருக்கும் வணக்கம் தெரிவித்தார். மாணவர்கள் முதல் காரியமாகக் கவனித்தது

அவருடைய மேல் கோட்டின் கையில் இருந்த மேஜர் அடையாளச் சின்னங்களைத்தான். அவர் விமானத்தில் வராமல், எல்லோரையும் போல ரயிலில் வந்ததுதான் அவர்களுக்கு ஏமாற்றம் அளித்தது. வீரனின் முகமும் முதல் பார்வைக்கு மிகவும் சின்னதாகத் தென்பட்டது. படங்களில் அது பிரம்மாண்டமாய் இருந்தது. தங்க நட்சத்திரப் பதக்கத்தையும் விருதுகளையும் காணோம். அவை மேல்கோட்டுக்கு அடியில், சட்டையில் இருந்தன போலும்.

வீரரை நன்றாகப் பார்ப்பதற்காகப் ப்ளீன்துஸ் ஒரு விளக்குக் கம்பத்தின் மீது ஏறி, "நம் கென்னாதியின் சாயல் இருக்கிறது" என்றான்.

"எதிலே?" என்று கீழிருந்து கேட்டனர் சிறுவர்கள்.

"அதாவது, மொத்தத்தில் சாயல் இருக்கிறது. உதாரணமாக மூக்கு இருக்கிறதே, அதே அச்சு...!"

"கென்னாதியின் மூக்கு மாதிரியே முகத்தின் நடுவில் இருக்கிறதாக்கும்" என்று கெக்கலித்தனர் சிறுவர்கள்.

எவனோ ப்ளீன்துஸ் காலைப் பிடித்து இழுக்கவே, அவன் வெண்பனியின் மீது தொப்பென்று விழுந்தான்.

"கென்னாதியைத்தான் காணவே காணோம்" என்று பெரு மூச்செறிந்தான் கோல்யா.

வரவேற்புக்காகக் கட்டப்பட்ட மரமேடையின் மீது சிலர் ஏறினர். பிறகு சொற்பொழிவுகள் தொடங்கின.

வீரர் இராணுவ முறைப்படி வணக்கம் செய்துவிட்டு, நல்லியல்பும் கூச்சமும் ததும்பும் புன்னகையுடன் வரவேற்புரைகளைக் கேட்டார்.

செவெர்யான்ஸ்க் பள்ளி மாணவர்கள் சார்பாக வரவேற்புரை கூறும் பொறுப்பு ஆன்யா பராத்தவாவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. கால்கள் உணர்ச்சியற்றுத் துவள, மேடைமீது ஏறியவள், படியில் இடறி விழத் தெரிந்தாள். கடுங்குளிரில் ஜனங்கள் விட்ட மூச்சிலிருந்து ஆவிப்படலம் கிளம்பியது. சிவப்பேறிய முகங்களை அதன் ஊடே கண்டாள் ஆன்யா. குண்டன் ப்ளீன்துஸ் அவளுக்குத் தைரியம் ஊட்டுவதற்காகத் தூரத்திலிருந்து கண் ஜாடை செய்து கொண்டிருந்தான்.



ஆன்யா பேச்சைத் தொடங்கினாள்: "அன்புள்ள தோழர் செரிமிஷ் அவர்களே! செவெர்யான்ஸ்க் பள்ளி மாணவர்களாகிய நாங்களும் எல்லா முன்னணி இளைஞர்களும் மொத்தத்தில் எல்லாச் சிறுவர் சிறுமியரும் தங்களைப் போன்ற வீரரைக் கண்டு உள மகிழ்கிறோம்..."

பேசும்போதே பல சொற்கள் தொண்டைக்குள்ளேயே அமுங்கிவிடுவதை உணர்ந்தாள்; கடுங் குளிர்காற்றால் தொண்டை அழன்று போயிற்று. விமானி தன்னைத் தடுத்து, "எல்லாம் சரிதான், என் தம்பி கென்னாதிய் எங்கே?" எனக் கேட்டுவிடுவாரோ என்று பயந்தாள்.

ஆனால் விமானி ஒன்றும் கேட்கவில்லை. அவள் பேச்சில் குறுக்கிடவில்லை. அவள் சொல்லியவற்றை எல்லாம் முடிவு வரை காதில் வாங்கிக்கொண்டு, தாம் பேச முன்வந்தார்.

கை தட்டல் நின்றவுடன் ஆழ்ந்த, தணிவான குரலில் பின்வருமாறு சொன்னார்:

"என் அருமைத் தோழர்களே, நானும் இப்பகுதியைச் சேர்ந்தவன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்; ஹலதாயிவோ ஊரில் பிறந்தவன் நான்; நீங்கள் யாவரும் என்னை அளவுக்கு மீறிப் புகழ்ந்துவிட்டீர்கள். இத்தகைய புகழுக்கு நான் அருகன் அல்ல. இந்த நிலையை நான் தானாகவே அடைந்து விடவில்லையே. எல்லாவற்றுக்காகவும் நான் யாருக்குக் கடமைப்பட்டவன்? எல்லாவற்றுக்கும் முன்னதாக நான் கடமைப்பட்டவன் கட்சிக்கு. நமது கம்யூனிஸ்ட் கட்சிக்கு. நம்முடைய தொழிலாளர் விவசாயிகளின் செஞ்சேனைக்கு. என்னை வளர்த்து, கற்பித்து உருவாக்கியவை இவையே. புரிந்ததா? உங்கள் அனைவருக்கும் நான் அவ்வாறே கடமைப்பட்டவன். நாம் எல்லோரும் ஒரே மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள், நமது மாபெரும் குடும்பம் ஒன்றே, சந்ததிகள் ஒன்றே, நாம் யாவருமே ஒருவருக்கொருவர் உறவினர்கள். சிறுவர்கள் சொல்லுவது போல நாம் ஒருவருக்கொருவர் சொந்தக்காரர்கள். அப்படித்தான் நினைக்கிறேன்."

# குட்டு வெளிப்பட்டது

ரயில்வே நிலையத்திலிருந்து வீட்டுக்கு வந்த உடனே, ஆன்யா கதவுக்கு வெளியே தொங்கிய தபால் பெட்டியில் ஏதேனும் இருக்கிறதா என்று வழக்கம்போலப் பார்த்தாள். இதுவரை அவளுக்கு யாரிடமிருந்தும் கடிதம் வந்ததில்லை; ஆனால் தகப்பனாருக்கு மாஸ்கோவிலிருந்து மாதந்தோறும் சஞ்சிகை இதழ் வரும். இத்தடவையோ அதில் ஒரு சிறிய உறை இருப்பதைக் கண்டாள். அது நோட்டுப் புத்தகக் காகிதத்தால் செய்யப்பட்டது. அதன்மீது ஆன்யா பராத்தவாவின் பெயர் எழுதப்பட்டிருந்தது. அண்ணனது போலவே பெரிய வட்ட எழுத்துக்களும் அழுத்தமான கோடுகளும் கொண்ட கென்னாதிய்ன் கையெழுத்தைத் தெரிந்துகொண்டாள்.

'வணக்கம், ஆன்யா. இன்று மாலை எட்டு மணிக்குப் பூங்காவில் ஸ்கேட்டிங் ரிங்குக்கப்பால் கோடைகாலத்தில் இசைக் குழுவினர் அமரும் இடத்தில் என்னை வந்து காண். ஒரு மிக முக்கியமான, அவசரமான காரியமிருக்கிறது. இதைப் பற்றி யாருக்கும் சொல்லாதே. உன்னை எதிர்பார்ப்பேன். என்னவோ ஏதோ என்று நினைக்காதே. இதில் விஷமம் ஒன்றுமில்லை. உன்னை நம்புகிறேன்' என்று அதில் எழுதியிருந்தது.

"இது வேறா? அப்படி என்ன இரகசியம்?" என்று ஆன்யா கோபித்துக்கொண்டாள். அல்லது மிகவும் கோபப்படுவதாக எண்ணிக்கொண்டாள். உண்மையிலோ, கென்னாதிய் திரும்பி வந்ததைப் பற்றி மகிழ்ச்சியே அடைந்தாள். அவன் ஏன் அவ்வாறு மாறியுள்ளான் என்பதைக் கடைசியாகத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு அவளுக்குக் கிடைக்கலாம். இதில் ஏதோ சூட்சுமம் இருக்க வேண்டும். ஒரு காரியமாகப் பள்ளிக்கூடம் போக வேண்டும் என்று தாயாரிடம் சொல்லி வெளியில் போக அனுமதி வாங்கிக்கொண்டாள்.



ஒரே கடுங்குளிர். ஸ்கேட் அலகு போலக் கூரிய வெள்ளிப் பிறை மதி மேகப் படலங்களுக்கு ஊடே தழுவியது. மினுமினுக்கும் வெண்பனிச் சிதறல்கள் காற்றில் மொய்த்தன. தரையில் கருநிழல் படிந்த இடங்களில்கூட வெண்பனிமீது ஏதோ சுடர்ந்தது.

வெண்பனி மூடிய பூங்கா வெறிச்சோடி, பயங்கரமாகக் காணப்பட்டது. காய்ந்த கிளைகளிலிருந்து காற்றில் உடைந்த வெல்வெட் உறைபனி அடலாக விழுந்துகொண்டிருந்தது. வெண்பனியின் பாரத்தினால் வளைந்த கிளைகள் கொண்ட நெடிய பிர் மரங்கள் பின்னங்கால்கள்மீது நிற்கும் துருவக் கரடிகளைப் போலக் காணப்பட்டன. தூரத்தில் ஆற்றிலுள்ள விளையாட்டு இடத்திலிருந்து இசை கேட்டது; அதைத் தவிர வேறொரு சத்தமுமில்லை. குளிர்காலத்தில் காட்டில் இருப்பது போன்ற பேரமைதி குடிகொண்டிருந்தது.

"ஆன்யா! இதோ நான்" என்று அவளுக்குப் பின்னிருந்து குரல் கேட்டது.

அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"இது என்ன புது வழக்கம்? எங்கே போய்த் தொலைந்தாய்? அங்கே பள்ளிக்கூடத்திலும் குழந்தைகள் இல்லத்திலுமானால் எல்லோரும் பைத்தியம் பிடித்தவர்கள்போல உன்னைத் தேடி அலைகிறார்கள். ஆமாம், இன்னும் என்ன இரகசியம் பிரமாதம்? வெறும் மட்டித்தனம்!" என்று அவன்மீது பாய்ந்து பொரிந்து கொட்டினான்.

"மட்டித்தனம் என்றால் எதற்காக வந்தாயாம்?"

"எதற்கு வந்தேன் என்று கேட்க நீ யார்? இவனுடைய இரகசியத்துக்காக நான் குளிரில் கிடந்து விறைக்க வேண்டியிருக்கிறது! ஊம், அப்படி என்ன பிரமாத விஷயம்?"

தன்னுடைய கூச்சத்தையும் ஆவலையும் வெளிக்காட்டாது மறைப்பதற்காகவே ஆன்யா வேண்டுமென்று கோபத்தோடு பேசினாள். தான் ஒரு கடிதம் எழுதியதுதான் தாமதம், அவள் ஓடோடி வந்துவிட்டாள் என்று கென்னாதிய் ஏதேனும் தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாதே.

"நான் ஏதோ உனக்காக ரொம்பவும் கவலைப்படுவதாக எண்ணிவிடாதே. சும்மாதான் இப்படி. வகுப்பு சட்டாம்பிள்ளையாய்

இருக்கிறோமே, இது நமது கடமை ஆயிற்றே என்று வந்தேன்" என விளக்கினாள்.

"நீ வகுப்புச் சட்டாம்பிள்ளை ஆனதால் உன்னிடம் சொல்ல விரும்புகிறேன். சிரிக்க மட்டும் செய்யாதே" என்று கென்னாதிய் தாழ்ந்த குரலில் கூறினான். "உனக்குத் தெரியுமா, ஆன்யா... நீ மட்டும் யாரிடமும் மூச்சுக் காட்டக் கூடாது. ஊம்? பெரிய சங்கடத்தில் மாட்டிக்கொண்டு தப்ப வகை தெரியாமல் தவிக்கிறேன். சத்தியமாக ஒருவரிடமும் சொல்ல மாட்டாயே?"

"சத்தியமாகச் சொல்ல மாட்டேன்."

"இல்லை, நீ சிரிப்பாய் என்று எனக்குத் தெரியும்."

"இதுவரை வேடிக்கை எதையும் காணோமே. அட போடா!"

"யாருக்குமே சொல்லமாட்டேன் என்று சத்தியம் செய். உனக்கு ஒருத்திக்குத்தான் சொல்வேன். உனக்குள்ளேயே வைத்துக்கொள். ஊம்? ஆன்யா, சத்தியமாகச் சொல்லு."

"என்னை நம்பாவிட்டால், எதற்காக எழுதினாய்? விந்தைதான்!"

கென்னாதிய் பெருமூச்சு விட்டான். "சரி, சொல்லுகிறேன். இதோ பார், ஆன்யா... நான் வந்து, அதாவது, ஆன்யா.... கேட்டால் நீ சிரிக்கத்தான் போகிறாய். நான், அவருடைய தம்பியே இல்லை" என்றான்.

"யாருடைய தம்பி இல்லை?"

"யார் என்று தெரியவில்லையா? கிளிமேன்திய் செரிமிஷின் தம்பி இல்லை."

"தம்பி இல்லையாவது? அப்படியானால் யாராம்?" என்று ஆச்சரியத்தோடு ஆன்யா கேட்டாள்.

"அதே குலப்பெயர் உள்ளவன், அவ்வளவுதான். நானும் ஹலதாபிவோ சிற்றூரைச் சேர்ந்தவன். அந்த ஊரில் பாதிக்கு மேல் ஜனங்களுக்குச் செரிமிஷ் என்பதே குலப்பெயர். அப்பெயரோடு தெருக்கள்கூட இருக்கின்றன: மேல் செரிமிஷ் தெரு, கீழ் செரிமிஷ் தெரு, செரிமிஷ் சந்து என்று. அவரும் நானும் குலப்பெயரில் ஒத்தவர்களே தவிர, ஒரு வகையிலும் சகோதரர்கள் அல்ல. என் வாழ்நாளில் அவரைப் பார்த்ததே கிடையாது. சும்மா



தானாகவே இதை எல்லாவற்றையும் கற்பனை செய்துகொண்டேன். என் பெற்றோர்கள் எப்போதோ இறந்துவிட்டனர். உறவினர் யாருமில்லை. ஒரே ஒரு அக்காள்: அவள்கூடக் காணாமல் போய்விட்டாள். நான் தனியன் ஆகிவிட்டேன். என்னைக் குழந்தைகள் இல்லத்தில் சேர்த்தனர். அப்புறம் இப்படிச் சுற்றித் திரிந்தேன். அப்போதுதான் இந்த மாதிரி எல்லாம் கற்பனை செய்துகொண்டேன். வேடிக்கையாகத்தான் இருக்கும்... அவரைப் பற்றி செரிமிஷ் என்ற விமானி இருக்கிறார், மகா தீரர் என்று செய்தித்தாளில் படித்தேன்... அவருடைய உருவப்படமும் அதில் வெளியாகியிருந்தது. இப்படிப்பட்ட அண்ணன் மட்டும் எனக்கு இருந்திருந்தால், இந்த நிலைமையில் இருந்திருக்கமாட்டேனே என்று நினைத்துக்கொண்டேன்... அதை நாள்தோறும் இடைவிடாமல் அப்படியே கற்பனை செய்துகொள்ளத் தொடங்கினேன். எனக்குப் பழகிக்கூடப் போய்விட்டது. உண்மையிலேயே அப்படி ஓர் அண்ணன் இருப்பதுபோல... இது உனக்கு வேடிக்கையாக இருக்கும். அப்படித்தானே?..."

ஆன்யாவோ, சிரிக்கவே இல்லை.

"கடிதங்கள் எப்படிக் கிடைத்தன? கடிதங்களைக்கூட நீயே?..." என்று கலவரத்துடன் வினவினாள்.

"இல்லை, கடிதங்கள் உண்மையானவை. மாஸ்கோவில் உள்ள என் அக்காளிடமிருந்து வந்தவை. அவள் குலப்பெயர்கூட செரிமிஷ்தான். கிளாவ்தியா செரிமிஷ்.

ஓர் அண்டங்காக்கை மரத்தின் மேல் உட்காரவே கிளை அசைந்து உறை பனித் துகள் அவர்கள்மீது சொரிந்தது. ஆன்யா துணுக்குற்றாள்.

"இம்மாதிரிக் கதைகட்ட உன்னால் எப்படி முடிந்தது? ஆனாலும் நீ கொஞ்சங்கூட வெட்கமே இல்லாதவன். இப்படிப் பொய் சொல்லி ஆக வேண்டியதுதான் என்ன? நாங்கள் எல்லோரும் என்னவெல்லாம் நினைத்தோம்... சே!"

"பொறு, கொஞ்சம் கேள்... நான் அப்படி எதற்காகச் செய்தேன் என்று தெரியுமா? மற்றவர்கள் மதிப்பதற்காக என்று நினைக்கிறாயோ ஒருவேளை! அல்லவே அல்ல. ஆணையிட்டுச் சொல்லுகிறேன்... எனக்காகவேதான் செய்தேன். நான் ஒழுங்குபட்டேன். கட்டுப்பாட்டை வளர்த்துக்கொண்டேன். படிப்பிலும் அண்ணன் பெயரை

இழிவுபடுத்தக்கூடாதே என்பதற்காகப் பாடுபட்டேன். அதாவது, இந்த இவருக்காக... வேடிக்கையாகத்தான் இருக்கும்.... ஆன்யா, முதலில் அவர் இவ்வளவு புகழ் பெற்றிருக்கவில்லை. பிறகுதான் ஒன்றன்பின் ஒன்றாக விருதுகள் பெறத் தொடங்கினார்... அவர் புகழ் நெடுகப் பரவிவிட்டது. எனக்கு எக்கச்சக்கமாகக்கூட இருந்தது. 'ஓஹோ, நீங்கள் அவருடைய சகோதரரா, செரிமிஷின் தம்பியா!' என்று எல்லோரும் சொல்கிறார்கள். இப்போது இதை மறுக்கவும் என்னால் முடியவில்லை, விருப்பமுமில்லை; என் வாழ்க்கையில் அது பிரதானமாகிவிட்டது. எனக்கு எப்போது மிகவும் சங்கடமாய்ப் போயிற்று தெரியுமா? பறப்பின்போது அண்ணன் காணாமல் போய்விட்டாரே, நினைவிருக்கிறதல்லவா, அப்போது... மறுபடி அண்ணன் என்கிறேனே. அதாவது... யார் என்பது தெரிந்ததுதான். வகுப்பில் நீங்கள் எல்லோரும் என் மேல் எவ்வளவு பரிவு காட்டினீர்கள்! உண்மையாகவே எல்லோரும் தவித்துப் போனீர்கள். எனக்கோ வெட்கம் பிடுங்கித் தின்றது. நீ என்னவோ நினைக்காதே. நானுந்தான் மெய்யாகவே துடித்துப்போனேன். பின்னே என்ன! எப்படி இருந்தாலும் சுமார் மூன்று ஆண்டுகாலம் அவரை என் அண்ணனாக மதித்துப் பழகிப் போய்விட்டேன் அல்லவா?"

கென்னாதிய் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த ஆன்யாவுக்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருந்தது. நாள் கணக்காக, வருஷக் கணக்காக இந்த விந்தையான, கடினமான நாடகத்தை ஒருவன் எப்படி ஆட முடியும்?

அண்ணனைப் பற்றிய கனவு!... கென்னாதிய் கவனிப்பாரற்று அலைந்து திரிந்தபோது இந்தக் கனவு அவனுக்குத் தோன்றியது. அது உயர்ந்த, கண்ணைப் பறிக்கும் ஒளிகொண்ட, தொலைதூரக் கனவு. மலைவிளக்குப் போன்ற மனோரதம். கென்னாதிய்க்கு அது வாழ்க்கையில் துணை செய்தது. வழியுங்காட்டியது. அஞ்சாநெஞ்சங்கொண்ட விமானியும் கம்யூனிஸ்டுமான செரிமிஷின் ஆதர்சம் அவன் வாழ்க்கைப் பாதையில் ஒளி வீசிற்று. இத்தகைய வியக்கத்தக்க மனிதர்கள் இவ்வுலகில் உள்ளனரே. அவர்களுடன் இரத்த சம்பந்தம் இல்லாதது கென்னாதியின் குற்றமா? ஆனால் இப்பொழுது...

"இப்பொழுது என்ன செய்வது?" என்று ஆன்யா கலங்கினாள்.

"எனக்கே தெரியவில்லை" என்றான் கென்னாதிய். "படிப்பில் எனக்கு முன்னேற்றமில்லாமை பற்றியும் ஒழுங்கின்மை பற்றியும்



கிரீல் ஸ்தெபானவிச் வேறு ஒரு குறிப்பு எழுதி அவரிடம் கொடுக்கும்படி என்னிடம் தந்திருக்கிறார். ஆக நான் தொலைந்தேன், ஆன்யா... நான் எங்கேயாவது போய்விடுவதே மேல். எப்படியும் இங்கேயோ இனிமேல் இருக்க முடியாது... பிள்ளைகள் ஓயாமல் பரிகசிப்பார்கள். அதிலிருந்து தப்பவே முடியாது. நான் இங்கிருந்து கம்பி நீட்டிவிட வேண்டியதுதான்..."

"இதோ பார் கென்னாதிய், இதெல்லாம் கவைக்குதவாத பேச்சு! நீ எங்கே போவாய்? மறுபடியும் தறிகெட்டுத் திரியப் போகிறாயா என்ன? கேட்கவே வெட்கமாயிருக்கிறது. நீ இப்படிப் பேசுவதானால் பெரிய வீரரை அண்ணனாகக் கொண்டிருந்ததால் உனக்கு ஒரு நன்மையும் ஏற்படவில்லை என்று ஆகிறது. என்னைக் கேட்டால், தோழர் செரிமிஷ தங்கியிருக்கும் இடத்திற்குப் போய் எல்லாவற்றையும் உள்ளபடி சொல்ல வேண்டும் என்பேன். அவர் கோபப்பட மாட்டார் என்று எனக்கு ஏனோ உறுதியாய்ப் படுகிறது" என்று ஆன்யா சொன்னாள்.

"சரி, அப்புறம் என்ன ஆகும்?"

"என்ன ஆகும் என்பது அங்கே தெளிவாகிவிடும். அல்லது இப்படிச் செய்வது மேலாயிருக்கும். பொறு! முதலில் நான் அவரிடம் போய் ஜாடையாகச் சொல்லி முன்னேற்பாடு செய்கிறேன். பிறகு நீ சென்று யாவற்றையும் விவரமாகத் தெரிவிக்கலாம்."

பெண்ணின் தீர்மானம் நிறைந்த முகத்தை மதிப்போடு பார்த்துக்கொண்டு, "நீயே யாவற்றையும் சொல்லிவிடுகிறேன் என்கிறாயா?" என்று கென்னாதிய் பிரமிப்போடு கேட்டான்.

"ஆமாம் நானே சொல்வேன்! வேறு என்ன? என்னையோ அவருக்குத் தெரியும். அவரைப் பார்த்தது மட்டும் அல்லாமல், ரயில்வே நிலையத்தில் வரவேற்கவும் செய்தேன். அவர் சுமுகமான மனிதர், புரிந்துகொள்வார். இங்கேயே எனக்காகக் காத்திரு. இதோ வந்துவிடுகிறேன்..."

## தன்னவரும் மற்றவரும்

கதவை யாரோ மெல்லத் தட்டியது கேட்கவே "வாருங்கள்!" என்றார் கிளிமேன்திய் செரிமிஷ்.

அவரை நிம்மதியாக இருக்க மக்கள் விடுவதில்லை என்பது கிளிமேன்திய் செரிமிஷுக்கு நீண்ட காலமாகவே பழக்கமாகிவிட்டது. லெனின்கிராத், வரோனெஷ், ஒதெஸ்ஸா, திபிலீஸி, வ்ளா திவஸ்தோக், மீன்ஸ்க் அல்லது அர்காங்கில்ஸ்க் நகர ஹோட்டல் அறையில் அவர் பெட்டியை வைக்க வேண்டியதுதான் தாமதம், உடனே டெலிபோன் மணி கணகணப்பதும் அறைக்கதவு மெல்லவோ, பலமாகவோ தட்டப்படுவதும் தொடங்கிவிடும். அறிமுகமில்லாதவர்கள் மரியாதை நிறைந்த தயக்கத்துடன் கதவைத் தட்டி உள்ளே செல்வார்கள். தொழிற்சாலையையோ, பள்ளிக்கூடங்களையோ, கல்லூரியையோ அலுவலகத்தையோ வந்து பார்வையிடுமாறு அழைப்பார்கள். யோசனை கேட்பார்கள், கையொப்பம் வேண்டுவார்கள், தாங்கள் எழுதிய பாட்டுக்களை வாசித்துக் காட்டுவார்கள். பலவற்றைப் பற்றி அவரிடம் விசாரிப்பார்கள். மகிழ்பொங்குவார்கள். கிளிமேன்திய் இந்த ஆரவாரத்துக்கெல்லாம் பழகிவிட்டபடியால் மெல்லியல்புள்ள நளினத்துடனும் சகிப்புத்தன்மையுடனும் இதை ஏற்றுக்கொண்டு, வருபவர் ஒவ்வொருவருடனும் சற்று நேரம் அளவளாவுவார்.

"உள்ளே வாருங்கள்!" என்று விமான ஓட்டி திரும்பவும் சொன்னார்; யாருமே நுழையவில்லை. "தாழ்ப்பாள் திறந்து இருக்கிறது!" என்று கிளிமேன்திய் உரத்த குரலில் கூறினார்.

யாரோ பிறாண்டியது போன்ற சத்தம் கேட்டது; ஆனால் ஒருவரும் உள்ளே வரவில்லை. வெளியில் இருந்த ஆளால் கதவைத் திறக்க முடியவில்லை போலும். செரிமிஷ் சோபாவிலிருந்து எழுந்து, கதவைத் திறக்கச் சென்றார். அங்கே பயனீர் ஒருத்தி நின்றிருந்தாள். அவள் மென்மயிர்க் குல்லா அணிந்திருந்தாள்;



செவிக்குழாய் வடிவாகச் சுருட்டிக் கட்டிய இரண்டு பின்னல்கள் அதற்கு வெளியே துருத்திக்கொண்டிருந்தன.

"தயவுசெய்து வாருங்கள்! நான் உங்களை முன்பே பார்த்திருந்தது போல் தெரிகிறது. ஆமாம், இப்போது ஞாபகம் வருகிறது! ரயில்வே நிலையத்தில் பேசியது நீங்கள் தானே; நாம் இருவரும் பழகிய நண்பர்கள் ஆகிவிட்டோமே. அருமையாகப் பேசினீர்கள்! உட்காருங்கள், உங்களுக்கு என்ன வேண்டும்?"

டெலிபோன் மணி அடித்தது. உடனே ரிசீவரைக் கையில் எடுத்துக்கொண்டு "ஹல்லோ, ஆமாம், நான்தான் செரிமிஷ். நல்லது, வாருங்கள்; ஆனால் சீக்கிரமாக வாருங்கள். நான் நகர சோவியத்தின் கூட்டத்திற்கு விரைவில் புறப்பட்டுச் செல்ல வேண்டும்" என்றார்.

எல்லா விமானிகளையும் போலவே (பறக்கும்போது இயங்கு சக்கரத்திலிருந்து கையை எடுக்காமல் நேரத்தை அறிவதற்கு வாய்ப்பாக) அங்கைப்புறம் முகப்பு வரும்படிக் கட்டிக்கொண்டிருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

இதற்கிடையில், ஆன்யாவின் துணிச்சல் எல்லாம் காற்றாய்ப் போய்விட்டது.

ஆச்சரியந்தான்: ஐந்து நிமிடங்களுக்கு முன் எல்லாம் சுலபமாகத் தோன்றியது. விடுதிக்குப் போவது, 'தோழர் செரிமிஷ் அவர்களே, எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு பையன் உங்களுடைய தம்பியாக நடித்து வந்தான். உண்மையிலோ, அவன் உங்கள் தம்பியே அல்ல. இப்போது அவதிப்படுகிறான். தங்களிடம் சொல்லக் கூசுகிறான்...' என்று கூறுவது, அவ்வளவுதானே.

இருந்தபோதிலும், நாடெங்கும் புகழ் பெற்றவர், கம்பளத்தின் மேல் வெள்ளிய மூடுசெருப்புகளோடு மெல்ல நடந்து கொண்டிருப்பதையும், அவர் மார்பில் பல வரிசை விருதுகள் ஒளிர்வதையும் கண்டபோது, சொல்ல நினைத்ததை எல்லாம் மறந்து விட்டாள். என்ன சொல்வது? அவர் கோபங்கொண்டு 'நீங்கள் என்ன உளறுகிறீர்கள்? நான் முக்கியக் காரியமாக வந்திருக்கிறேன். கதையைச் சொல்லி என் நேரத்தைப் போக்குகிறீர்கள்; எவனோ ஒரு போக்கிரிப் பயல் என்னுடைய தம்பி என்று பாசாங்கு செய்கிறானாக்கும். நீங்கள் அந்தக் கதையைச் சொல்ல வந்து

விட்டீர்களாக்கும், தலை வேதனை!' என்று எரிந்து விழுந்தால் என்ன செய்வது என நினைத்தாள்.

"உங்கள் பெயர் என்ன?"

"ஆன்யா பராத்தவா."

"நல்லது, ஆன்யா பராத்தவா; உங்களுக்கு என்ன வேண்டும்?"

ஆன்யா நன்றாக மூச்சு இழுத்துக்கொண்டு, பயத்தை அடக்கிக்கொண்டு, சொல்லத்தொடங்கினாள்:

"வந்து, எங்களுக்கு, அதாவது... உங்களுக்கு ஒரு தம்பி இருக்கிறான், எங்களுக்கு அவன்..."

"என்ன இது, எங்களுக்கு, உங்களுக்கு?" என்று கிளிமேன்திய் களுக்கெனச் சிரித்தார்.

யாரோ கதவைத் தட்டினார்கள்.

முகமெல்லாம் கனிந்த புன்னகை மலர ஒரு கிழவி வந்தாள். தலைக்குட்டையை ஒரு காதுக்கு மேலிருந்து நீக்கிவிட்டு காது முன்னாகப் பக்கவாட்டில் நடந்து விமானியை அணுகி, விரல்களை நேர்விறைப்பாக இறுகச் செய்து அவருடன் கைகுலுக்குவதற்காகக் கரத்தை நீட்டினாள்.

"உனக்குத் தொந்தரவு கொடுப்பதற்காக இந்தக் கிழவியை மன்னித்துக்கொள். உன்னைப் பார்க்க எனக்கிருந்த ஆர்வம் சொல்லி முடியாது... உன்னைப் பற்றிச் செய்தித்தாள்களில் நிறைய எழுதுகிறார்கள். ரொம்ப நன்றாக விமானம் ஓட்டுகிறாயாம்." என்றாள்.

வளவளவென்று பேசிய கிழவியின் பக்கம் சாய்வு நாற்காலியை நகர்த்தி அவளை உட்காரச் செய்ய விமானி முயன்றதெல்லாம் வீணாயிற்று. கிழவி உட்காரவில்லை. நாற்காலியை விட்டு விலகி, அவரைச் சுற்றி நடந்துகொண்டும் கைகளைக் கோப்பதும் விடுவதுமாக இடைவிடாமல் பேசித் தள்ளிக்கொண்டும் இருந்தாள்:

"அதுதான் உன்னைக் கொஞ்சம் பார்க்கலாம் என்று வந்திருக்கிறேன். உனக்காகக் கையுறைகளை நானே பின்னியிருக்கிறேன். நீ இத்துனூண்டுப் பையனாயிருக்கும்போதே



எனக்குத் தெரியும். பெத்ரோவ்னா அத்தையை நினைவிருக்கிறதா? அது நான்தான்."

"எனக்கென்னவோ உங்களை நினைவில்லையே" என்று செரிமிஷ் சொன்னார்.

கிழவி மனத்தாங்கல் கொண்டாள். "நினைவில்லையாவது? அது எப்படி நினைவில்லாமல் போய்விடும்? தேனீப் பண்ணையிலே இருந்தாரே, யெவ்ஸ்திக்னேய் தாத்தா, அவர் வீட்டிலே இருந்தது யாராம்? நான்கூட உனக்குக் குச்சியில் கோத்த சேவல் மிட்டாய் கொடுத்தேனே. ஓ, அதற்குள்ளே மறக்கத்தொடங்கிவிட்டாயா?, ஊம், எங்களை எல்லாம் ஞாபகம் வைத்துக்கொள்ள உனக்குப் போது எங்கே?" என்று சடைத்துக்கொண்டாள்.

"பாட்டி, நான் தேனீப் பண்ணையில் வசித்ததே கிடையாது. எந்த யெவ்ஸ்திக்னேய் தாத்தாவையும் எனக்குத் தெரியாது. உனக்குத்தான், பாட்டீ, ஏதோ ஆள்மாறாட்டம் ஏற்பட்டிருக்கிறது."

"ஆ, அப்படியா? நீ கரதீலவ்காரன்தானே?"

"இல்லை, நான் ஹலதாயிவோக்காரன்."

"அட கஷ்டமே, ஒன்று கிடக்க ஒன்று நினைத்துவிட்டேனா! செரிமிஷ்கள் கரதீலவிலும் இருந்தார்களா, அதனால் நீ அந்த ஊர்க்காரன் என்றே எண்ணியிருந்தேன். ஐயோ, அசடு, அசடு! ஊம், போனால் போகிறது!" என்று தன்னைத் தேற்றிக்கொண்டு தொடர்ந்தாள்: "இல்லாவிட்டால் உன்னைப் பார்க்கக் கிடைத்திருக்காதே. இங்கு வரத் துணிந்திருப்பேனா! சோவியத் யூனியன் முழுவதுக்கும் வீரனாமே கிளிமேன்திய் செரிமிஷ் என்பவன், அவன் எப்படிப்பட்டவன் என்று ஒரு தரமாவது பார்த்துவிட வேண்டும் என்கிற ஆசை கிடந்து அடித்துக்கொண்டது எனக்கு. ஆக இப்போது பார்த்துவிட்டேன்; யாருக்கு வாக்கு அளிக்கப்போகிறேன் என்பதைத் தெரிந்துகொண்டேன். நீ கரதீலவ்காரன் ஆனால் என்ன, ஹலதாயிவோக்காரன் ஆனால் என்ன, எல்லாம் ஒன்றுதானே. எப்படியும் நீ எங்களவன். இந்தா, கையுறைகளை எடுத்துக்கொள். ஊம், ஊம்! எடுத்துக்கொள்! இல்லாவிட்டால் உயரே ரொம்பக் குளிராயிற்றே, வெளியிலிருந்து வேறு கூதல் அடிக்குமே."

கொஞ்சலாக முணுமுணுத்தபடியே, தலை அசைத்துக் கைகளை ஆட்டிக்கொண்டு வெளியேறினாள்.

"பள்ளியில் ஒரு பையன் இருக்கிறான். அவன் கூட..." என்று ஆன்யா உற்சாகத்துடன் தொடங்கினாள்.

அதற்குள் டெலிபோன் மீண்டும் கிணுகிணுத்தது. விமானி போனில் பேசி முடித்தவுடனே யாரோ கதவைத் தட்டுவது கேட்டது.

உள்ளே ஓர் இளைஞன் வந்தான். தான் செய்த ஒரு கண்டுபிடிப்பைப் பற்றி அவன் நீண்ட நேரமாகச் சலிப்பூட்டும் முறையில் பேசினான். அந்தக் கண்டுபிடிப்பு விமானவியலைத் தலைகீழாக மாற்றிவிடும் என்று உறுதி கூறினான்...

"இப்படி எல்லாவற்றையும் ஒரேயடியில் தலைகீழாக்குவது எதற்காக?" என்று அவன் சொல்லியதைக் கவனமாகக் கேட்டு விட்டு, செரிமிஷ் வினவினார். முதலில் முறையாகக் கற்கும்படியும் அப்புறம் கண்டுபிடிக்கத் தொடங்கும்படியும் அவனுக்கு ஆலோசனை கூறினார்.

இளம் ரயில்வே ஊழியர்கள் வந்தார்கள் - விமானியுடன் கைகுலுக்கவும், தரையில் பணியாற்றும் தாங்களும் பின்தங்கி விடாதிருக்க முயல்வதாகச் சொல்லவும்...

அவர்கள் போனதும் கதையைச் சொல்வதற்கு இதுவே தக்க தருணம் என்பதை ஆன்யா உணர்ந்தாள். அவள் வாயைத் திறந்தாளோ இல்லையோ, கதவை யாரோ தட்டினார்கள். வயதான வைத்தியர் ஒருவர் நுழைந்தார். அவர் பெரிய மனிதர்களின் கையொப்பங்களும் முதுரைகளும் சேகரிப்பதில் பிரியமுடையவர். தத்துவஞானிகள், விஞ்ஞானிகளின் பெயர்களைச் சலிப்பின்றிப் பொழிந்து, எல்லா விஷயங்கள் குறித்தும் அவர்களுடைய கூற்றுக்களை மேற்கோள் காட்டினார் அவர்.

"குதிரைதான் வீரனின் பீடம் என்றார் லமார்ட்டின். ஆனால் நம் காலத்திலோ வீரனின் பீடமாக விளங்குகிறது விமானம்!" என்று கூவினார் வைத்தியர்.

தன் கையொப்பப் புத்தகத்தில் பெயரை எழுதுமாறு விமானியிடம் கேட்டுக்கொண்டார். செரிமிஷ் கையெழுத்திட்டார்.



வைத்தியர் புறப்படுவது போலத் தோன்றினார். திடீரென்று தொப்பியை எடுத்து விமான ஓட்டியருகே சென்று அவரைக் கவனித்துப் பார்த்தார்:

"உங்கள் உடல்நிலை எப்படி? நன்றாக இருக்கிறீர்களா? திடகாத்திரத்தோடு வன்மையாகத்தான் தோன்றுகிறீர்கள். உங்கள் நாடித்துடிப்பு சரியாக இருக்கிறதா? அதைப் பற்றி நினைக்கக்கூட உங்களுக்கு நேரம் இருக்காது போலும். இந்தக் கிழவனை மன்னித்துவிடுங்கள். எல்லாவற்றையும் சொந்தவழியிலேயே, அதாவது தொழில் வகையிலேயே அணுகும் பழக்கமுடையவன் நான். எங்கே, உங்கள் நாடியைப் பார்ப்போம். ஊஹூம், அட்டி சொல்லாதீர்கள். எனக்கு மனத்தாங்கல் ஏற்படுத்தாதீர்கள். அது உங்களுக்குத் தகாது. வாக்காளனுக்குத் தன் பிரதிநிதியை முழுக்க முழுக்கத் தெரிய வேண்டும். உங்கள் உடல் நலமும் நெஞ்சும் இப்போது மக்கள் உடைமை என்பதை நீங்களே அறிவீர்கள். இவ்வுடைமையைப் பாதுகாப்பதில் எனக்குப் பங்கு இருக்க வேண்டும். ஹும்... நாடியோட்டம் நன்றாக இருக்கிறது."

செரிமிஷுக்கு ஒரு வார்த்தை சொல்லக்கூட இடம் கொடுக்காமல் கிழவர் பையிலிருந்து ஸ்டெதாஸ்கோப்பை வெளியே எடுத்தார். இரண்டு முனைகளையும் காதுகளில் வைத்துக்கொண்டார். விமான ஓட்டியின் மார்பில் விருதுகளுக்கு அடியில் கருவியின் உலோக வட்டத்தை வைத்தார்.

அடுத்த விநாடியில் செரிமிஷின் சட்டைப் பொத்தான்களைத் திறமையாகக் கழற்றி, காலரை விலக்கிவிட்டுக் கருவியை உள்ளே நுழைத்தார்.

"நன்றாக மூச்சிழுங்கள்" என்றார்.

"அட விடுங்கள் ஐயா டாக்டர், நீங்கள் ஒன்று!" எனப் பின்னே விலகிய செரிமிஷ், "ஐயோ, கிச்சுக் கிச்சு மூட்டாதீர்கள், என்னால் தாங்க முடியாது. நான் மிகவும் நலமாக இருக்கிறேன்!" என்றார்.

"நோயுறும்வரை எல்லோரும் ஆரோக்கியமாகத்தான் இருக்கிறார்கள். தயவுசெய்து இடைஞ்சல் செய்யாதீர்கள், உஷ்! நன்றாக மூச்சிழுங்கள்."

செரிமிஷ் பணிவோடு மூச்சிழுத்துவிட்டார். அவர் பரந்த மார்பு விரிந்து சுருங்கியது.

"சரி. இப்பொழுது மூச்சு விடாதீர்கள். நல்லது! ஹூம்... நுரையீரலின் மேல்பகுதியில் கம்மலொலி கேட்கிறதே, அது ஏன்?"

"அங்குதான் எனக்குக் காயம் பட்டது" என்றார் செரிமிஷ்.

"பாருங்கள், காயம் வேறு பட்டிருக்கிறது. உடம்பைப் பேணுவதே இல்லை இளைஞர்களாகிய நீங்கள். அது பெருங்குற்றம்! ஹாரஸ் சொன்னதுபோல, வாழ்நாள் நீடித்திராமை நாம் நீடித்த நம்பிக்கைகள் கொள்வதற்கு இடையூறாக இருக்கிறது... அதை நினைத்துப் பாருங்கள், தோழர் செரிமிஷ். நீங்கள் உடலை மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வைத்தியன் என்ற வகையிலும் குடிமகன் என்ற முறையிலும் வாக்காளன் என்ற ஹோதாவிலும் நான் கோருகிறேன். காயம்பட்ட இடத்தில் மந்தமான இரைச்சல், கம்மலொலி எனக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, நீங்கள் ஒரு நிபுணரைக் கலந்தாலோசிக்க வேண்டும். கட்டாயமாகக் கலந்தாலோசியுங்கள். உறுதி கூறுகிறீர்களா? இதை ஆணையாக ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு ஓட்டளிக்க மாட்டேன் என்று எச்சரிக்கை செய்கிறேன்."

கையொப்பம் இட்டதற்காக வீரருக்கு நன்றி செலுத்தி விடை பெற்றுக்கொண்டு கிளம்பியவர் கதவுவரை சென்று மறுபடியும் நின்றுவிட்டார்.

"அநேகமாய் மறந்தே போய்விட்டேன்... எங்கள் நகர நடைபாதைகளைப் பற்றிக் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாகக் குன்றின் மீது... இவ்விஷயத்தில் நகர சோவியத் காரியாலயம் வேண்டிய கவனம் செலுத்துவதில்லை; ஆகவே ஒருவனுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. வேண்டியதைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

"ஆகட்டும்!" என்று சொல்லி டெலிபோன் அருகிலிருந்த காகிதத்தில் ஏதோ குறித்துக்கொண்டார் விமானி.

நல்ல காலமாக வேடிக்கையான வைத்தியர் போனார். அதற்குள் ஆன்யா கென்னாதியைப் பற்றிய நீண்ட கதையை எப்படி ஆரம்பிப்பது என்று திட்டப்படுத்திக்கொண்டிருந்தாள். எல்லா விவரங்களையும் நன்றாகச் சிந்தித்திருந்தாள். ஆனால் அவள் விளக்கத் தொடங்கிய உடனே கதவு திறக்கப்பட்டது. ப்ளீன்துஸ் கிளர்ச்சியால் மூச்சிரைக்க உள்ளே வந்தான். "இது ஒன்றுதான் பாக்கியிருந்தது?" என்று சலித்துக்கொண்டாள் ஆன்யா. அவனும்



ஆன்யா அங்கே இருப்பாள் என்று எதிர்பார்க்கவே இல்லை. கையில் வைத்திருந்த நோட்டுப்புத்தகத்தைக் கசக்கிக்கொண்டு நின்றான். அவனுடைய கொழுத்த கன்னங்கள் வழக்கத்தைவிட அதிகச் சிவப்பாயின.

"உள்ளே வாருங்கள். ஒருவரை ஒருவர் முன்பே தெரியுமா?" என்று கேட்டார் விமானி.

"ஆமாம்" என்று ப்ளீன்துஸ் தயக்கத்துடன் நீட்டினான்.

"உட்காருங்கள், கையில் அது என்ன நோட்டுப்புத்தகம்?" என்று வினவினார்.

தான் எழுதி இருந்தவற்றை ஆன்யாவுக்குக் காட்ட ப்ளீன்துஸ் விரும்பவில்லை. தான் சொல்ல வந்ததை அவன் முன்னிலையில் சொல்ல ஆன்யாவாலும் முடியவில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்துக்கொண்டனர்.

"ஒன்றுமில்லை... வெறும் கணக்குகள்" என்று ப்ளீன்துஸ் முணுமுணுத்தான்.

"நான் அவற்றைப் பார்க்கலாமா, கணக்குப் போடுவதில் எனக்குப் பிரியம்" என்று சொல்லி நோட்டுப்புத்தகத்தை எடுத்துக் கொண்டார். ப்ளீன்துஸ் மலங்க மலங்க விழித்தான். "அடே, இதென்ன? இது ஏதோ வேறு ஒன்று. இங்கு ஏதோ பாட்டுகள் எழுதியிருக்கின்றன."

ப்ளீன்துஸின் முகம் கன்றிச் சிவந்தது.

"அதுவா... அது என் ருஷ்ய இலக்கிய நோட்டுப் புத்தகமாக இருக்கும். அதைத் தவறாகக் கொண்டுவந்து விட்டேன்" என்றான்.

"இந்தப் பாட்டுகள் யார் எழுதியவை?" என்று செரிமிஷ் கேட்டார்.

"லேர்மன்தோவ் போலிருக்கிறது" என்று ப்ளீன்துஸ் குழற்றினான்.

"நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ருஷ்யக் கவி லேர்மன்தோவ் விமானங்களைப் பற்றி எழுதியிருக்கக் கூடுமா என்ன? நீங்கள் வீணாக அவர் பேரில் பழி சுமத்துகிறீர்கள். என் நினைவில் இருக்கிறபடி அவர் எழுத்துப் பிழைகள் செய்யவில்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

கீழே, வாயிலருகே மோட்டார் ஹாரன் பல தடவைகள் ஒலித்தது.

"மன்னியுங்கள், சிறுவர்களே! கீழே எனக்காக மோட்டார் காத்திருக்கிறது. நான் போக வேண்டும். என்னிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?"

"தோழர் செரிமிஷ், நாளை மாலை 3 மணிக்கு நடக்க இருக்கும் ஹாக்கி ஆட்டத்தைப் பார்க்க வரும்படி உங்களை அழைக்கிறோம். நிச்சயமாக வாருங்கள். பையன்களோடு போட்டி போடுகிறோம். இதோ, இவர்களோடுதான்" என்று ப்ளீன்துஸ் பக்கமாகத் தலை அசைத்துக் கூறினாள் ஆன்யா. ப்ளீன்துஸ் அசடு வழியச் சிரித்தான்.



# படகுத் துறை

**க**டுங்குளிரில் விறைத்துப்போன கென்னாதிய் பூங்காவில் ஜனநடமாட்டமில்லாத ஒரு பாதையில் முன்னும் பின்னும் நடைபோட்டுக் கொண்டிருந்தான். பூங்காவின் வாயிலுக்கு அருகே இருந்த சினிமாவில் படம் தொடங்கும் நேரம் அது. தெருப்புறம் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி திரைப்படத்தில் ஒலித்த சொற்களைக் குளிர் இருளில் பரப்பிக்கொண்டிருந்தது.

அப்போது அவன் தோளைத் தொட்டாள் ஆன்யா.

சிறுமியின் பக்கமாகச் சாய்ந்து, அவள் கையைப் பற்றிக் கொண்டு, "ஊம்? அவர் என்ன சொன்னார்?" என்று ஆவலோடு வினவினான்.

ஆன்யா பெருமூச்செறிந்தாள்

"ஒன்றும் சொல்லவில்லை. எதையும் விவரிக்க என்னால் முடியவில்லை. ஆட்கள் வந்தவண்ணமாக இருந்தனர். கோபப்படாதே, கென்னாதிய்... எனக்கா ஒரே கூச்சம். இந்த அழகில் அந்த முட்டாள் ப்ளீன்துஸ் வேறு அங்கு மூச்சு இரைக்க வந்து நின்றான். தடியன், கையில் ஏதோ நோட்டுப்புத்தகமும் தானுமாக, அவன் எதிரில் நான் எப்படிச் சொல்லுவதாம்?"

"அடி கெடுத்தாயே! 'எல்லாம் சொல்லிவிடுகிறேன். நொடிப்பொழுதில் சரிப்படுத்தி விடுகிறேன்' என்று பிரமாதமாக அளந்தாயே... நான் போகிறேன், போ!" என்று கூறிவிட்டுத் திரும்பிப் பாதையில் விரைவாக நடந்தான்.

"கென்னாதிய்!" என்று ஆன்யா உரக்கக் கூவினாள்.

"நாளை ஆட்டத்தைப் பற்றி என்ன? நீ இல்லாவிடில் உன் பையன்களை நொறுக்கிவிடுவோமே நொறுக்கி. ஆட்டக் குழுவைக்

கைவிடப் போகிறாயா? ஊம்? நான் ஒருவரிடமும் சொல்ல மாட்டேன்."

அவனோ பதில் சொல்லவில்லை. ஒரு நிமிடத்தில் இருளில் மறைந்துவிட்டான்.

'ஹ்ம். மகா மோசமாகப் போய்விட்டது கதை. பெரிய வம்பாக வந்து முடிந்திருக்கிறது. நாளைக்கு நான் விளையாட்டுப் பந்தயத்துக்குப் போனால், எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே அது கூடாது. போகாமல் இருப்பதோ, வெட்கக்கேடு. இவ்வளவு காட்டமான போட்டியின்போது, தன் குழுவைக் கைவிடுகிற தலைவனும் ஒரு மனிதனா! அதோடுகூடப் பெண்கள் அப்படி ஒன்றும் மோசமான ஆட்டக்காரிகள் அல்ல. சரியான சண்டிகள், எடுத்த எடுப்பிலேயே பயல்களைத் தூள் பறத்திவிடுவார்கள். அது ஒரே தலைகுனிவு ஆகுமே, வாழ்நாள் பூராவுக்கும். என்ன சங்கடமான நிலைமை! இருதலைக்கொள்ளி எறும்பாய்த் தவிக்க வேண்டியிருக்கிறதே...' வெண்பனி மூடிய தெருக்களின் வழியாக அலைந்துகொண்டே இவ்வாறு எண்ணமிட்டான் கென்னாதிய்.

ஆற்றுக்கு நடந்தான். அங்கே, விளையாட்டிடத்தில் இசை ஒலி கேட்டது. பிரகாசமான விளக்கொளியில் பெருக்கித் துப்புரவாக்கப்பட்டிருந்த பனிக்கட்டித் தரை பளபளத்தது. அரங்கின் நடுவே, மழமழப்பான பனிக்கட்டிமேல் ஸ்கேட் செய்வோர் வட்டமாகச் சுற்றி வந்தனர். அவர்களுடைய நிழல்களும் சுழன்றோடின. விளக்குகளின் ஒளியைப் பிரதிபலித்துக்கொண்டும் ஸ்கேட்டுகளின் எஃகு அலகுகளுக்கு அடியில் சரசரத்துக் கொண்டும் விளையாட்டரங்கமே சுழல்வதுபோலத் தெரிந்தது. பிரம்மாண்டமான கிராமபோன் பிளேட் போல விரைவுடன் சுற்றியது.

கென்னாதிய் படகுத் துறைக்குச் சென்றான். அங்கு மிதவை மேற்பார்வையாளனான செம்படவன் ஒருவன் வசித்து வந்தான். அவன் கென்னாதிய்க்குத் தெரிந்தவன். கிழவன் குளிர்காலத்தில் விளையாட்டரங்கத்தின் காவல்காரனாகவும் இருப்பது வழக்கம்; கென்னாதியும் அவனும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர்.

கவிழ்ந்து உறைந்து கரையோடு ஒட்டிக்கிடந்த படகுகள், துருப்பிடித்துப் பனிக்கட்டியில் புதைந்திருந்த நங்கூரங்கள், இவற்றுக்கு இடையே நடந்து காவல் வீட்டுக் கதவைத் தட்டினான் கென்னாதிய்.



காவல் வீடு, ஒரு புறமாகச் சாய்ந்த தெப்பத்தின் மேல் இருந்தது. இலையுதிர்காலத்தில் ஆற்றின் நீர்மட்டம் குறைந்துவிடவே, தெப்பம் செங்குத்தான கரையோர மணல்மேட்டின் மேல் தங்கிவிட்டது. வீட்டில் எல்லாச் சாமான்களும் ஒருச்சாய்த்து இருந்தன. தட்டுக்கள் மேசையிலிருந்து சரிந்து விழும். ஸ்டூல் மூலைக்கு நகர்ந்து நகர்ந்து போய்விடும். தனிக்கட்டையான கிழவனுக்கோ இதெல்லாம் பழகிப் போயிருந்தது. குளிர்காலம் முழுவதும் அங்கு ஒருச்சாய்ந்து வாழ்ந்து வந்தான்.

"வணக்கம், தாத்தா! இன்று இரவு உன்னோடு தங்கலாமா? ஆனால் நீ மட்டும் என்னைப் பற்றி மாணவர்களுக்குச் சொல்லி விடாதே, ஆமாம். நாளைக்கு விளையாட்டரங்கத்தில் எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது - நாளைக்கு நாங்கள் விளையாடப் போவது உனக்குத் தெரியுமே" என்றான் கென்னாதிய்.

கிழவன் வளைந்த விரலை ஆட்டித் தந்திரமாக அவனை அச்சுறுத்துவது போலப் பாவனை செய்து, "இதென்ன குரங்குச் சேட்டைக்குக் கிளம்பியிருக்கிறாய்? ஊம்?" என்றான்.

செம்படவன் தகரத் தேக்கெண்டியிலிருந்து தேநீர் ஊற்றினான்: இருவரும் பருகத் தொடங்கினர். கிழவன் உதடுகளை நீளத் துருத்திக்கொண்டு தேநீரைப் பெரிய சத்தத்தோடு உறிஞ்சினான்; பின்பு ஈரமான நனைந்த மீசையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டான்.

"ஐயையோ, நீங்கள் இருக்கிறீர்களே, இந்தக் காலத்துப் பிள்ளைகள், உங்களுக்கு எப்படித் தேநீர் குடிப்பது என்பதுகூடத் தெரியவில்லை! இதென்ன சத்தமே இல்லாமல் தேநீர் குடிக்கிறாய்? நன்றாக உறிஞ்சிக் குடியேன், ஓசை கேட்கும்படி! இல்லாவிட்டால் உன்னோடு சேர்ந்து தேநீர் குடிப்பதில் எவ்வித மகிழ்ச்சியும் கிடையாது" என்று முணுமுணுத்தான்.

பருவநிலை பற்றிப் பேசினார்கள். குளிர் மிகவும் கடுமையானதல்ல என்று இருவரும் அபிப்பிராயப்பட்டனர்.

கணப்புப் பக்கத்தில் குளிர் காய்ந்ததும் கென்னாதிய்க்குத் தூக்கம் வந்தது. சரிவான கட்டிலில் படுத்து உறங்க இருந்தவன் சறுக்கி ஒரு மூலைக்குச் சென்றுவிட்டான்.

"இதோ பார், தாத்தா, உன் சகோதரன் உன்னோடு சேர்ந்து வாழ வேண்டுமென்று உனக்கு ஆசையாயில்லையா?" என்று திடீரெனக் கேட்டான் கென்னாதிய்.

"ஊஹும். அவன் எதற்காக எனக்கு? என்னத்துக்கு உதவுவான் சகோதரன்? என் அண்ணனை ராணுவத்தில் சேர அழைத்தபோது, அவனுக்குப் பதில் நான் சென்றேன். அவனோ 1910இல் என் புதிய பூட்சுகளைக் குடிப்பதற்காக விற்றுவிட்டான். என் அண்ணன்தான், இருந்தாலும் குடும்பச் சொத்தைப் பங்கிடும்பொழுது, அநேகமாக எல்லாவற்றையும் அவனே பிடுங்கிக்கொண்டான். சகோதரர்களால் பயனென்ன? ஒரே சண்டைதான். அத்துடன் பண நஷ்டம் வேறு. சரி நீ தூங்கு அப்பனே. நான் ரோந்து சுற்றப் போகிறேன். நேரம் ஆகிவிட்டது..."

"அட இந்தக் காவல்காரப் பிழைப்பும் ஒரு பிழைப்பா! கோடைகாலம் முழுவதும் ஆற்றில் மிதவைகளைப் போட வேண்டும்; குளிர்காலத்திலோ, இரவெல்லாம் தூங்காமல் காவல் செய்ய வேண்டும்..." ஆட்டுத்தோல் மேல்கோட்டைப் போட்டுக் கொண்டே இப்படி முறையிட்டான் கிழவன்.



# ஆட்டப் போட்டி

இசை முழங்கியது. வெண்பனி படிந்த பல வர்ணக் கொடிகள் குளிர்காற்றில் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தன. ஆற்றங்கரையில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்தனர். ஆட்டத்தைப் பார்க்கப் பள்ளி மாணவர்களும் பெரியவர்களும் வந்திருந்தனர்.

'டப்-டப்-டப்-டப்' என்ற விசித்திர ஒலி திடீரென்று கேட்டது. கையுறைகளோடு மக்கள் கைகளைத் தட்டிய சத்தம் அது; தொடர்ந்து வாலென்கி என்னும் நமுதா பூட்சுகளின் தடதடப்பும் ஒலித்தது. படகுத் துறையிலுள்ள காவல் கோபுரத்தின் மீது மறைவிடத்தில் உட்கார்ந்திருந்த கென்னாதிய், விளையாட்டரங்கத்துக்குக் கௌரவ விருந்தினர் - கிளிமேன்திய் செரிமிஷ் - வந்துவிட்டார் என்பதைப் புரிந்துகொண்டான்.

விளையாட்டுகளில் விருப்பமும் உடற்பயிற்சியில் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்ட விமானி, மாணவர்களின் அழைப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. சிறுவர்கள் மனத்தைப் புண்படுத்த அவர் விரும்பவில்லை. தவிர ஆட்டம் வேறு வியப்பூட்டுவதாக இருந்தது. ஆண்கள் குழுவைப் பெண்கள் குழு போட்டிக்கு அழைத்திருந்தது. தலைக்கு மேல் வேலை இருந்தபோதிலும் அவர் ஆட்டத்திற்கு வரத் தவறவில்லை.

அன்று காலை வேளை அற்புதமாக, தெளிந்த வானமும் ஒளிரும் இதமான குளிருமாக விளங்கவே, அதை வீணாக்க மனமின்றிக் கொஞ்ச நேரம் ஸ்கீ செய்தார் விமானி.

"ஆகா, எப்பேர்ப்பட்ட அருமையான நாள்! அற்புதமான குளிர். வெண்பனிதான் என்ன அழகு! வேட்டையாடவோ, பறக்கவோ தக்க நேரம். ஆகாகா, நமது பிரதேசத்தின் இன்பமே இன்பம்!" என்று பூரித்துப் போனார் கிளிமேன்திய்.

அதிகாலையிலேயே நகரைவிட்டு நீங்குவது என்று கென்னாதிய் இரவில் தீர்மானித்திருந்தான். ஆனால் சரிந்த வீட்டில் மிகவும் கதகதப்பாக இருந்ததால் நீண்ட நேரம் தூங்கிவிட்டான். இசை ஒலியையும் கொடிகள் படபடக்கும் சத்தத்தையும் ஆவி படிந்தது போன்று மங்கலாயிருந்த பனிக்கட்டி மேல் ஸ்கேட்டுகள் உராயும் சரசரப்பையும் கேட்டதும் நகரிலிருந்து வெளியேற அவனுக்கு மனம் வரவில்லை. தூரத்திலிருந்தாவது ஆட்டத்தைக் காண ஆசை உண்டாயிற்று.

யார் வெற்றி பெற்றார்கள் என்று தெரிந்து கொள்ளாமல் புறப்பட்டுப் போய்விட எப்படி முடியும்? முடியவே முடியாது. பெண்கள் படுதோல்வி அடைவார்கள் என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லாவிட்டாலும்கூடத் தன் குழுவின் வெற்றியைக் கண்ணாரக் காண விரும்பினான்.

படகுத் துறையின் மீதுள்ள காவல் கோபுரத்திலிருந்து கொடிகளாலும் தாழ்ந்த மர வேலிகளாலும் எல்லை குறிக்கப்பட்டிருந்த விளையாட்டிடம் முழுதையும் பார்க்க முடிந்தது. முதலில் ஆட்டத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு ரயில்வே நிலையம் சென்று, செவெர்யான்ஸ்க் நகரை விட்டு வெளியேற முடிவு செய்தான் கென்னாதிய்...

இரண்டு குழுக்களும், வர்ணப் பாம்புகளைப் போல வளைந்து வளைந்து, விளையாட்டரங்கத்தின் நடு இடத்தை நோக்கிச் சரசரவென்று சறுக்கிச் சென்றதைப் பார்த்தான். பெண்கள் கட்டம் போட்ட கால்சட்டைகளையும் கறுப்பு, வெள்ளைக் காலுறைகளையும் மார்பில் சிவப்புச் சாய் சதுர வடிவமைந்த வெள்ளை ஸ்வெட்டர்களையும் அணிந்திருந்தனர். பையன்கள் சிவப்பும் கறுப்புமாக வரிகளிட்ட காலுறைகளும் சாம்பல் நிறச் சுருக்குக் காற் சட்டைகளும் சிவப்பு ஸ்வெட்டர்களும் போட்டுக்கொண்டிருந்தனர்.

ஸ்கேட்டுகளால் பனிக்கட்டியைக் கீறியவாறு இரு குழுவினரும் பிரிந்து சென்று, பிறகு நெருங்கிவந்து, எதிரெதிராக, வில் வடிவத்தில் நின்றனர். பெண்கள் குழு வரிசையிலிருந்து ஆன்யா முன் வருவதையும் ஆண்கள் பக்கமிருந்து கொழுத்த ப்ளீன்துஸ் அவளுக்கு எதிரே செல்வதையும் கண்டான். ஒஹோ! அவனுக்குப் பதிலாகக் குழுத் தலைவனாக ப்ளீன்துஸ் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறான்! கொன்னாதிய்க்கு ஏமாற்றமாய் இருந்தது.



'இருக்கட்டும், நான் இல்லாமல் எப்படி ஜெயிக்கிறார்கள் பார்க்கலாம்' என்று நினைத்தான். மகளிர் வெற்றி பெற வேண்டும் என அந்த நேரத்தில் அவனுக்கு விருப்பம் உண்டாயிற்று.

ப்ளீன்துஸும் ஆன்யாவும் கைகுலுக்கினர். நெடிய மத்தியஸ்தர் அவர்களருகே வந்து அவர்களின் தோள்கள்மீது கைகளை வைத்துக் கொண்டார். எல்லோரும் குனிந்து சில வினாடிகள் தணிந்த குரலில் பேசினர். அப்படித்தான் நடப்பது வழக்கம். இரண்டு குழுத் தலைவர்களும் மத்தியஸ்தரும் நேர்மையாகவும் ஒழுங்காகவும் ஆட்டம் ஆடுவதென்று உடன்பாடு செய்துகொண்டனர்.

பின்னர் மத்தியஸ்தர் சிறு மரத்துண்டில் உமிழ்ந்து அதை மேலே எறிந்தார். எந்தக் குழு தொடங்குவது என்பது இம்முறையில் தீர்மானிக்கப்பட்டது. ஆன்யா தன் கையை உயரமாகத் தூக்கி, கழியால் மரத்துண்டை அடித்தாள்.

ஆட்டத்தைத் தொடங்கும் வாய்ப்பு பெண்களுக்குத்தான் கிடைத்தது.

இரண்டு குழுக்களும் தத்தம் இடங்களில் சென்று நின்றன. மத்தியஸ்தர் ஊதுவதைக் கென்னாதிய் கேட்டான். வெள்ளை ஸ்வெட்டர்களும் சிவப்பு ஸ்வெட்டர்களும் முன் பாய்ந்தனர். வெள்ளை வரிசைக்குள், சிவப்பு வரிசை நுழைந்தது. சிவப்பர்களும் வெள்ளையர்களும் கோத்த கை விரல்களைப் போலப் பின்னிக்கொண்டனர்.

ஆட்டக்காரர்களுக்கு நடுவில் எங்கோ பந்து இருந்தது. அவர்கள் சறுக்கிச் சென்றபோது, ஸ்கேட்டுகளுக்கிடையில் பனிக்கட்டி கிறீச்சிட்டது. கழியால் பந்தையடித்துக் கொண்டு ப்ளீன்துஸ் முன்னே பாய்ந்தான். அவனிடமிருந்து பந்தை அகற்றுவதற்காகப் பெண்கள் அவனைத் தாக்கினர். ப்ளீன்துஸோ, புதர்களினூடே செல்லும் யானைபோல கோலை நோக்கிச் சென்றான். அங்கேயோ, கிளர்ச்சி மிகுதியால் மூச்சுத் திணற, பொறுமையில்லாமல் இங்குமங்கும் பளிந்தாடியவாறு துடித்துக்கொண்டிருந்தாள் ரீத்தா. தடியன் ப்ளீன்துஸ் தன்னை நோக்கி வேகமாக வருவதை நடுக்கத்துடன் நோக்கி, கன்னங்கள் சிவக்க, மூச்சு இரைக்க, தாவித் தாவிக் கோலை நெருங்கிக்கொண்டிருந்த இந்த ஆபத்தைத் தன் அருகே வரவிடாது தடுக்கும்படி காலைப் பனிக்கட்டிமேல் கழியால் அடித்தவாறே தோழிகளைக் கூவி அழைத்தாள் ரீத்தா.

அப்போது எங்கிருந்தோ ஆன்யா பாய்ந்து, ப்ளீன்துஸிடமிருந்து பந்தைப் பறித்துக்கொண்டாள்.

பெருந்தடியன் ப்ளீன்துஸ் இந்த எதிர்பாராத மோதலால் நிலை தவறிச் சதக்கென்று பனித்துறையில் முகங்குப்புற விழுந்து, பிரம்மாண்டமான ஆமை போலக் கைகால்களை அகலப் பரப்பியபடி வேகம் காரணமாக வயிறு மீது சறுக்கி கோலுக்குள் புகுந்தான். ரீத்தா எரிச்சலோடு கீச்சிட்டு, அவனை வெளியே நெட்டித் தள்ளினாள். தன் பொறுப்பிலுள்ள கோலுக்குள் பந்து இல்லாமலுங்கூட வேற்றாள் நுழைவதை அவளால் பொறுக்க முடியவில்லை. ப்ளீன்துஸுக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பார்த்து கென்னாதிய் கைகொட்டாத குறையாகக் களி துள்ளினான்.

"நறுவிசான வேலை!" என்றார் கிளிமேன்திய் செரிமிஷ்.

யெவ்தொக்கீயா விளாஸியெவ்னா பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். மறைந்து போன கென்னாதியைப் பற்றிய கவலை அவளை விடவில்லை. தம்பியைப் பற்றி விமானி இதுவரை ஏன் வினவவில்லை என்பது அவளுக்கு ஒரே புதிராக இருந்தது. கிரீல் ஸ்தெபானவிச் கென்னாதியிடம் கொடுத்த குறிப்பைப் படித்து கிளிமேன்திய் செரிமிஷ் எதைச் சொல்லுவார் என்பதை ஊகிக்க முயன்றாள். அந்தச் சமயத்தை எதிர்பார்த்து அஞ்சினாள்.

வீரரோ, ஆட்டத்தில் ஒரேயடியாக ஈடுபட்டு, தம்பியை அடியோடு மறந்தவராகக் காணப்பட்டார். அவருடைய அசட்டை யெவ்தொக்கீயா விளாஸியெவ்னாவுக்கு ஆத்திரம் ஊட்டத் தொடங்கியது.



# தோல்வி

நேரம் செல்லச் செல்ல ஆட்டத்தில் விறுவிறுப்பு அதிகமாயிற்று.

ப்ளீன்துஸின் பயனற்ற முயற்சிக்குப் பின் பையன்கள் இன்னும் சில தடவை பெண்களின் கோலைத் தாக்க முயன்றனர். ஆனால் வெள்ளை ஸ்வெட்டர்கள் திறமையோடு ஆடினர். அவர்கள் தொண்டை கிழியக் கத்தி, பையன்களின் காதுகளைச் செவிடாக்கினர். ப்ளீன்துஸ் தன் பிரியமான, ஆட்ட விதிகளுக்குப் புறம்பான தந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று மத்தியஸ்தர் அவனைத் தடுத்துவிட்டார். எனவே, மத்தியஸ்தர் பெண்களுக்குப் பரிந்து பேசுவதாக ஆண்கள் அபிப்பிராயப்பட்டனர்.

அது எப்படி ஆயினும், நொடிப்பொழுதில் பந்தின் மேல் பாய்ந்து, பாங்கற்ற ஹாக்கிக்கழிகளால் அதை உக்கிரமாகத் தாக்கிக் கொத்திச் சென்ற வண்ணமாயிருந்த, ஒன்றிணைந்து சீற்றத்துடன் கீச்சிடும் இந்தப் பறவைக் கூட்டத்தின்முன் புகழ்பெற்ற ஹாக்கி ஆட்டக்காரர்களின் ஜம்பம் சாயவில்லை.

தானில்லாமல் குழு திணறுவதைக் கண்டு கென்னாதிய் திருப்தி அடைந்தான். இதற்கு முன் தன் திறமையைக் குழுவினர் சரியாக மதிக்கவில்லை என்று திடீரென்று நினைத்தான். எத்தகைய ஆட்டக்காரனை இழந்துவிட்டோம் என்று அவர்கள் அறிய இது நல்ல சந்தர்ப்பம்.

திடீரென்று ஆன்யா இரண்டு சிவப்புக் கம்பளிச் சட்டைகளினூடே நழுவி, பந்தை லேசான அடிகளால் முன்னே செலுத்தியவாறு, கோல்யா ஸ்வான்த்ஸவ் காவல் செய்துகொண்டிருந்த கோலை நோக்கி உறுதி வாய்ந்த மேனியை முன் சாய்த்தபடி விரைந்தாள்.

ஓடி, சறுக்கி, பாய்ந்து கோலை நெருங்கினான் ஆன்யா. அவளுடைய ஒரு பின்னல் அவிழ்ந்து தொங்கியது. அவள் ஸ்கேட்டுகள் பனிக்கட்டியைக் கீறித் துகள் கிளப்பின. சூரிய ஒளிபட்டுப் பனித்துகள் வானவில் வண்ணங்களை அள்ளி வீசியது. பந்து எனப்பட்ட கரிய வில்லை, ஆன்யாவின் கழியால் தள்ளப்பட்டு அவள் முன்னே வழுக்கிச் சென்றது. அவளை எட்டிப் பிடிக்க காவலர்கள் முயன்றும் அவள் ஒருபுறம் விலகி, பந்தை ஓங்கி அடித்தாள். கோல்யா குட்டைக்கழியை நீட்டியபடி கீழே விழுந்து பந்தைத் தடுக்க முற்பட்டான். அதுவே அவன் தலைக்கு மேல் வேகமாகச் சென்று, அவனுக்குப் பின்னிருந்த கம்பிவலையில் மோதியது. கோல்.

பார்வையாளர்கள் கைதட்டிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், சீட்டியடித்துக்கொண்டும் இருந்தனர். இரண்டு நிமிடங்களுக்குள், மறுபடியும் கோலின் ஒரு மூலையிலிருந்து கோல்யா பந்தை வெளியில் எடுக்க வேண்டியதாயிற்று.

பையன்கள் குழப்பத்தில் ஆழ்ந்தனர். இது போன்ற தாக்குதலை அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. பெண்கள் அவர்களைவிட ஒன்றிணைந்தும் விடாப்பிடியாகவும் ஆடினர். கென்னாதியின் இரகசிய மறைவு குழுவைக் கலக்கிவிட்டது. கொழுத்த ப்ளீன்துஸால் அவனைப் போல் ஆடவே முடியவில்லை. எதிரிகளின் கோல்மீது கென்னாதிய் செய்யும் பருந்துப் பாய்ச்சல் எங்கே? ப்ளீன்துஸின் மெதுவான தள்ளாட்டப் போக்கு எங்கே! தங்கள் தோல்வி நிச்சயம் என்று குழுவினர் உணர்ந்தனர். போதாக்குறைக்கு, பார்வையாளர்கள் குறிப்பாகப் பெரியவர்கள், பெண்களை ஊக்கிக்கொண்டும் உற்சாகப்படுத்திக்கொண்டும் அவர்களின் ஒவ்வொரு புதிய வெற்றியையும் பலமாகக் கைக்கொட்டி வரவேற்றுக்கொண்டும் இருந்தனர். இதனால் மாணவர்களுக்கு விளையாடவே அருவருப்பாய் இருந்தது. பெண்களோ இரக்கமே காட்டவில்லை. விரைவிலேயே ஆன்யா மூன்றாவது கோல் போட்டாள். பார்வையாளர்கள் 'ஊ' என்று கத்திக் கெக்கலி கொட்டினர்.

பிறரைவிடக் கிளிமேன்திய் செரிமிஷ் பலமாகக் கைகொட்டி, கூப்பாடு போட்டது பையன்களுக்கு அதிக வேதனை தந்தது.



"சபாஷ், பெண்களே, அற்புதம்! இதுவல்லவா ஆட்டம்! கச்சிதமான அடி! டேய் பையன்களா, ஊம், நிமிர்ந்து நில்லுங்களடா! ஆண்கள் இனத்துக்கே அவமானமடா உங்கள் ஆட்டம்! உண்மையாகவே வெட்கக்கேடு!" என்று அவர் கத்தினார்.

பெண்கள் இரண்டாவது கோல் போட்டவுடனே கென்னாதியின் மனநிலை மாறத் தொடங்கியது. ஆண்கள் குழுவின் கோலுக்குள் இரண்டாவது முறையாகப் பந்து சென்றபோது அவனுக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. மாறாக, வருத்தம் ஏற்பட்டது. குழு அவ்வளவு திறமையற்றதா? பெண்கள் இவ்வளவு எளிதாக வெற்றி கொள்வதை அவனால் சகிக்க முடியவில்லை. இனி ஏளனம் செய்து உயிரை வாங்கிவிடாதீர்கள்! அப்புறம் இந்தப் ப்ளீன்துஸ் இருக்கிறானே, ப்ளீன்துஸ்! உதவாக்கரை! உலைக்கோல் போல ஹாக்கிக் கழியைக் கொண்டு குத்திக் கிளறுகிறானே தவிர, பலன் பூஜ்யந்தான்.

'என்னதான் செய்கிறாய்?' என்று கத்த வேண்டும் போலிருந்தது கென்னாதியுக்கு. தன் குழுவின் கம்பிவலையில் மூன்றாவது முறையாகப் பந்து சென்றது அவனை ஒரேயடியாக வருத்தத்தில் மூழ்கடித்தது. அதைப்போன்ற படுதோல்வியை அவன் எதிர்பார்க்கவே இல்லை. பெண்கள் மூன்று கோல், பையன்களோ, சுழி! மேலே என்ன? பையன்கள் முகங்களில் கலக்கமும் நடையில் தளர்வும் வந்துவிட்டதைக் கண்டான்.

இடறுவதும் பந்தடிக்கத் தவறுவதும் ஒருவர் மேல் ஒருவர் விழுவதுமாக அவர்கள் குழம்பினர். தலைவன் என்ற ப்ளீன்துஸ் எதற்கும் உதவவில்லை. அவனாவது, குழுத் தலைவனாவது!

கென்னாதியின் கண்ணுக்கெதிரே, குழு சிதைந்து நொறுங்கியது. அது தாங்க முடியாத, இரங்கத்தக்க காட்சியாயிருந்தது. பையன்கள் முன்னே காட்டி வந்த தீவிரம், பலத்த அடிகள், வேகம், மின்னல், தாக்குதல்கள் ஆகிய யாவும் எங்கே? தோழர்களுக்காக கென்னாதிய் மிகவும் பரிதவித்தான். எல்லாவற்றிற்கும் தானே பொறுப்பாளி என்று உணர்ந்தான்.

'இத்தகைய சந்தர்ப்பத்தில் குழுவைக் கைவிட்டேனே. எவ்வளவு கடைகெட்டவன் நான், எவ்வளவு இழிந்தவன்!' என்று திடீரென எண்ணமிட்டான்.

நீண்ட நாளாக 'அண்ணனின்' நடத்தையோடு தன் நடத்தையை ஒப்பிடும் பழக்கம் அவனுக்கு இருந்தது. எனவே, இப்போதும் தன்னை அறியாமல் ஒப்பிடத் தொடங்கினான். கஷ்டமான சந்தர்ப்பத்தில் கிளிமேன்திய் தோழர்களை விட்டுக் கொடுப்பாரா? மாட்டார்! தான் ஆபத்தில் சிக்கிக்கொள்ளக் கூடும் என்பதைப் பொருட்படுத்தாமல் தோழர்களோடு தோளோடு தோள் நின்று செயலாற்றுவார். 'நிர்பந்தம் காரணமாகத் தரையில் இறங்கும்போது, தீர்மானங்களை மாற்றுவது விபத்தில் முடியும்' என்ற விமானவியல் கைப்புத்தக வாசகத்தை நினைத்துப் பார்த்தான். 'ஹூம், இனி என்ன எண்ணி என்ன பயன்?'

காலடியில் இருந்த ஸ்கேட்டுகளையும் ஹாக்கி கழிகளையும் ஒரு பார்வை பார்த்தான். இப்படிச் செய்தால் என்ன?...



# பந்து அரங்கத்துக்கு வெளியே செல்கிறது

பெண்கள் நான்காவது கோல் போடப் போகும் சமயத்தில், ஸ்கேட்டுகள் அணிந்த சிறிய உருவம், படகுத் துறையிலுள்ள காவல் கோபுரத்திலிருந்து படிகள் வழியாக இறங்கி, விளையாட்டிடத்தைச் சுற்றியிருந்த மரத்தடுப்பைத் தாவி மத்தியஸ்தரை நோக்கி நேராகச் செல்வதைப் பார்வையாளர் கண்டனர்.

"மத்தியஸ்தரே, நான் விளையாடுகிறேன்!"

இக்குரலைக் கேட்ட பையன்கள் ஸ்தம்பித்து நின்றனர்.

"கென்னாதிய், நீதானா! எங்கு போயிருந்தாய்?" என்று கூச்சலிட்டனர்.

வலப்பக்கம் ஆடிய பையன் ஒரு வார்த்தையும் பேசாமல், சிவப்பு ஸ்வெட்டரைக் கென்னாதிய்க்குக் கொடுத்தான். அவன் அதைப் போட்டுக்கொண்டான்.

"தோழர்களே, பந்தை வலப்பக்கம் அடித்துச் செல்லுங்கள்! ஆன்யாவை முன் வரவிடாமல் தடுங்கள்! ஆட்டம் தொடங்குவோம்!" என்று குழுத் தலைவனுக்குரிய, அதிகாரமுள்ள குரலில் கூறினான்.

தீவிரமாக ஆட்டம் தொடங்கியது.

கென்னாதிய் திடீரென்று தோன்றியதைப் பார்த்து மலைத்துப் போன ஆன்யாவால் உடனே சுதாரித்துக்கொள்ள முடியவில்லை. கென்னாதியையும் பார்வையாளர் வரிசையில் இருந்த விமானியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

கிளிமேன்திய் தம் தம்பியைத் தெரிந்துகொண்டாரா இல்லையா என்று அறியும் ஆவலுடன் யாவரும் அவரையே நோக்கினர்.

விமானியோ, முன்போலவே உற்சாகத்துடன் ஆட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

ஆன்யாவைப் போல் அவள் தோழிகளும் குழப்பமடைந்தனர்.

தலைவன் வந்ததும் பையன்கள் புத்துயிர் பெற்றனர். முழுச் சக்தியையும் பயன்படுத்தி, இடிபோல் தாக்கத்தொடங்கினர். பெண்கள் குழுவில் தடுமாற்றம் ஆரம்பித்தது.

ஒரு நிமிடத்திற்கெல்லாம் மின்னல்போல் பந்து கோலுக்குள் பாய, கோல் காவலன் கண்ணீர் வடித்தான். இந்த கோல் கென்னாதிய் தானே போட்டான். அவனே இரண்டாவது பந்தையும் கோலுக்குள் செலுத்தினான். இரண்டு கோல்களுக்குப் பின்னர், மூன்றாவது கோலும் போடப்படும் என்பதில் ஐயமே இல்லை. ஆனால், அப்போது ப்ளீன்துஸ் பந்தை அஜாக்கிரதையாக அடித்ததால், அது தாழ்ந்த மரத்தடுப்புகளைத் தாண்டிச் சென்றுவிட்டது.

ஆட்டம் தடைபட்டது. எல்லா ஆட்டக்காரர்களும் நிற்பதற்காக ஒரே சமயத்தில் சட்டெனத் திரும்பினர்.

ஆன்யா மரத்தடுப்புக்கு அப்பால் பந்தைப் பின்தொடர்ந்து ஓடினாள். பந்தோ, பனிக்கட்டியின் மீது ஆபத்தான பகுதிகளைக் குறிப்பதற்காக நாட்டப்பட்டிருந்த கம்பங்களைக் கடந்து சென்று விட்டது. அவ்விடத்தில் ஆற்றின் அடிப்படுகையிலிருந்து ஊற்றுகள் பொங்கிக்கொண்டிருந்தபடியால் பனிக்கட்டிக்கு இடையே உறையா நீர்ப் பகுதிகள் இருந்தன. மெல்லிய பனித்தகடு அவற்றைத் தென்படாதவாறு மூடியிருந்தது. இதைப் பற்றி ஆன்யா மறந்து போனாள். ஆபத்தைக் குறிக்கும் கம்பங்களைத் தாண்டி முன் சென்று நிலவறைத் துவாரத்துக்குள் போவதுபோலத் திடீரென மறைந்தாள். அந்த இடத்தில் தண்ணீர் லேசாகத் தெறித்தது மட்டுமே தெரிந்தது.

பனிக்கட்டியிலிருந்த துவாரத்தை கோல்யா முதலில் அடைந்தான். ஆனால் மறுகணமே கென்னாதிய் அவனை முந்திவிட்டான். ஸ்கேட்டுகள் பொருத்தியிருந்த பூட்சுகளை எவ்வளவு வேகமாகக் கழற்ற முடியுமோ, அவ்வளவு வேகமாகக் கழற்றிவிட்டு ஊர்ந்தும் தவழ்ந்தும் விளிம்பை எட்டிவிட்டான்.



ஆன்யா கூச்சலிடவில்லை. குளிரால் அவள் முகம் நீலம் பாரித்திருந்தது. கண்களில் ஆச்சரியமும் திகைப்பும் தென்பட்டன. பனிக்கட்டியின் விளிம்பைப் பற்றிக்கொண்டு, வெளியேற முயன்றாள். அதுவோ முட்டை ஓட்டைப் போல நொறுங்கிற்று. அவள் மீண்டும் மீண்டும் நீருக்குள் வழுகி விழுந்தாள். கூரிய விளிம்பு அவள் கைகளை இரத்தம் கசியச் சிறாய்த்துவிட்டது. மழமழப்பான பனித்தரை மேல் ஹாக்கிக் கழியால் துழாவினாள் ஆன்யா. தனக்குப் பின்னால் ஓடிவந்த மக்களின் கூச்சல்களை கென்னாதிய் கேட்டான். இருந்தாலும் திரும்பிப் பார்க்க அவனுக்கு நேரம் இல்லை.

“இதோ, ஆன்யா... இதோ... இதோ வந்துவிட்டேன்... பொறு!” என்று கத்தினான். தன்னுடைய ஹாக்கிக் கழியை ஆன்யாவின் பக்கம் நீட்டினான். அதனை அவள் பலமாகப் பற்றிக்கொண்டாள். தன் சக்தியை எல்லாம் திரட்டி, அவளைத் தன்பால் இழுத்தான். ஆன்யாவோ கரிய ஆவி படிந்த நீரில் தத்தளித்தாள். கென்னாதிய் விளிம்புக்கு இன்னும் அருகே நகர்ந்தான். திடீரென்று அவனுக்கு அடியில் பனிக்கட்டி படக்கென்று பிளந்தது. அவன் படுத்திருந்த பனிக்கட்டி, அந்தக் காவற்காரன் வீட்டுத் தரையைப் போல ஒருச்சாய்ந்தது. பின்பு சில்லிட்ட நீர் அவன் தலையை முழுக்காட்டிற்று.

“அமைதியாக இருங்கள்! முன்னே நகராதீர்கள்!” என்று தனக்குப் பின்னிருந்தவர்களை நோக்கிக் கிளிமேன்திய் செரிமிஷி கூச்சலிட்டார். அவருக்குப் பின்னே ஓடிவர முற்பட்ட யெவ்தொக்கீயா விளாஸியெவ்னாவின் தோள்களைப் பிடித்து, “தயவுசெய்து, இங்கேயே நில்லுங்கள்! சீக்கிரம் எனக்கு ஒரு கயிற்றையும் ஸ்கீகளையும் கொண்டு வாருங்கள்!” என்றார்.

விளையாட்டரங்கிலிருந்து கையோடு எடுத்து வந்திருந்த நீண்ட பலகையை முன்னே நகர்த்தி அதன் மறு நுனி நீர்க்குமிழியின் மறுவிளிம்பில் வாகாகப் பொருந்தச் செய்தார் விமானி.

பின்பு ஸ்கீகளை சிலுவை வடிவில் குறுக்கு நெடுக்காக வைத்து அவற்றில் படுத்துக்கொண்டார். கைகளைத் துடுப்புகளாகக் கொண்டு முன்னே வழுக்கிச் சென்று, விபத்து நடந்த இடத்தைக் கணப்பொழுதில் அடைந்தார். ஸ்கீகள் அவரைத் தண்ணீரில் விழாமல் தடுத்தன. அப்பொழுது ஆன்யா பலகையைப் பிடித்துத்

தொங்கிக்கொண்டிருந்தாள். ஆனால் கென்னாதிய், களைத்துச் சோர்ந்துபோய், பனிக்கட்டிச் சில்லுகளுக்கும் பாளங்களுக்கும் இடையில் தத்தளித்துக்கொண்டிருந்தான். மிதக்கும் பனிக்கட்டித் துண்டை அவன் பற்றியதுமே அதன் ஒரு முனை மேலெழும், மறுமுனை நீரில் ஆழ்ந்துவிடும். பனியால் விறைத்துக் கைகள் மரத்துப் போய்விட்டபடியால் மரத்தடுப்பை அவனால் எட்ட முடியவில்லை.

விமான ஓட்டி ஆன்யாவை விரைவாக வெளியில் இழுத்துப் பனிக்கட்டியில் கிடத்தினார். மற்றவர்கள் விரைவாக முன்வந்து அவளை இழுத்துத் தூக்கி ஆபத்தான இடத்திலிருந்து அப்பால் எடுத்துச் சென்றனர். இதற்கிடையே கென்னாதிய் விரைவாக வலுவை இழந்துகொண்டிருந்தான். வேகமான கீழோட்டத்தோடு போரிட்டுக் களைப்படைந்து, மூழ்கத் தொடங்கினான். அவன் கண்களுக்கு முன்னால் இடுக்கிகளைப் போலப் பச்சை வளையங்கள் சுருங்குவதும், விரிவதுமாக மிதந்தன... பிறகு, சுடரும் சாய்வெழுத்துக்களில் விமானவியல் கைப்புத்தகத்தின் பின்வரும் சொற்கள் அவன்முன் பளிச்சிட்டன. 'அளவு மீறிச் சுமை ஏற்றப்பட்ட விமானம், தலையை அமிழ்ந்துவிடாது வைத்திருக்க முயலும் மூழ்கிக்கொண்டிருக்கிற மனிதனைப் போன்றது.' அப்புறம் கென்னாதிய் நினைப்பிழந்தான்.

விமானி ஒரு கையால் பலகையைப் பிடித்துக்கொண்டு பனி நீரில் குதித்து, மற்றொரு கையால் பையனுடைய கழுத்துப் பட்டையைப் பற்றி இழுத்துப் பனிக்கட்டிக்கு மேல் கொண்டு வந்தார். ஓடும்போதே கழற்றி எறிந்திருந்த தன் மேல் கோட்டால் அவனைச் சுற்றிப் போர்த்தினார். உடம்பைக் குலுக்கி நீர் போகத் தட்டி உதறிவிட்டுப் பையனைக் கையில் எடுத்துக்கொண்டு, கரையை நோக்கி விரைவுடன் நடந்தார். அவருடைய நனைந்த உள்சட்டை உறைந்து, கஞ்சி போட்டது போல முடமுடத்தது.

மக்கள் தங்கள் மேல்கோட்டுகளை விரைவாகக் கழற்றி அவர் தோள்களின் மேல் போட்டுப் போர்த்தினர். அவர் செருமிக் கமறிவிட்டு, "பரவாயில்லை, பரவாயில்லை. நன்றி, இது முதல் தடவை அல்ல. நான் தினந்தோறும் குளிர்ந்த நீரில் குளித்துப் பழக்கப்பட்டவன்.... இதைவிடக் குளிர்ந்த நீரில் குளித்திருக்கிறேன்.... பையனைச் சீக்கிரமாக மோட்டாருக்கு எடுத்துச் செல்லுங்கள்" என்றார்.



கென்னாதியின் முகத்தருகே மேல்கோட்டின் மார்பு மடிப்பைச் சற்று விலக்கி, துவாரத்துக்குள் எட்டிப் பார்ப்பது போல உள்ளே நோக்கினார்.

"நீ எப்படியிருக்கிறாய்? பரவாயில்லையே?" என்று கேட்டார்.

"எ-எ-எல்-லா-ம் ந-ந-ந-ன்-றாக இ-ருக்கிறது" என்று கோட்டுக்கு உள்ளிருந்து பற்கள் கடகடக்கக் கூறினான் கென்னாதிய்.

"நல்லது! தைரியமாக இரு!"

## தம்பி

**ஆ**ன்யாவை வீட்டுக்குக் கொண்டு போனார்கள். அவளுடைய தாய் ஒரேயடியாக அழுது அரற்றிக் கையைப் பிசைந்தவாறு மகளைக் கதகதப்பான படுக்கையில் படுக்கவைத்து, அவளுக்கு மேல் பல போர்வைகளைப் போர்த்து, ராஸ்பெர்ரியுடன் சூடான தேநீரைப் பருகுவித்து, அவளைச் சுற்றிலும் வெந்நீர் பாட்டில்களை அடுக்கினாள்.

கென்னாதியை விமானி தன் அறைக்கு எடுத்துச்சென்றார். ஏனென்றால் குழந்தைகள் இல்லம், ஆஸ்பத்திரி ஆகியவற்றைவிட அவர் தங்கியிருந்த ஹோட்டல், ஆற்றங்கரைக்கு மிகவும் பக்கமாக இருந்தது.

ஹோட்டல் அறைக்கு மருத்துவர் வந்தபோது கென்னாதிய் விமானியால் உடம்பெல்லாம் செஞ்சூடாகத் தேய்த்து விடப்பட்டு, விமானியின் கதகதப்பான கம்பளி உள்ளாடையை ('ஆர்க்டிக் நிலைமைகளுக்காகத் தமக்குச் செய்யப்பட்டது' என்று வீரர் கூறினார்) அணிந்து படுத்திருந்தான். கால்மாட்டிலும் பக்கங்களிலும் மிகச் சூடான வெந்நீர் பாட்டில்கள் பொசுக்கிக் கொண்டிருந்தன.

"பொறுத்துக்கொள், பொறுத்துக்கொள்" என்றார் கிளிமேன்திய்.

விமானி கதகதப்பான பிளானல் பைஜாமா அணிந்துகொண்டு கொஞ்சம் போல நீர் கலந்த மதுவைப் பருகிவிட்டு, பிரம்மாண்டமான மென்மயிர்த்தோல் மூடு செருப்புகளைப் போட்டுக்கொண்டு, குறுக்கும் நெடுக்குமாக உலாத்திக்கொண்டிருந்தார். கென்னாதிய் ஒரு நாள் படுக்கையில் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு வைத்தியர் போய்விட்டார்.

"நல்லது, உடல் சூடேறிவிட்டதா?" என்று கட்டில் அருகே போய் கிளிமேன்திய் கேட்டார்.



கென்னாதிய் பேரானந்தத்தில் திளைத்தவாறு மூக்கைச் சுருக்கினான். அவன் கட்டாயம் புன்னகை செய்திருப்பான். ஆனால் மூக்கு வரை கதகதப்பான போர்வை போர்த்தியிருந்ததால் அது வெளித் தெரியவில்லை.

"எப்படியும் ஆட்டத்தில் ஜெயிக்க உனக்கு வாய்க்காது போயிற்று" என்று கிளிமேன்திய் கிண்டல் செய்தார். "பெண்கள் மூன்று கோல்கள் போட்டார்கள், நீங்கள் இரண்டுதானே போட்டிருக்கிறீர்கள்! போனால் போகிறது. வருத்தப்படாதே! உன் உடம்பு சூடேறிச் சரியான பிறகு ஒரே வரிசையாக மூன்று கோல்கள் போடுவாய். சரி, இப்பொழுது தூங்குவோம்."

விமானி படுக்கைத் திரைகளை இழுத்துவிட்டார். கென்னாதிய் மறுபடியும் கவலைப்படத் தொடங்கினான்.

'நான் அவருடைய தம்பி என்று எல்லாரிடமும் போய் சொல்லியிருப்பதை அறிந்து மறுநிமிடமே என்னை வெளியே துரத்திவிடுவார்!' என்று எண்ணமிட்டான். 'அதைப் பற்றி நானே அவரிடம் அப்புறம் சொல்லிவிடுகிறேன்... சற்றுநேரம் பொறுத்து.'

சீக்கிரத்தில் கென்னாதியின் காய்ந்த, பெட்டி போடப்பட்ட உடைகளும் படகுத்துறைப் பக்கத்தில் அவன் மறந்துவிட்ட பள்ளிக்கூடப் புத்தகங்களும் விமானியின் அறைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. கென்னாதிய் அப்போது தூங்கிக்கொண்டிருந்தான்.

மறுநாள் காலையில் எழுந்தபோது, கிளிமேன்திய் விருதுகள், ராணுவக் குல்லாய் ஆகியவற்றை அணிந்துகொண்டு, புறப்படத் தயாராக இருந்தார்.

வெளியில் மோட்டார் வண்டியின் இயந்திரம் சூடேறுவதற்காக முடுக்கிவிடப்பட்டு ஒருபொழுது உரக்கவும் மறுபொழுது தணிவாகவும் உறுமிக்கொண்டிருந்தது.

கிளிமேன்திய் மேசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து, ஆச்சரியத்தோடு தோள்களை அசைப்பதும் குல்லாவைப் பின்னே சாய்த்துக்கொள்வதுமாக எதையோ படித்துக்கொண்டிருந்தார். அவரது அகன்ற முகத்தில் குதூகலம் நிறைந்த விளங்காமை தென்பட்டது. வேடிக்கையாக விழிகளை உருட்டுவதும் உதடுகளைக் குவித்துக்கொண்டு "ப்ஹூ-ப்ஹூ" என்று ஒலிப்பதுமாக இருந்தார்.

விழித்து எழுந்தவுடனே, விமானியிடம் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் என்று கென்னாதிய் விரும்பினான். ஆனால், 'அவர் என்னை மூழ்காது காப்பாற்றினார். நானோ அவரையே பற்றிய இரகசியத்தை அவரிடமிருந்து ஒளிக்கிறேன். இந்த மர்மம் அவருக்குத் தெரிந்திருந்தால், என்னைக் காப்பாற்றியிருக்கமாட்டார்' என்று கென்னாதிய் எண்ணினான்.

"ஓஹோ, கடைசியாக எழுந்துவிட்டாயா! பனிக்கட்டியில் சிக்கிக்கொண்ட வாளை மீனே!" என்று கூவினார் விமானி.

அகலமாக அடிவைத்துப் படுக்கை அருகே சென்று இடுப்பில் கைவைத்துக்கொண்டு முன்னும் பின்னுமாகச் சாய்ந்து ஆடிக்கொண்டு, கென்னாதிய்க்கு எதிரே நின்றார்.

"அவர்கள் கொண்டுவந்தது உன் கணக்குப் புத்தகமா? எனக்கு ஒன்றுமே புரியவில்லை! எனக்கு எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்று அதில் இருந்தது. பாரேன், 'சோவியத் யூனியன் வீரப்பட்டம் பெற்றவரான கிளிமேன்திய் செர்மிஷுக்கு'. அதைத் திறந்து பார்த்தேன் - ஒன்றுமே புரியவில்லை. உனக்கே படித்துக் காட்டுகிறேன்:

'அன்புள்ள தோழர் செரிமிஷ்,

'செவெர்யான்ஸ்க் மூன்றாவது உயர்நிலைப் பள்ளிக் குழு ஐந்தாவது வகுப்பு மாணவனான தங்கள் தம்பி கென்னாதிய் செரிமிஷின் கட்டுப்பாடின்மை, படிப்பில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றின்பால் தங்கள் கவனத்தைத் திருப்ப விரும்புகிறது....'

"இதைப் புரிந்துகொள்ள என்னால் இயலவில்லை. எனக்குத் தம்பியே கிடையாதே" என்று சொன்னார்.

"அது என்னைப் பற்றியது" என்று கென்னாதிய் இமைகளைக் கொட்டிக் கன்னங்கள் சிவுசிவுக்கக் கூறினான். "ஆனால் படிப்பில் முன்னேற்றமின்மை போன மாதத்தில் மட்டுமே. உண்மையாகச் சொல்லுகிறேன்!"

ஐயோ, இந்தத் தரையில் நீர்த்துளை இல்லாது போயிற்றே! இன்னொரு முறை மகிழ்ச்சியுடன் விழுந்து மூழ்கியிருப்பானே!...



"இரு, இரு! சரி, நீ சரியாகப் படிப்பதில்லையாக்கும். அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? தம்பி என்று எழுதியிருக்கிறதே?" என்று விடாப்பிடியாகக் கேட்டார் விமானி.

"தம்பி என்பது நான்தான்" என்று கென்னாதிய் முணுமுணுத்தான்.

"நீ தான் தம்பியா?" என்று கிளிமேன்திய் வியப்போடு கேட்டார்.

"அதாவது தம்பி போன்றவன்."

"யாருடைய தம்பி?"

"உங்களுடைய தம்பி போன்றவன்..."

"என்னுடைய தம்பியா?"

"ஆமாம்."

"உனக்குத் தடிமல் பிடித்துவிட்டது போல் இருக்கிறது. காய்ச்சல் அடிக்கிறது என்பது தெரிகிறதே. இரு, நான் இதோ வெப்பமானியைக் கொண்டுவருகிறேன்."

"வேண்டாம், எனக்கு ஒன்றுமில்லை!" என்று புகலின்றிக் கத்திய கென்னாதிய், "நான்தான் சும்மா இப்படி... ஏதோ... நீங்களும், உம்ம்... நானும்..." என்று இழுத்தான்.

"சரி? நீயும் நானும், நாம் இருவரும், அப்புறம்?"

"நீங்கள் மட்டும் என் மேல் கோபப்படாதீர்கள். எல்லாவற்றையும் இதோ சொல்லுகிறேன்..." என்று உரக்கத் தேம்பித் தேம்பி அழுதவாறு போர்வையால் தலையை மூடிக்கொண்டான்.

பருத்த போர்வைக்கு அடியிலிருந்து கென்னாதிய் தன் குற்றங்களைக் கூறி மன்னிப்புக் கோருவதை விமானி கேட்க வேண்டியிருந்தது. வெளியே நீட்டிக்கொண்டிருந்த பாதத்தில் விமானி கிச்சுக்கிச்சு மூட்டிப் பார்த்தார். அப்போதும் குற்றவாளி வெளியே வரவில்லை.

"கடந்த இரண்டு ஆண்டு காலமாக... உங்களைப் பற்றி எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தேன்" என்று போர்வைக்குள் இருந்து கம்மிய குரல் வந்தது. "உங்களை நினைத்துத்தான் நான் நன்றாகப் படித்தேன்... விமானவியலைக் கற்றுக்கொண்டேன். எது

வேண்டுமானாலும் கேளுங்கள்... எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லுகிறேன். எனக்கு டீவியேஷன், ட்ரிம்மர் ஆகியவற்றைப் பற்றித் தெரியும்... இஷ்டப்படி சில கேள்விகளைக் கேளுங்கள்."

"அதைப் பற்றி நான் எதற்காகக் கேட்க வேண்டும்? சரி, இதோ ஒரு கேள்வி கேட்கிறேன். பக்கக் காற்று வீசும்போது, விமானத்தை எவ்வாறு இறக்குவாய்?"

"காற்று பக்கமாக வீசும்போது, இறங்கு திசைக்கு இடமாகவோ வலமாகவோ காற்று அடிக்குமாறு தரையில் இறக்க வேண்டும்" என்று மாறிய குரலில் படுக்கைத் துணிகளுக்குள் இருந்துகொண்டே சொன்னான். "எஞ்சின் இயங்குகிறதா?" என்று வினவினான்.

"சரி, அப்படியே இருக்கட்டும். எஞ்சின் இயங்கும்போது விமானத்தை எப்படி இறக்குவாய்?"

"அத்தகைய சமயங்களில் காற்றுக்கு எதிராகச் செல்ல வேண்டும். பூமியை அணுகும்போது விமானத்தைச் சமப்படுத்தி எஞ்சினை ஒரு நிமிடம் வேகமாக இயங்கச்செய்து வழக்கத்தைவிடக் கடுமையாக இறங்க வேண்டும்."

"அடேயப்பா! என்னவெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாய்!" என்று விமானி வியப்புற்றார். "முப்புள்ளி இறக்கம் இது. இவற்றை எல்லாம் எங்கே கற்றுக்கொண்டாய்?"

பதினைந்து நிமிடங்களுக்குள் கிளிமேன்திய் யாவற்றையும் தெரிந்துகொண்டார். முதலில் புருவத்தைச் சுளித்துக்கொண்டிருந்தார். பின்னர் தலையை அசைக்க மட்டுமே செய்தார்.

"சரி, இனி மறைந்திருக்க வேண்டியதில்லை... நீ வெளியில் வரலாம்!" என்று இங்கும் அங்கும் நடந்துகொண்டே சொன்னார். "நீ என்னுடைய தம்பியாகப் பாவித்துக்கொண்டால், பாவித்துக்கொள். ஒவ்வொரு நகரத்திலும் உன்னைப் போலப் பல தம்பிகள் எனக்கு உள்ளனர். உண்மையாகவே! அவர்கள் உன்னைப் போல என் உறவினர்கள் என்று சொல்லிக்கொள்ளவில்லை. ஆனாலும் நாங்கள் நெருங்கிய சிநேகிதர்கள். ஒருவருக்கு ஒருவர் கடிதம் எழுதிக்கொள்கிறோம். தங்களைப் பற்றியும் தங்கள் வாழ்வில் நடப்பது பற்றியும் அவர்கள் எழுதுவார்கள். தங்கமான பையன்கள்! தம்பீ, நீ மட்டுமீறிப் போய்விட்டாய் என்று நினைக்கிறேன். இந்தப் பாசாங்கு பாராட்டலை நீ உனக்குள் வைத்துக்கொண்டிருந்தாயானால்



இவ்வளவு மோசமாய்ப் போயிராது. இப்போதோ வேறு எத்தனையோ பேர் இதில் இழுக்கப்பட்டிருக்கிறார்கள். நீ தவறான நோக்கத்துடன் இப்படிச் செய்யவில்லை என்றாலும் நிலைமை எக்கச்சக்கமாகப் போய்விட்டது. நீ இப்படிச் செய்திருக்கக் கூடாது. தவிர, பொய் சொல்லுவது மிகவும் இழிந்த செயல்களில் இரண்டாவது ஆகும்."

"முதலாவது எது?" என்று கென்னாதிய் கேட்டான்.

"எல்லாவற்றிலும் இழிந்த காரியம்" எனக் கட்டில் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு பேச்சைத் தொடர்ந்தார் விமானி. "கென்னாதிய், **எல்லாவற்றிலும் இழிந்தது எதுவெனில், மக்களும் கட்சியும் பொறுப்புக் கட்டியிருக்கிற செயலைக் குட்டிச்சுவராக அடிப்பதாகும். அதுதான் ஒருவன் செய்யக்கூடியவற்றில் எல்லாம் கடைகெட்ட காரியம்** என்று படைவீரர்களான நாங்கள் நினைக்கிறோம் புரிகிறதா?" என்று வினவினார்.

"புரிகிறது" என்றான் கென்னாதிய்.

"அப்படியா, சந்தோஷம்!"

கென்னாதியின் மூக்கை விளையாட்டாக நிமிண்டி, "நீயும் என்னைப் போலவே - அதே குலப்பெயர் கொண்டவர்கள் நூற்றுக்கணக்கில், உறவினரோ, ஒருவர் கூடக் கிடையாது" என்றார்.

"எனக்கு ஒரு சகோதரி மாஸ்கோவில் இருக்கிறாள். ஆனால்..." என்று கென்னாதிய் கையை உதறினான். "அவள் எனக்குத் தமக்கை என்றாலும் அவளிடம் தனிச்சிறப்பு எதுவும் இல்லை. என்ன வேலை செய்கிறாள் தெரியுமா? அவள் தையல் வேலை செய்கிறாள்."

"ஓஹோ, அவள் தையற்காரியா?" என்றார் கிளிமேன்திய்.

"ஆமாம், ஏதோ தனிவகை உடுப்புகள் தைக்கிறாள்."

"அப்படியானால் அவள் செய்வது மிகவும் பயனுள்ள காரியம் ஆயிற்றே. தம்பீ, உனக்குத் தெரியாதா, தக்க உடுப்பு இல்லாமல் வெகுதூரம் பறக்க முடியாது. நாட்டின் மறுகோடிக்குப் பறப்பதற்கு நாங்கள் எம்மாதிரி உடை அணிவது என்பது பெரிய பிரச்சினையாயிருந்தது. எத்தகைய பறப்பு உடைகளை எங்களுக்காக உருவாக்கினார்கள், தெரியுமா? 'உருவாக்கினார்கள்' என்று நான் சொல்வது அர்த்தத்தோடுதான். ஏனென்றால்,

இந்த உடைகள் 'தைக்கப்பட்டவை' என்று சொல்ல முடியாது. முன்பெல்லாம், மென்மயிர்த்தோல் கோட்டு 'கட்டப்பட்டது' என்று சொல்வது வழக்கம். இந்த உடைகளைப் பற்றியும் அவ்வாறே சொல்லலாம். கற்பனை செய்து பார். வடக்குக் கடல் வாத்தின் பஞ்சிறகு, தோல், பட்டு, நீர் சுவறா மும்மடிப்பு உள்துணி, உடை முழுவதிலும் வெப்பமூட்டும் மின்சார அமைப்புகள். நீ என்னடா என்றால் தையற்காரி என்று அலட்சியமாகச் சொல்கிறாய்...' என்று கூறினார் கிளிமேன்திய்.

விமான ஓட்டி எழுந்து அறையின் மறுகோடி வரை நடந்துவிட்டுக் கட்டிலுக்குத் திரும்பி வந்தார்.

"நாம் இப்போது என்ன செய்யலாம்? அப்படியே எல்லாவற்றையும் விட்டுவிடலாமா? ஊம்? நாம் உண்மையில் சகோதரர்கள் என்று எல்லோரும் நினைக்கட்டுமே. நீ என்ன கருதுகிறாய்?"

கென்னாதியின் தலை அருகே சாய்ந்து, அடர்ந்த புருவங்கள் கொண்ட விழிகளால் அவனைக் கூர்ந்து நோக்கினார்.

கென்னாதிய் மௌனமாக இருந்தான்.

"சரி, வேறு ஏதாவது வழி இருக்கிறதா?" என்று விமான ஓட்டி கேட்டார்.

"இருக்கிறது..." என்று கென்னாதிய் சிரமத்துடன் சொன்னான். "அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்ளட்டும். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தவிர, கோழையாகவும் பொய்யனாகவும் இருந்தால் நான் எப்படி உங்கள் தம்பியாக இருக்க முடியும்?"

"சரி! இதற்காக உன்னை மெச்சுகிறேன். இது எனக்குப் பிடித்தமாயிருக்கிறது" என்று கிளிமேன்திய் கூவினார். "அதற்குப் பின்னர் உன் அண்ணனாக இருக்க நான் தாராளமாக இசைவேன். கவலைப்படாதே. பள்ளிக்கூடத்தில் உன்னை ஏளனம் செய்ய மாட்டார்கள். நானே அங்கு போய் எல்லாவற்றையும் சரி செய்கிறேன்."

திடீரென்று அவர் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டார். ஒரு நாற்காலியைக் கட்டிலருகே தடாலென்று இழுத்துப் போட்டு, குதிரைமீது உட்கார்வதுபோல் அமர்ந்து, அதன் வெல்வெட் முதுகுமேல் கைகளைக் கட்டிக்கொண்டார்.



"இதோ பார், அப்பனே, நீ என் தம்பியாக இருக்கத் தீர்மானித்திருந்தால் அதற்கு ஏற்ப நடந்துகொள்ளவும் செய்யலாம். படுக்கையில் புரண்டது போதும். எழுந்திரு, உடுத்திக்கொள், நாம் இருவரும் நேருக்கு நேர் பேசலாம். நான் கேள்விப்படுவது என்ன? நீ என் தம்பி என்று சொல்கிறாய். ஆனால் படிப்பில் மகா மட்டமாக இருக்கிறாயே. கட்டுப்பாடோ, ஒரே மோசம். இது கொஞ்சங்கூடச் சரி அல்ல! நான் உன்னோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறேன். நீ என்னுடைய தம்பியாக உண்மையில் இருக்க விரும்பினால், குலப்பெயரைக் கெடுக்காதே! இல்லாவிட்டால் நம்மில் ஒருவன் இதை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். இக்காலத்தில் படிப்பதே இன்பமாயிற்றே. உன்னுடைய கணக்குப் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவை மிக சுலபம். நீ விழித்துக்கொள்வதற்குள் நேரத்தைப் போக்க ஐந்தாறு கணக்குகள் போட்டேன். நான் உன் வயதாக இருந்தபொழுது, மாஸ்டர் தாம் விரும்பியதெல்லாம் என் பிடரித் தலையில் ரூல்தடியால் ணங்கென்று போடுவார் - அதுதான் நான் கணக்கு படித்த முறை!"

"எங்கள் கணக்குகள் எல்லாம் சுலபமானவை என்று எண்ண வேண்டாம். கடினமானவையும் உள்ளன" என்று கென்னாதிய் சிறிது தைரியமாகப் பேசினான். "உதாரணமாகப் புத்தகத்தின் கடைசிப் பகுதியில் இருக்கிறதே, பக்கத்தில் குறியிடப்பட்டிருக்கின்றதே, அதை எடுத்துக்கொள்ளுங்கள். வகுப்பில் யாருமே அதைப் போட முடியவில்லை."

"எங்கே, அந்தக் கணக்கைப் பார்ப்போம்" என்றார் கிளிமேன்திய். குல்லாவைக் கழற்றி மேசைமேல் வீசினார். "இதுவா? ஊம்! நிபந்தனைகள் தெளிவாயுள்ளன. சரி, எப்படித் தொடங்கலாம்? ஊம், ஊம்... சரி, சரி! தெள்ளத் தெளிவாயிருக்கிறதே, இப்போது, எவ்வளவு? இருநூற்றுப் பதினைந்து புள்ளி எட்டு ஆகவே... நான்கு எழுதலாம், மீதி ஆறு... சரி! இதை இங்கே போடலாம். எவ்வளவு மீதி? சரி, இப்போது அடைப்புக் குறிகளை நீக்குவோம்."

ஜன்னலுக்கடியில் மோட்டார் வண்டி இடைவிடாமல் ஹார்ன் அடித்துக்கொண்டிருந்தது.

"பரவாயில்லை, அவன் காத்திருக்கட்டும்! இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அவசரப்படக் கூடாது."

அப்போதுதான் டெலிபோன் மணி அடித்தது.

"இந்தச் சந்தடியில் ஒருவன் எப்படிக் கவனத்தை ஈடுபடுத்தி வேலை செய்ய முடியும்?" என்று கிளிமேன்திய் கோபத்தோடு உரைத்தார். டெலிபோனைக் கையில் எடுத்துப் பக்கத்தில் வைத்துத் தலையணையால் மூடினார்.

"எங்கே விட்டோம்? ஊம். இப்போது நாம் வகுக்கலாம். பிறகு கழிக்க வேண்டும். இதில் கடினம் என்ன? அவ்வளவுதான், முடிந்தது."

கிளிமேன்திய் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். குல்லாவைப் போட்டுக்கொண்டு ஆடைகள் தொங்கும் ஸ்டாண்டுக்குச் சென்று, மேல்கோட்டை எடுத்துக்கொண்டார்.

"உங்கள் விடை புத்தகத்தின் கடைசியில் தரப்பட்டுள்ள விடைக்கு ஒத்து வரவில்லை" என்று கென்னாதிய் சொன்னான்.

"ஒத்துவரவில்லையாவது?" என்று மேசைக்குத் திரும்பினார் விமானி. "ஊம், நீ சொல்வது சரிதான். பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஒரு நிமிடம் பொறு. எங்கோ நாம் தப்பு செய்திருக்க வேண்டும். இல்லை. முடியவே முடியாது! எல்லாம் சரியாகத் தானே இருக்கிறது! நல்ல கதைதான் போ. புத்தகத்தின் விடை தவறாக இருக்க வேண்டும். இப்போதெல்லாம் அப்படி அடிக்கடி நடைபெறுகிறது. நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், அச்சுப்பிழைகள் பிரச்சினையைக் கட்டாயம் கிளப்புவேன்."

"புத்தகத்தில் இருக்கும் விடை சரியானது. ஏனெனில் இக்கணக்கைப் போட்டபோது அதே விடை எங்கள் ஆசிரியருக்கு வந்தது. எப்படிச் செய்ய வேண்டும் என்று அவர் காட்டினார். ஆனால் நான் மறந்துவிட்டேன்" என்று கென்னாதிய் பிடிவாதமாகச் சொன்னான்.

விமானி மேல்கோட்டைக் கழற்றாமலே மேசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார். வெளியில் மோட்டார் வண்டி தொடர்ந்து ஹார்ன் அடித்துக் கொண்டிருந்தது. தலையணைக்கு அடியில் இருந்த ரிஸீவர் கறுமுறுத்தது.

"ஊம், இதில் எங்கோ ஒரு தந்திரம் இருக்கிறது. வா, இருவரும் சேர்ந்து போடுவோம்" என்று மேல்கோட்டைக் கழற்றினார் விமானி.

அப்பொழுது யாரோ கதவைத் தட்டினார்கள். முதலில் மெல்லவும் பயத்தோடும் பின்னர் பலமாகவும் தைரியமாகவும்



தட்டினார்கள். கதவுக்குப் பின்னால் காலடிச் சத்தமும் வாதங்கள் புரியும் குரல்களும் கேட்டன.

"நீ முதலில் போ" என்று பேசிக்கொண்டிருந்த ரீத்தாவின் குரலை அறிந்துகொண்டான் கென்னாதிய்.

"எதற்காக நான் போக வேண்டும்? லுக்காஷின் முதலில் போகட்டும்" என்று ப்ளீன்துஸ் கட்டைக் குரலில் விடையிறுத்தான்.

விமான ஓட்டியைப் பயத்துடன் பார்த்து, "என் வகுப்புத் தோழர்கள் வந்திருக்கிறார்கள்" என்றான் கென்னாதிய்.

கிளிமேன்திய் தலையை நிமிர்த்தினார்.

"உன்னுடைய வகுப்பு மாணவர்களா? நல்லது! இப்பொழுது நீயே அவர்களுக்கு முழுக்கதையையும் சொல்லலாம்."

"இல்லை... நான் அப்பால் போய்விடுவதே மேல்... அப்புறம் அவர்களுக்கு எல்லாவற்றையும் சொல்லுகிறேன்" என்று அவசரமாக முணுமுணுத்தான் கென்னாதிய்.

"நல்லது, உனக்கு அப்படித் தோன்றினால் அவ்வாறே செய். ஓடிவிடுவது சுலபம். இருந்து அவர்களை நேரிட்டு நோக்குவது கடினம். என்ன முடிவு செய்திருக்கிறாய்? சீக்கிரம் உடை மாற்றிக்கொள்."

கட்டில் திரையைப் போட்டுவிட்டு கிளிமேன்திய் கதவைத் திறக்கப் போனார்.

ரீத்தா, ப்ளீன்துஸ், லுக்காஷின், ஸ்வான்த்ஸவ், 5 'பி' வகுப்பைச் சேர்ந்த இன்னும் மூன்று பையன்கள் ஆகியோர் கதவண்டையில் ஒருவர் பின் ஒருவர் மறைந்துகொள்வதும், ஒருவர் காலை மற்றவர் மிதிப்பதுமாகச் சுவரை ஒட்டிக் கும்பலாக நின்றுகொண்டிருந்தனர். ஒவ்வொருவருடனும் விமான ஓட்டி முறையாகக் கைகுலுக்கினார். ப்ளீன்துஸ் ஒருதரம் கைகுலுக்கிவிட்டு மற்றவர்களுக்குப் பின்னே போய் மறுமுறையும் வீரரோடு கைகுலுக்கினான்... எல்லோரும் நாற்காலிகள்மீதும், சோபாவின் மீதும் உட்கார்ந்துகொண்டு, விமான ஓட்டியை மௌனமாக நோக்கினர்.

"தங்கள் தம்பி கென்னாதிய் எப்படி இருக்கிறான்?" என்று ரீத்தா தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டாள்.

விமான ஓட்டியின் முகம் மாறியது. அவர் பெருமூச்சுவிட்டார், பின் கழுத்தைத் தேய்த்துக்கொண்டார்.

"ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டது என்று அஞ்சுகிறேன். இருந்தபோதிலும் எல்லாவற்றையும் கென்னாதிய் தானே விளக்குவான். இங்கே வா, கென்னாதிய்!" என்று கூறினார்.

கிளிமேன்திய் எழுந்திருந்து, கட்டில் திரைகளை விலக்கினார். படுக்கை இடத்தை எல்லோரும் பார்த்தனர். யாரும் இல்லை. கென்னாதிய் மறுபடியும் மறைந்துவிட்டான்...

கிளிமேன்திய் ஒன்றும் புரியாமல் சிறுவர்களை நோக்கினார். படுக்கையிடத்துக்குள் போய்ச் சுற்றுமுற்றும் பார்த்தார். படுக்கை அடியில்கூடக் கண்ணோட்டினார். கென்னாதிய் எங்கும் இல்லை.

படுக்கை இடத்திலிருந்து நடையறைக்குச் செல்வதற்கான கதவு ஒருக்கணித்திருந்தது. கிளிமேன்திய் அதைக் கோபத்துடன் சுட்டி, "இந்த வழியாக அவன் ஓடியிருப்பானோ!" எனக் கூறினார். "நல்லது..." என்று அவர் தொடங்கினார். திடீரென்று ஒரு தந்திர நோக்கு அவர் விழிகளில் பளிச்சிட்டு மறைந்தது. "அவனுக்குப் பதில் நானே பேச வேண்டும் என்று நினைக்கிறேன்... கென்னாதியைப் பற்றி ஒரு மோசமான விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவன் ஒரு கோழை. சொந்தத் தம்பியே கோழை என்பது மிகக் கைப்பான விஷயம், அல்லவா?"

"நான் உங்கள் தம்பியும் அல்ல, கோழையும் அல்ல!" என்று கட்டில் திரைகளின் மடிப்புக்களிலிருந்து ஒரு குரல் வந்தது. திரைச்சீலை நகர்ந்தது. ரீத்தா பயத்தால் கீச்சிட்டாள்.

கென்னாதிய் வியர்த்து, முகம் சிவந்து, தன் மறைவிடத்திலிருந்து வெளிவந்தான்.

"ஓ, உன் மீதி உடம்பும் இங்கேதான் இருக்கிறதா? உன் பாதங்களைத்தான் இங்கே விட்டு விட்டுப் போனாய் என்று நினைத்தேன்..." என்றார் கிளிமேன்திய்.

"ஏன், அவற்றை உங்களால் பார்க்க முடிந்ததா?" என்று முகம் இன்னும் சிவக்கக் கேட்டான் கென்னாதிய்.



"ஓஹோ, தம்பி, உனக்கு மறைந்துகொள்ளும் திறமை பற்றாது. படுக்கைத் திரைகளின் அடியிலிருந்து உன் நமுதா பூட்சுகள் வெளியே நீட்டிக்கொண்டிருந்தன."

இந்த விவகாரமெல்லாம் மாணவர்களுக்கு விளங்கவே இல்லை. கென்னாதியையும் விமானியையும் மாறி மாறிப் பார்த்தனர்.

"கென்னாதிய், ஏன் ஒளிந்துகொண்டாய்?" என்று ஸ்வான்த்ஸவ் கேட்டான்.

"நான் ஒளியவில்லை... தைரியத்தை வரவழைத்துக்கொள்ள முயன்றுகொண்டிருந்தேன்" என்றான் கென்னாதிய்.

"தைரியம் வந்ததும் நன்றாக மூச்சு இழுத்துவிட்டு, உள்ளதைச் சொல்லிவிடு" என்று கிளிமேன்திய் சொன்னார்.

கென்னாதிய் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

"விஷயம் என்ன தெரியுமா, தோழர்களே" என்று தாழ்ந்த குரலில் கூறினான். "இந்தத் தடவை உண்மையைச் சொல்லுகிறேன். எனக்கு எந்தப் பெயரை வேண்டுமானாலும் சூட்டுங்கள்... நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன்."

நண்பர்களுக்கு முழுக் கதையையும் கூறிவிட்டான் கென்னாதிய்.

முதலில் எல்லோரும் மலைத்துப் போயினர். மூச்சுத் திணற, அவனை அருவருப்புடன் நோக்கிக்கொண்டே அப்பால் நகர்ந்தனர். பின்பு கோபத்தோடு அவனருகில் வந்தனர்.

"நீ செய்தது என்ன தெரியுமா?" என்று லுக்காஷின் மெல்லச் சொன்னான்.

"நீ எப்படிப் பொய் சொல்லலாம்!" என்று ரீத்தா ஆத்திரப்பட்டாள். "'அண்ணன் இப்படிச் செய்தார், அண்ணன் அப்படிச் சொன்னார்' என்ற கதைகளை நாங்கள் ஒரேயடியாக நம்பி ஏமாந்தோமே!" என்றாள்.

"ஒரு வினாடி பொறுங்கள்" என்று கிளிமேன்திய் சொல்லத் தொடங்கினார். ஆனால் கென்னாதிய் இடைமறித்தான்.

"நீங்கள் என்னைச் சங்கடத்திலிருந்து தப்புவிக்க வேண்டாம்! விளையாட்டிடத்தில் ஒருமுறை காப்பாற்றியது போதும்."

அவன் பேசாமல் இருந்தான். அவன் தோழர்களும் தலைகுனிந்து மௌனமாயிருந்தனர். அவர்களால் அவனைப் பார்க்கக்கூட முடியவில்லை.

கென்னாதிய் செய்த தவறு என்ன என்பதை விமானி மாணவர்களுக்கு விளக்கினார். உண்மையான கனவை எல்லோரிடமிருந்தும் மறைத்ததும், பொய்யான பகுதியைத் தம்பட்டம் அடித்ததுமே கென்னாதியின் தவறு என்றும், ஆகவே அவன் கனவு பொய் ஆகிவிட்டது என்றும் தணிந்த, உறுதியான குரலில் சொன்னார்.

“கனவுகள் அற்புதமானவை. ஆனால் ஒவ்வொரு கனவும் உண்மைக்குப் பொருந்த வேண்டும். அப்போது பிறவெல்லாம் ஒத்து இருக்கும்” என்றார் கிளிமேன்திய்.

“அது அவன் கனவாக இருந்தால்...” என்று ஸ்வான்த்ஸவ் தாழ்ந்த குரலில் சொன்னான்.

“அவன் தனக்குள் கற்பனை செய்துகொண்டிருந்தால் எல்லாம் சரியாயிருந்திருக்கும். ஆனால் அவன் அதைப் பற்றிப் பறைசாற்றியிருக்கக் கூடாது” என்றான் லுக்காஷின்.

அவனை ஒருவரும் ஆதரிக்கவில்லை.

“நீ மட்டும் சப்பாயெவ் ஆக வெளிப்படையாய்ப் பாசாங்கு செய்வதில்லையா?” என்று ரீத்தா திடீரென்று அவன் மேல் சீறி விழுந்தாள். “தோழர்களே, குதிரைகள்மீது ஏறுங்கள்!” என்று அவனைக் கோரணி செய்தாள்.

எல்லோரும் சிரித்தனர். இறுக்கம் அகன்றது.

ஆன்யா எப்படி இருக்கிறாள் என்று காண வெவ்தொக்கீயா விளாஸியெவ்னா காலையில் அவள் வீட்டிற்குப் போயிருந்தாள். கென்னாதியைப் பற்றிப் பேசத்தொடங்கினர். ஆன்யா தான் அறிந்ததை ஆசிரியைக்குச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

வெவ்தொக்கீயா விளாஸியெவ்னா ஒரேயடியாகக் கலக்கமுற்றாள்.

“சிறுவன் மனம் என்ன பாடு படுகிறது என்பதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன்!” என்று சொன்னாள்.



வெவ்தொக்கீயா விளாஸியெவ்னா ஹோட்டலுக்கு விரைந்து சென்றாள்.

ஹோட்டல் அருகே வந்ததும் வாயிலில் இரண்டு மோட்டார் வண்டிகளைப் பார்த்தாள். விமானி ஒரு முக்கியமான பிரச்சினையைத் தீர்ப்பதில் ஈடுபட்டு இருப்பதால், தம்மை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது எனக் கண்டிப்பாக ஆணையிட்டிருக்கிறார் என்று ஹோட்டல் சிப்பந்தி வெவ்தொக்கீயா விளாஸியெவ்னாவிடம் கூறினான். வெவ்தொக்கீயா விளாஸியெவ்னா கதவைத் தட்டினாள். யாரும் திறக்கவில்லை. ஓசையின்றித் திறந்துகொண்டு நுழைந்தாள்.

கீழே மோட்டார் வண்டிகள் ஊங்காரம் இட்டுக்கொண்டும், உறுமிக்கொண்டும் இருந்தன. தலையணைக்கு அடியில் ரிசீவர் கறுமுறுத்துக்கொண்டிருந்தது. விமான ஓட்டியின் மேல்கோட்டு, நாற்காலியின் பின் நழுவி விழுந்து, தரையில் கிடந்தது. வீரர், தன்னை அவர் தம்பி என்று அழைத்துக் கொள்பவன், அவனுடைய 5 ‘பி’ வகுப்பு நண்பர்கள், எல்லோரும் மேசை மேல் சாய்ந்து காரசாரமாக வாதித்துக்கொண்டிருந்தனர.

“இல்லை, இதில் ஏதோ கோளாறு இருக்கிறது!” என்று கிளிமேன்திய் மேசைமேல் அடித்து, உரத்த குரலில் சொன்னார். “நாம் சரியாகத்தான் செய்தோம். தவறு அதில் இல்லை. வாருங்கள். மறுபடியும் தொடங்கலாம்.”

## சிக்கல் தீர்ந்தது

பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சிறுவர்களோடு பேசித் தாமே எல்லா விவகாரத்தையும் சரிக்கட்ட கிளிமேன்திய் செரிமிஷ் விரும்பினார். ஆனால் பல அவசர வேலைகள் இருந்ததால் இவ்வாறு செய்வதற்கு நேரமில்லை. பல கூட்டங்களில் பேசினார். மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்தார். மர அறுவை ஆலைக்கும் தொழிற்சாலைகளுக்கும் சென்றார். உறுதிமொழிப்படி வட்டாரப் படைவீரர் பாளையங்களில் உரையாற்றினார். பள்ளிக்கூடத்திற்குப் போக முடியவில்லை.

ஆனாலும் அவர் ஐந்தாவது வகுப்பிற்கு ஒரு கடிதம் அனுப்பியதன் மூலம் தம் சொல்லைக் காப்பாற்றிக்கொண்டார். ஹோட்டல் அறையில் மாணவர்களுக்குச் சொல்லிய பல விஷயங்களை அதில் திரும்பவும் எழுதியிருந்தார்.

கடிதத்தை வகுப்பில் உரக்கப் படித்தனர். பின்னர் பள்ளியின் சுவர்ச் செய்தித்தாளில் போட்டனர். அதன் ஒரு பகுதி வருமாறு:

‘5 ‘பி’ வகுப்பைச் சேர்ந்த அருமை நண்பர்களே, இப்பொழுது சில குடும்ப விஷயங்களை விவாதிக்கவும் சிறிய தப்பபிப்பிராயத்தை விளக்கவும் விரும்புகிறேன், ஏதோ குழப்பம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் தவறாக எண்ணும்படி விட நானும் கென்னாதியும் விரும்பவில்லை. உண்மையில் கென்னாதிய் என் தம்பியல்ல. உள்ளதைச் சொல்லப் போனால் என்னுடையது போன்ற குலப்பெயருடைய ஒருவன். அவன் சிறிது பகற்கனவு கண்டு, எல்லாம் உண்மை என்று நம்பிக்கொண்டான். உங்களையும் நம்ப வைத்தான் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டுவதில்லை. பொய் சொல்வதில் பயனில்லை. அவன் நல்ல பையன். நான் அவனை மூழ்கவிடாமல் காப்பாற்றியது வீணல்ல, பொய் சொன்னதற்காக அவனுக்கு நன்றாகக் கொடுங்கள், ஆனால் அளவு மீறி விடாதீர்கள்.

‘என் உறவினனாக இருந்ததிலிருந்து அவன் அதிக லாபம் பெறவில்லை. மக்களை அவர்களின் செயல்களுக்காகப் போற்றுகிறோமே தவிர, அவர்கள் உறவினர்களுக்காக அல்ல. ஒருவன் யாருடைய தம்பியாகவோ, மாமாவாகவோ இருந்தாலும் சரியே, உறவினரின் சார்பு இன்றி, சுதந்திரமாகத் தன் தகுதியை நிரூபிப்பது அவசியம்.

‘தோழர்களே, நம் வாழ்க்கைகளில் கனவு என்பது போற்றப்பட வேண்டியதுதான். கனவுகள், வாழ்க்கையின் பரந்த பாதைகளில் ஒருவனுக்கு வழிகாட்டுகின்றன. வாழ்வில் கனவு கண்டு கொண்டிருக்கும் ஒருவரைப் பற்றிச் சிரிப்பதற்கு எதுவும் இல்லை.

‘என்னை 5 ‘பி’ வகுப்பின் நெருங்கிய உறவினராக நீங்கள் எண்ணுவது வழக்கமாகிவிட்டதால், வருங்காலத்தில்கூட உங்கள் அண்ணனாகத் தொடர்ந்து இருந்து வருவேன். கென்னாதிய் இதற்குத் தலைவனாக இருக்கலாம். ஏனெனில் தொடக்கத்திலிருந்து உறவு கொண்டுள்ளோம்.

‘எச்சரிக்கையாக ஒரு சொல்: பழைய காரியங்களைப் பற்றி நீங்கள் அவனைக் குத்திக்காட்டுவதாக எனக்குத் தெரிந்த உடனே, நம் நட்பு முறிந்துவிடும்.

‘ஆகவே, அவனைச் சீண்டுவதை ஒரேயடியாக நிறுத்திவிடுங்கள்! இவ்வுடன்பாட்டைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதாக நீங்கள் எனக்கு வாக்குக் கொடுத்ததாகக் கருதுகிறேன்.

‘நம்மால் அன்று போட முடியாத அந்தக் கணக்கிற்குக் கடைசியில் எனக்குச் சரியான விடை கிடைத்துவிட்டது. அது மிகவும் எளிதானதே. தொடக்கத்தில் தவறான முறையில் போடத் தொடங்கினேன்... சில சமயங்களில் வாழ்க்கையிலும் அவ்வாறு நடக்கிறது. அது ஒரு சிக்கலான கணக்கு. ஒரு தனித்தாளில் என்னுடைய வழிகளைக் குறித்து அனுப்பியுள்ளேன்...”

கிரீல் ஸ்தெபானவிச் கொடுத்த கடிதத்தை அவரிடம் கென்னாதிய் திருப்பிக் கொடுத்தான். அதன் அடியில் பின்வரும் குறிப்பு இருந்தது:

> எல்லாவற்றையும் நன்கு கவனித்தேன். அவன் முன்னேற்றம் அடைவான் என்பது உறுதி. மற்றவை எல்லாம் ஏற்றபடி இருக்கின்றன.

**கிளிமேன்திய் செரிமிஷ்,**
ஏற்புச் சகோதரன்.



எல்லாவற்றிலும் இழிந்தது
எதுவெனில், மக்களும் கட்சியும்
பொறுப்புக் கட்டியிருக்கிற
செயலைக் குட்டிச்சுவராக
அடிப்பதாகும். அதுதான்
ஒருவன் செய்யக்கூடியவற்றில்
எல்லாம் கடைகெட்ட காரியம்

புலம்

விலை: ₹ 70